"கற்றோர்க டாமுகப்பர் கல்விதனி லாசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

விவேகசிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம். III. 1895ஸு ஜனவரிமீ இலக்கம் 9.

ஆகாயக்காட்சி.


சர்வாந்தர்யாமியாகிய கடவுளின் செயல்கள் எல்லாவிடங்களிலும் கண்டு களிக்சத்தக்கனவாயிருக்கின்றன. பூமியின்மீது விளையும் புல் பூண்டு முதலியனவற்றின் பிறப்பும், வளர்ப்பும், அவைகளின் விதரணையும் நாம் வர்ணித்துமுடியா. மனுஷிய தேகத்தின் அவயவங்களெல்லாம் அவ்வவற்றின் வேலையைக்கொஞ்சமும் விரோதமின்றிச் செய்துமுடித்து அந்த ஜீவனைக்காப்பாற்றிவரும் ஆச்சரியத்தைக்கண்டு, இந்தமூலமாய்கடவுளின்சக்தியைவியப்புடன் யோசித்துக்கொண்டிருக்கும் மகான்களுமுளர். இது முதலான விநோதங்கள் சாதாரணமாய் எல்லோரும் கண்டு சந்தோஷப்பட ஆஸ்பதமிராது. நம்மிட கண்கள் மிகவும் சிறியவஸ்துக்களுக்குள் நடக்கும் அதிசயங்களைப்பார்க்க முடியாமல் கூட பூதக்கண்ணாடிகளுடைய உதவியை அபேக்ஷிக்கின்றன.

சாதாரணமாய், நாம் அடியில்விவரிக்கும் விநோதமானது கொஞ்சம் பிரயாசையுடன் எல்லாரும் காணக்கூடியதாயிருக்கும். மேகாடம்பரமில்லாமல் நிர்மலமாயிருக்கும்போது ஆகாயத்தைப்பார்த்தால் கண்ணுக்கு எண்ணிறந்த நக்ஷத்திரங்கள் புலப்படும். அவற்றினடுவே நக்ஷத்திரேசனாகிய சந்திரபகவானையும் பார்க்கலாம். இந்தச் சந்திரன் அமாவாசையின் பொழுது சூரியனுடனிருந்து, பின்பு கொஞ்சம் கொஞ்சமாக மேற்கேயிருந்து கிழக்கை நோக்கிச் செல்லுவதை நாம் பார்த்திருக்கிறோம். இப்படி பதினைந்து நாளானால் சூரியனும் சந்திரனும் நேருக்கு நேராய் காணப்படும். அது தான் பௌர்ணமி. இன்னம் பதினைந்துநாளுக்குள் அப்படியே போய் மறுபடி அமாவாசையின் போது சூரியனுடன் மறுபடியும் வந்துசேரும். இம்மாதிரி சந்திரனுக்கிருக்கும் சஞ்சாரமானது தினப்பிரதி நடக்கும் உதயாஸ்தமனமல்லாமல் தனியாய் நடக்கிறது. கொஞ்சம் ஜாக்கிரதையாய் நாம் பார்த்தால் நாமே அறிந்து கொள்ளலாம்.

நமது ஜோதிஷசாஸ்திரிகளால் எண்ணப்பட்ட நவக்கிரகங்களில், சூரியன், சந்திரன் நீங்கலாக மற்றவைகளைமட்டும் நாமிப்போது கிரகங்களெனக் கூறுவோம். மற்றைய நக்ஷத்திரங்களுக்கும் இந்த கிரகங்களுக்கும் சில வித்தியாசமுண்டு. இந்த கிரகங்கள் மற்ற நக்ஷத்திரங்களைப்போல் ஸ்திரமாயிருப்பதாக தென்படமாட்டா. நாளுக்குநாள், இடம் விட்டிடம் மாறுவது நமக்குத்தெரியவரும். இதைத்தான் கிரகசஞ்சாரமென்பது. இத்தியாதி கிரகசஞ்சாரங்களைப்பார்க்கும் பொருட்டும், இன்னும் நக்ஷத்திரங்களுக்குள்கூடத் தெரியும் அனேக விநோதங்களைப் பார்க்கும் பொருட்டும், நமது கண்களுக்குத்தென்படாத அனேக இரட்டை நக்ஷத்திரங்கள் முதலியவற்றைப்பார்க்கும் பொருட்டும், நக்ஷத்திரங்களின் இடங்களைக் கண்டுபிடித்து அவற்றின் வித்தியாசங்களை நிர்ணயிக்கும் பொருட்டும், தூரதிருஷ்டிக்கருவிகளால் இந்நக்ஷத்திரங்களைப் பரிசோதிக்கிறார்கள். இதற்கனுகூலமாக விதம்விதமான தூரதிருஷ்டிக் கண்ணாடிகளும், குழாய்களும், கடியாரங்களும் அமைத்த கட்டடங்கள் உலகத்தில் பற்பல விடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சில கண்ணாடிக்குழாய்கள் இருக்குமிடம்விட்டு நகர்த்தமுடியா. சில கண்ணாடிகள் ஒரு பக்கமாகமட்டும் சுற்றி வரும். சில குழாய்கள் நாலாபக்கங்களிலும் சுற்றி

வரும். நமக்கு எந்தப்பக்கம் பார்க்கவேண்டிய பிரமேயமிருக்கிறதோ அந்தப்புறம் பார்க்கலாம். நக்ஷத்திரம்பார்க்கும் கட்டடங்கள் ஒவ்வொன்றிலும் இம்மாதிரி நாலாபக்கமும் சுற்றிவரும் கண்ணாடிக்குழாய்கள் சில இருக்கும். அவைகளுக்காகத் தனியாய் "டோம்" (Dome) என்று சொல்லும் குவிந்தகூரைகள் கட்டி ஸ்தம்பங்கள்மேல் சூஸ்திரபூர்வகமாய் நிர்ம்மித்திருக்கிற "ஸ்டாண்டுகள்" மீது ஏற்றியிருப்பார்கள். பக்கத்தில் ஏணிகள்வைத்து அதின்மேல் சாய்ந்த குறிச்சிகளும் படுக்கைமெத்தைகளும்கூட வைப்பது வழக்கம். இவ்விதமாய்க் கட்டப்பட்ட "டோம்" ஒன்றை இப்போது வர்ணிப்போம்.

இதோ இந்தப் படத்தில் தெரிகிற உருவத்தைப் பாருங்கள். 1-ம் படம் தூரதிருஷ்டிக் கண்ணாடி வைக்கப்பட்டிருக்கும் மண்டபம்போன்ற கட்டடத்தைக் காட்டுகிறது. மேலேவட்டமாய்க் குவிந்திருக்கும் இரதத்தின் மேல்மூடிபோன்ற பாகத்தைச்சுத்தான் 'டோம்' என்று சொல்கிறது. மேல்கூரையும் சுற்றுப் பக்கச்சுவரும் மரத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 'டோம்' என்னும் கூரையின் அமைப்பில் ஒருவிசேஷ மென்னவெனில் அது மரச்சுவற்றின் மேலேயுள்ள மரச்சட்டவேலையில் அமைக்கப்பட்டுள்ள வண்ணம் இராட்டணம்போல் சுற்றத்தக்கதாயிருப்பதே. அக்கூரையில் சொருகு கதவுமாதிரி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது பாருங்கள். அது நாம் கவனிக்கத்தக்க மற்றொரு விசேஷம். முதலாம்படத்தில் வாசல்படிக்குநேரில் அது சாற்றப்பட்டிருக்கிறவிதம் தெரிகிறது பாருங்கள். வாசற்படிக்குநேரில் இருப்பதுபோல் அதற்கு எதிர்ப்பக்கத்திலும் அம்மாதிரி சொருகு கதவிருக்கிறது. அவ்விருகதவுகளிலும் கயிறுகள்கட்டி அவற்றைப்பற்றியிழுத்தால் ஒன்றுக்குள் ஒன்று மறைந்து கூரையில் ஒருபக்கம் திறந்திருக்கத் தெரியும். இது திறந்திருக்கிறவண்ணம் இரண்டாம்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது பாருங்கள். அதே இரண்டாம் படத்தில் 'டோம்' என்னும் கூரையைச் சுற்றும்படி செய்ய அமைக்கப்பட்டிருக்கும் சூஸ்திரத்திற் சம்பந்தப்பட்ட சிறு சக்கரங்கள் தெரிகின்றன பாருங்கள். கீழே ஒரு மனுஷன் மேலேயிருந்து தொங்கும் கயிற்றைப்பிடித்து இழுக்கிறதும் தெரிகிறதல்லவா. அக்கயிற்றைப்பிடித்து இழுத்தால் மேலேயுள்ள 'டோம்' என்னும்கூரை அப்படியே அதன் அமைப்பிலிருந்தபடி சுழன்றுவரும். உள்ளேயிருக்கும் தூரதிருஷ்டிக் கருவியை எந்தப்புறம் திருப்பிப்பார்க்கவேண்டுமோ அதற்குச் சரியாக மேற்கூரையிலுள்ள திறப்புவெளி வரும் வண்ணம் 'டோமை'த் திருப்பிக்கொண்டு வானத்தில் நக்ஷத்திரபரீக்ஷைசெய்வார்கள். 2-ம் படத்தில் ஒருவர் தூரதிருஷ்டிக் கருவி வழியாய்ப் பார்த்துக்கொண்டு நிற்க அப்பால் ஒருவர் மேலேயுள்ள 'டோமை' அக்கண்ணாடிக் குழாய்க்குச் சரியாகத் திருப்பும் தொழிலிலிருக்கிறதைக் காட்டியிருக்கிறது.




1-ம் படம்.

2-ம் படத்திலிருப்பவர் கீழேயிருந்தபடி பார்த்துக்கொண்டு நிற்கிறார். அவர் மேல்வானத்தைப் பார்க்கவேண்டியிருப்பதால் கீழேநின்றுகொண்டபடி கண்ணாடிக்குழாயைத் திருப்பிப்பார்த்துக் கொண்டிருக்கிறார். வானத்தில் இன்னும் தாழப்பார்க்க வேண்டுமானால் கண்ணாடிக்குழாயின் மறுபக்கம் தாழும்படி, பார்க்கும் பக்கத்தை யுயர்த்தவேண்டும். அப்பொழுது கண்ணாடிக்குழாய் கைக்கெட்டாமலுயர்ந்து போகும். அப்பொழுது கீழே ஏணிபோட்டுக்கொண்டு அதன்மேலிருந்து பார்ப்பார்கள். அவ்வேணி

யின்மேல் குறிச்சி, படுக்கை, மெத்தை முதலிய போட்டுக்கொண்டு பார்க்கும்படி கூட அமைக்கப் பட்டிருக்கும்.

இரண்டாம் படத்தில் ஒருவர் கண்ணாடிக்குழாய் வழியாய்ப் பார்த்துக்கொண்டு நிற்கிறது தெரிகிறதே. அவருடைய உயரத்தையும் அத்தூரதிவ்ஷடிக்கண்ணாடியின் நிகளத்தையும் ஒப்பிட்டுப்பாருங்கள். அக்கண்ணாடிக் குழாய் அவரைப்போல் சுமார் மூன்றுபங்கு நிகளமிருக்குமென்று படுகிறதல்லவா. தூரதிவ்ஷடிக்கருவி இவ்வளவு பெரிதும் நிகளமுமாயிருப்பது உங்களுக்கு ஆச்சரியமாய்த்தோன்றும். ஆனால் இதையும் விட அதிகநிகளமும்பருமனுமுள்ள தூரதிவ்ஷடிக்கருவிகள்செய்து ஐரோப்பாவிலுள்ள சில பெரிய ஆகாயச்சாக்ஷி சாலைகளில் உபயோகித்து வருகிறார்களென்பது வாஸ்தவம். தூரதிருஷ்டிக் கருவியை உற்றுப்பார்த்தால் அது அனேக பாகங்கள்சேர்ந்துசெய்யப் பட்டதாகப் புலப்படும். அது வாஸ்தவமே; ஆனால் அதிலுள்ள முக்கியபாகங்கள் வெகுசொற்பமே. குழாயின் அந்தண்டைக் கோடியில் அல்லது மேல் முனையிலிருக்கும் கண்ணாடிக்கு (Object glass) 'பொருள்விளக்கி' யென்று பெயர். அக்கண்ணாடிதான் நாம் பார்க்கும் பொருள் நன்றாக விளங்கும்படி செய்கிறது. அப் பொருள்விளக்கும் கண்ணாடி இரண்டு ஒளிவட்டக் கண்ணாடிகள் சேர்ந்துள்ளது. அவற்றில் ஒன்று (flint-glass) என்னும் அதிக அழுத்தமும் கனமுமான ஸ்படிகக்கண்ணாடியாலும், மற்றொன்று (crown-glass) என்னும் ஜன்னல்களுக்குப் போடும் மாதிரியான உயர்ந்த வகைக் கண்ணாடியாலும் வட்டமாய்ச் செய்யப்பட்டு கிண்ணம் மாதிரியில் பரந்துகவிந்த மேற்புறங்களுடன் செய்யப்பட்டிருக்கும். இக்கண்ணாடித் துண்டுகள் இரண்டும் மகாசுத்தமானதாயிருக்கவேண்டியதுடன் அவற்றிற்கிருக்கவேண்டிய சரியான ரூபம் அமையும்படி செய்வதில் திருஷ்டி சாஸ்திர விற்பன்னர் தம் சாமர்த்தியத்தையெல்லாம் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இப் 'பொருள்விளக்கி'க் கண்ணாடி எல்லா லக்ஷணங்களும் பொருந்தி யிருப்பது மகா முக்கியமானதால் தூரதிஷ்டிக்கருவிசெய்வதில் சர்வலக்ஷணங்களும் பொருந்திய இக்கண்ணாடி யொன்றின் விலையே மற்றவையெல்லாவற்றையும் விட அதிகமாய்விடுகிறது. இக்கண்ணாடி அகக்கவிவு புறக்கவிவு பொருந்தச் சரியான இலக்ஷணங்களமையச்செய்திருப்பதால் இது ஒளிக்கிரணங்களைத் திரட்டி பார்க்கவேண்டிய பொருளின் பிம்பம் மற்றப்படி சாதாரணமான கண்களுக்குப் படுவதைவிடத்துலக்கமாக விளங்கும்படி செய்கிறது. இப் 'பொருள்விளக்கி'க் கண்ணாடியின் தொழில் நாம் பார்க்கவேண்டிய பொருளின் பிம்பத்தை யுண்டாக்கி அது குழாய்க்குள் விழும்படி செய்வதே. இப்படி விழும் பிம்பத்தை மற்றோர் முனையிலிருக்கும் (Eye-piece) என்னும் 'பார்க்கும் கண்ணும்'யால் நாம் பார்க்கிறோம். "கண்ணைவைத்துப் பார்க்கும் முனையிலிருக்கும் சிறு கண்ணாடியைத் தவிர குழாயினுட்புறத்தில் வேறு கண்ணாடிகளில்லை. நாம் கண்ணைவைத்துப் பார்க்கும் கண்ணாடி சிறியதாய் ஒன்றாகவாவது இரண்டு கண்ணாடிகள்சேர்ந்து அமைக்கப்பட்ட 'Eye-piece' குழாயாகவாவது இருக்கும். இது பூதக்கண்ணாடியாதலால் 'பொருள்விளக்கி'க் கண்ணாடியாலுண்டாய் விழுந்திருக்கும் பொருளின் பிம்பத்தைப் பெரிதாய் விளக்கிக்காட்டுகிறது. இப்படி தூரதிவ்ஷடிக் கருவியின் இருமுனைகளிலுள்ள கண்ணாடிகளில் ஒன்று தூரத்திலுள்ள பொருளின் பிம்பத்தைத் துலக்கமாக எடுத்துக்காட்டுவதாகவும் மற்றொன்று அப்பிம்பத்தைப்



2-ம் படம்.

பெரிதாக வெடுத்துக்காட்டுவதாகவுமாக, இரண்டும் சேர்ந்து தூரத்திலுள்ள பொருளைக் கிட்டத்திலுள்ளதுபோல் விளக்கிக்காட்டும்படி யமைக்கப்பட்டிருக்கிறது. இக்கருவி யமைக்கப்பட்டிருக்கும் விதமும் இது செய்யும்தொழிலும் ஆராய்ந்து பார்க்கப்பார்க்க அதிக அற்புதமாயும் ஆச்சரியம் விளைப்பதாயுமிருக்கின்றன. தூரதிர்ஷ்டிக்கருவியில் கண்வைத்துப்பார்க்குமிடத்தில் ஒருசிறிய பூதக்கண்ணாடிவைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னோமே. இப்படிப்பட்ட கண்ணாடி ஒரு கருவிக்கு அனேகமிருப்பதுண்டு. அவை ஒவ்வொன்றும் பல வேறுபட்ட திருஷ்டி சக்தியுடையனவாயிருக்கும். வெளியில் வாயுவிருக்கும் நிலைமைக்குத் தக்கபடியும், பார்க்கவேண்டிய ஆகாயக்காக்ஷிகளில் அததற்குத் தக்கப்படியும், பார்க்கிறவர்களுடைய கண்ணுக்குத் தக்கபடியும் இக்கண்ணாடிகளில் சரியான திருஷ்டி சக்தி பொருந்தியதைத் தெரிந்தெடுத்துபயோகிப்பார்கள்.

இக்கருவியைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இத்தனை காலம் இதையேபற்றிப் பேசிக்கொண்டிருந்து விட்டோம். படத்தில்காணும் பெரிய தூரதிருஷ்டிக் கருவியைப்போலொன்று கிடைத்தால் அதைக்கொண்டு ஆகாயக்காக்ஷியைப் பார்த்துப்பார்த்து ஆனந்தப்படலாமேயென்று இதை வாசிப்போரி லனேகர் ஆசையோடு நினைப்பார்கள். ஆம், அக்கருவி மூலமாய் ஆகாயக்காக்ஷி காண்பது அரிய இன்பம் விளைப்பதுதான். ஆனால் அக்கருவியொன்றைத் தூக்கிப் பிடித்து ஆகாயத்திலுள்ள சூரியன், சந்திரன், அல்லது நக்ஷத்திரங்களைச்சற்று நிதானித்துக்கண்ணாரக் கண்டு களிப்போமென்றால் என்ன நேரிடுகிறது பாருங்கள். தூரதிருஷ்டிக் கருவியைமட்டும் சும்மாத்தூக்கி வைத்து நிறுத்தி வானோக்கிப் பார்த்தால் காணும் காக்ஷி ஒரு க்ஷணத்துக்குமேல் கண்ணுக்குத் தென்பட்டிருக்காமல் ஓடுகிறது. ரயிலில்போகும் பிரயாணிக்கு பக்கத்திலுள்ள மரங்கள் தென்பட்டோடி மறைவது போல் வானத்தில்பார்க்கும் எப்பொருளும் க்ஷணத்தில் கண்ணுக்குப்பட்டு மறைந்துபோகின்றது. ஆம். அது வாஸ்தவம். உற்றுநோக்கினால் அவை ஓடுகிறாப்போலும் தோன்றுகிறது. பூமியிலிருக்கும் நம்முடைய கண்களுக்கு அவை ஓடுகிறாப்போல்தான் தோன்றும். ரயிலில் போகும் பிரயாணிக்கும் மரங்கள் ஓடுகிறாப்போலவே தோன்றுகின்றன. ஆனால் வாஸ்தவத்திலோடுவது மரமல்ல, ரயில்வண்டியென்பது நம் எல்லாருக்கும்தெரியும். அப்படியே சூரிய,சந்திர நக்ஷத்திராதிகளைப்பார்க்கும் பொழுது நாமும் ஓடிக்கொண்டிருக்கிறோமா என்ன? இதற்குமுன் இப்பத்திரிகையில் வெளியான 'சூரியமண்டலமும் கிரகங்களும்' என்னும் விஷயத்தை வாசித்தவர்கள் இக்கேள்விக்கு பதில் சொல்லத்தயங்கார்கள். ஆம், நாமிருக்கும் பூமி சதா தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி ஓடிவருகின்றது என்பது ஞாபகமிருக்கிறதா. இந்தியாவில் ஓடும் ரயில்வண்டிகள் ஒரு மணிக்கு 25 அல்லது 30 மைலுக்குமேல் ஓடுவதில்லை. ஆனால் நாமிருக்கும் பூமியோ ஒரு மணிக்குச் சுமார் ஆயிரமைல் விகிதமோடுகிறது. அப்படியோடுவதில் சத்தம் அதிர்ச்சியொன்று மில்லாமையால் அது நமக்குத்தெரியவில்லை. ஆயினும் அது ஒரு மணிக்கு 1,000 மைல் தூரமாகப் பறந்தோடிக்கொண்டிருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. இந்த ஓட்டத்திலிருந்து அதற்கு ஓய்வுமில்லை; ஒழிவுமில்லை. பூமி இவ்வளவு வேகமாய் ஓடுவதோடு அதிலுள்ள கட்டடத்தையும் நம்மையும், நாம் வைத்துக்கொண்டு பார்க்கும் தூரதிருஷ்டிக்கருவியையும் தன்னுடன் தூக்கிக்கொண்டுபோவதால் இங்கொன்றும் இடம்பெறாதிருக்கக் காண்கிறோம். ஆனால் வானத்திலுள்ள சூரியன், சந்திரன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் இவை பூமியோடு பொருந்தினவாயின்றி அதன்கதிக்குவேறுபட்டனவாகவேயிருக்கின்றன. ஆகையால்தான் நாம் க்ஷணத்திற்குமேல் ஆகாயத்தில் காணும் எந்தக்காக்ஷியையும் தொடர்ந்துபார்க்கமுடியாமல் எல்லாம் நம் கண்ணுக்குத் தென்பட்டு ஓடுகின்றன. இது ஒரு பெரிய உபத்திரவம்தான். ஆனால் இதற்கு ஒருவழி பண்ணலாம். ஆகாயக்காக்ஷிசாலையில் தூரதிருஷ்டிக் கருவி நிர்மித்திருக்கும் வகையை உற்றுநோக்கி ஆராய்ந்தால் அந்தச்சூக்ஷ்மம் வெளியாகும். 2-ம்படத்தில்காணும் தூரதிருஷ்டிக் கருவி கனத்த ஸ்தம்பமொன்றுகட்டி அதன்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தம்பத்தின் நுனியில் தூரதிருஷ்டிக் கருவி அமைக்கப்பட்டிருக்கும் இருப்புப்பெட்டி போன்ற ஒரு யந்திரத்தை ஆராய்ந்துபார்த்தால் அதில் ஒரு சிறு கதவுமாதிரி தெரியும். அதைத்திறந்துபார்த்தால் அதற்குள் ஒருகடியாரசூஸ்திரம் அமைக்கப்பட்டிருப்பது தெரியவரும். அக்கடியாரசூஸ்திரத்தினால் அதன்மேலமைக்கப்பட்ட தூரதிருஷ்டிக்கருவி 24-மணி நேரத்தில் ஒருவட்டம் சுற்றிவரும்படி செய்யப்பட்டிருக்கிறது. 24-மணிநேரத்தில் பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவருகிறது. அதனாலுண்டாகும் சலனத்துக்கு எதிரிடையாக தூரதிருஷ்டிக் கருவியும் 24-மணிநேரத்தில் பூமி ஓடுவதற்கு எதிர்முகமாக ஒருசுற்றுச்சுற்றி வரும்படி ஏற்பாடுசெய்திருப்பதால் பூமியினோட்டத்தாலுண்டாகு மிடமாறுதலினால் வானத்தில் பார்க்கும்பொழுதும் இடமாறுதல் நேரிடாதபடி வானத்திலுள்ள பொருள்களில் எவ

ற்றை நோக்கிப்பார்க்கிறோமோ அவை தூரதிருஷ்டிக்கருவியின்வாய்க்கெதிரேயே யிருக்கும்படியாயிருக்கிறது.

2-ம் படத்தில் டோமுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பாருங்கள். அத்துடன் சேர்த்திருக்கும் கடியார சூஸ்திரத்தினால் (Clockwork) கண்ணாடிக்குழாய் நாளுக்கு ஒருதரம் சுற்றிவரும். நக்ஷத்திரங்கள் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிப்பதற்குள் சஞ்சரிக்கும் வழியானது எப்படியும் கண்ணாடி வழியாய்ப் பார்க்க அனுகூலமாயிருக்கும் பொருட்டு கண்ணாடியுடன் கடியார சூஸ்திரத்தைச் சேர்த்திருக்கிறார்கள்.

. . . .

இவ்வளவு அற்புத சூஸ்திரங்களுடன் நிர்மித்த கண்ணாடியின் வழியாய் ஆகாயத்திலுள்ள உருவங்களைப் பார்த்துக்கொண்டு அவைகளின் விநோதத்தையும் வேடிக்கைகளையும் கண்டு ஆனந்தபூரிதராய் அன்னஹார நித்திரை துறந்து இரவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மகான்களுமிருந்தன ரென்றால் பின்னும் இவைகளின் விநோதம் சொல்லவேண்டியதில்லை.

இந்த வியாபாரத்தில் ஆஸக்திவைத்து நக்ஷத்திர பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு அனுகூலமாக நக்ஷத்திரங்களின் விதங்கள் அடியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இரட்டை நக்ஷத்திரங்கள் (Double Stars): இவைகள் நம் கண்ணுக்கு ஒன்றாய்ப் புலப்பட்டாலும், கண்ணாடியால் பார்க்கும்போது இரண்டாய்த் தெரியும். அவ்விரண்டுக்குள் ஒன்றை ஒன்று சுற்றிவருவதாய் தென்படும். சில நக்ஷத்திரங்கள் கண்ணாடியில் 3, 4 ஆகத் தெரிவதுமுண்டு (Multiple Stars.)

மாறு நக்ஷத்திரங்கள் (Variable Stars): இவை நாளுக்கு நாள் பிரகாசத்தில் க்ஷீணித்து, பிறகு விருத்தியடையும்.

வர்ண நக்ஷத்திரங்கள் (Coloured Stars): இவைகளில் சில சிவப்பும், சில மஞ்சளும், சில பச்சையும், சில ஊதா நிறமுமுள்ளவைகளாய்த் தெரியும்.

வால் நக்ஷத்திரங்கள் (Comets): இவைகள் தலையிலிருந்து விரிந்து, அகலமாய்ப் பரவியோடும். இவை எப்போதும் கண்ணுக்குத் தெரியமாட்டா. ஆனால் கண்ணாடியால் பார்த்தால் தெரியவரும்.

இதுவன்றி எரி நக்ஷத்திரங்களும் (Meteors), நக்ஷத்திரமேகங்களும் (Nebulæ), இன்னும் அநேகம் விதமான நக்ஷத்திரங்களுமுண்டு.

இவையன்றி சூரியனைச்சுற்றிவரும் கிரகங்களும் (Planets) அவற்றின் அனுசஞ்சாரிகளும் (Satellites) உண்டு. அவைகளைப்பற்றி 'சூரியமண்டலமும் கிரகங்களும்'* என்னும் விஷயத்தைப் பார்க்க விளங்கும்.

கே. எஸ். லக்ஷ்மிநரசய்யர், பி. ஏ.

* Vol. II, No. 5, p. 133.

இரண்டு சகோதரர்கள்.

XV.

ஏழுமணிக்கே தெய்வநாயகம் பிள்ளை ஆறுமுகனையழைத்து 'பையன்கள் இருவரும் தோட்டத்திற்குப் போனார்களாமே. மழைவிட்டு இந்நேரமாகியும் அங்கே என்ன செய்கிறார்களோ தெரியவில்லை. வழி நெடுக சேருந்தண்ணீருமாயிருப்பதால் வண்டியையாவது ஓட்டிக்கொண்டுபோடா' என்று ஒருதரத்திற்கு இரண்டுதரம்சொல்ல, குப்புதாய்க்கும் அவனுக்கும் உள்ள அந்தரங்க விஸ்வாசத்தால் அவன் அவள் வேண்டுகோளுக்கிணங்கி அதை இதைச் செய்பவன் போல் எட்டுமணிவரை காலஹரணம் செய்துகொண்டிருந்து அதன்பின்பு வண்டிகட்டினான். வரும்போது வண்டிக்கு, பங்களா தாழ்வாரத்தில் சவம்போல் நீட்டிவைத்திருந்த மனமோகனைத்தவிர வேறே யாரும்கிடைக்கவில்லை. முத்துசாமி மாசிலாமணியை வீட்டுவரைக்கும் அழைத்துக்கொண்டுவந்து விட்டு ராத்திரிப்பொழுதுக்கு எச்சரிக்கையாய்மட்டும் இருக்கும்படி சொல்லிவிட்டுத் திரும்பினான். மாசிலாமணி வீட்டுக்குள் நுழைந்து தன் பள்ளியறைக்குச்சென்றபோது வண்டியும் நாலைந்துவீடுகளுக்குப்பால் வந்துகொண்டிருந்தது. அப்போது அவ்வறையில் விளக்கின்றி இருட்டில் ஆள் இன்னான் என்று தெரியாமலும்; இவன் கண்டிப்பாய்க் கொலையுண்டு இறந்திருப்பான் என்று குப்புதாய்க்கு முழுநம்பிக்கையாயும் இருந்ததினால் அவள் யாதொருகளங்கமும் வையாமல் இவனைப்போய் ஆசையுடன் அணைத்துக்கட்டிக்கொண்டு 'என் கண்ணா! என்ன செய்தி. அப் பாவி மண்ணில் மறைந்தானோ அல்லது மறுபடியும் திரும்புவானோ' என்று வினவ, இவன் யாதொன்றும் பேசாமல் சற்றுநேரம் மௌனம் சாதித்துக்கொண்டிருந்து பின்பு 'உன் தாலி உறப்பாயிருந்தால் வருகிறான்போ பயப்படவேண்டாம்' என்று பதில் சொன்னான். இச்சொற்கள் அவள் அடிவயிற்றில் நெருப்பையெடுத்துக் கட்டினதுபோல் மனம் திக்கென்று எடுத்துப்போட்டது. அவளுக்கும் ஆத்திரம் பாவம். அவளைப்போய்ச் சொல்வானேன். நாமும் ஒரு காலத்தில் அம்மாதிரியாகத்தான் இருந்திருப்போம். ஒருவருஷம் இரண்டு வருஷம்படித்துப் பரிட்சை கொடுத்துவிட்டு 'ஸெனெட்ஹாலில்' பலகைபோடும் அன்றைக்கு ஒருவர்மேல் ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு என்ன பாடுபடுகிறோம். அவளும் நம்மைப்போல் நேற்று முந்தாநாளாயில்லாமல் வருஷம் முன்னூற்றியறுபது நாளாய் இதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தவள்தானே.

இதற்குள் வண்டியும் தெருவாசலில் வந்துநின்றது. அதில் 'அசோ! உசோ' என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டு கீழும்மேலும் புரண்டுகொண்டுகிடந்தவனை, வண்டிக்காரன் மெதுவாய் இறக்கி ரேழியில் கொணர்ந்துவிட்டான். அவனுடைய அலங்கோலஸ்திதியைக்கண்டு இதற்குக் காரணம் யாதென்று வினவ எல்லோரும் வெகு ஆவலாய் முன்வந்தார்கள். ஆனால் குப்புதாயும் மாசிலாமணியும் அந்த அறையைவிட்டு அப்புறம் அசையவேயில்லை. அவள் முதலில் அன்பாய் முத்தங்கொடுத்து அணைத்துக்கொண்ட இவனை துன்பத்தோடு நழுகவிட்டு பித்தம் பிடித்தவள்போல் நின்று, மனமோகன் 'யாரோ திருடர்வந்து என்னை யிப்படி அலங்கோலப்படுத்திவிட்டு நகைநட்டுகள் யாவையும் உரிந்துகொண்டு போய்விட்டார்கள்' என்று சொல்லும்மட்டும் ஆத்திரப்படாமல் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்து, உடனே (மற்றசங்கதி அவன் வாயினின்றும் வெளிவராமுன்னமே) மாசிலாமணிபேரில் யாவருமறிய அபாண்டமான பழியைச்சுமற்றி வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு தலைவிரிகோலமாய் நடுத்தெருவே புறப்பட்டு விட்டாள்.

அந்நேரத்திற்கெல்லாம் சந்திரோதயமும் ஆயிற்று. அவள் எங்கேயும் நில்லாமல் பைத்தியக்காரிபோல் வாயில்வந்தபடி வைதுக்கொண்டு நேரே தாங்கலுக்கு வழிபிடித்து ஓடலாயினள். அதைக்காணவே யாவரும் பயப்பிராந்தியடைந்து 'இனி சும்மா யிருந்தால் ஒருக்கால் வீண் அபவாதம் விளையும். அவளைப்போய் மடக்கி இழுத்துக்கொண்டு வருவோம் வாருங்கள்' என்று கும்பலாய் அவள் பின் தொடர்ந்தார்கள். கும்பலைக்கண்டு அவள் இன்னும் விசையாய் ஓட ஆரம்பித்தாள். தாங்கலுக்குள் போகாததன் முன்னர் அவளைப்பிடிக்க யாராலும் முடியாமற்போயிற்று. ஜலம் பெருவிரலிற் பட்டபோதே புடவையை மேலேதூக்கிக்கொண்டனள். இதைக்கண்ட ஒருவன் 'எல்லோரும் சும்மாயிருங்கள். தாங்கலில் கழுத்தளவு தண்ணீருக்குமேலே இல்லை. நிச்சயமாகவே இவள் உயிரைமாய்த்துக்கொள்ளத் துணிந்தால் அதற்கு ஏரி எதிர்வாய்தானா தக்க இடம். சமீபத்தில்வேறே குளங்குட்டை கிடையாதா? கொஞ்சம் நீளவிட்டுத்தான் பார்க்கலாமே' என, தெய்வநாயகம் பிள்ளை முதல் சிலர் 'ஆனால் கொஞ்சநேரம் பொறுங்கள்' என்று சொல்லிக்கொண்டு அவளையே கூர்ந்துபார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜலம் பெருவிரலுக்கு மேல் புறங்கானுக்கேறினபோது புடவை கணுக்காலுக்கும், கணுக்காலுக்குப் போனபோது முழங்காலுக்கும், முழங்காலுக்குப் போனபோது தொடைக்கும் இப்படி படிப்படியாய் உயர்ந்துகொண்டே போயிற்று. ஒருவன், 'சாகப்போகிற இவளுக்குப் புடவையைப் பற்றி என்னவிசாரம். இனி போகப்போக அதற்கு அந்தஸ்தும் ஏற்பட்டு மூட்டையாய் தலைக்குமேலேறி உட்காரும் போலிருக்கிறதே' என்றான். மற்றொருவன், 'அந்தமட்டும் பரவாயில்லை. தண்ணீரில் விரைவாய்ச்செல்ல முடியாதென்று நினைத்துத்தான் புடவையைத் தூக்கிக்கொண்டுபோனால் வேண்டாமென்கிறாயோ. யாராவதுபோய் இழுத்துக்கொண்டு வருவதுதான் யுக்தம்' என்றான். வேறொருவன் 'அவசரப்படவேண்டாம். எல்லாம் இன்னும் கொஞ்சத்தில் தானிருக்கிறது' என்றான். சங்கேதப்படியே தொடையளவு தண்ணீரிற்போய் திரும்பிப்பார்த்து, யாரும் பின்பற்றிவராததுகண்டு இனி வீண் பிகுவுசெய்வதில் பிரயோசனமில்லையென்று வெலவெலென்று நின்றுவிட்டாள். அப்போது கரைக்கும் அதற்கும் அரைபர்லாங்கு தூரமிருக்கும். சிலர் கொல்லென்று கைதட்டி சிறித்தார்கள். பிறகு தெய்வநாயகம் பிள்ளை 'இங்கே ஏன் காக்கவேண்டும். நீதான்போய் இழுத்துக்கொண்டுவா' என்று ஒருவனையனுப்ப அவன் சென்று அவளைப்பிடித்துக்கொண்டு 'என்னடியம்மா நீயே போகும்போது இந்த புடவையிருந்து ஆரைக்காப்பாற்றப்போகிறது. இவ்வளவுதூரம் வந்ததுவந்தாய். அடையாளத்திற்கு உன் அருமையான புடவையோடு நீயும் ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத்தான் எழுந்திரேன்' என்று தண்ணீரில் ஒரு அமுக்கு அமுக்கியிழுத்துக்கொண்டுவந்து கரைசேர்த்தான்.

தெய்வநாயகம் பிள்ளை சாமானியமானவரல்ல.

"மகன்றந்தைக்காற்றுமுதவியிவன்றந்தை
யென்னோற்றான்கொல்லெனுஞ்சொல்"

என்றபடி சிறுவயதிலேயே, 'இவனைப்பெற்ற இவன் தாய்தந்தையர் என்னநோன்பு நோற்றாரோ' என்று எவரும் சொல்லுமாறு தந்தையினும் சிறந்து விளங்கினார். அசத்தியம், அதர்மம், தயையின்மை, பிறர்பொருள் வெஃகல், துராசை, பொறாமை, கோபம் ஆகிய இவைபோன்ற தீயகுணங்கள் அவரிடத்தில் எந்நாளிலும் கிடையா. அவருடைய பெருந்தகைமையையும் ஒழுக்கத்தையும் செவ்வையாய் அறிந்தவர்களுள் அவரை மெச்சாதவர்கிடையாது. அவ்வூரில் கிராமப் பொதுவிஷயத்திலேனும், கூட்டக்கூட்டு விஷயத்திலேனும் அவர் கருத்திற்கு விரோதமாகயாதொன்றும் நடப்பதில்லை. சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களிலெல்லாம் கூட அவரவர்க்கும் ஏதாவது வழக்கு நேருங்கால் உபய தரப்புவாதிகளும் அவரையே மத்தியஸ்தராய்க் கோரிக்கொண்டு அவரிடம் நடையாய் நடப்பார்கள். இன்னும் கேட்கப்போனால்

நல்வழியில் அவர் நாவசைந்தால் நாட்டசையும். ஏதோ கர்மவசத்தால் முதன் மனைவியிறந்துபோய் தரங்கவதியை மணம் புரிந்த பின்பு தான் அவர் கீர்த்திக்குக் கொஞ்சம் இடைஞ்சல் உண்டாயிற்று. போதாக்குறைக்கு குப்புதாய் அஷ்டமத்துச் சனியனைப்போல் வந்து தொடர்ந்தாள். காலமெல்லாம் புகழுடம் பெடுத்துக்கொண்டு செவ்வையாய் வாழ்ந்திருந்து, விருத்தாப்பிய காலத்தில் இந்த தலையிறக்க முண்டாயிற்றே என்று மனங்கசிந்து, எல்லாரும் வீட்டுக்கு வந்தபிறகு, அவளை 'அடிபாதகி! உனக்கு வந்த போங்கால மென்னடி, ஊர்பேரைக்கெடுக்க ஏண்டி இந்தவல்லடி வழக்காடுகிறாய்?' எனக்கேட்டார். இதைசகேட்க அவள் மனந்தாளவில்லை. தொட்டுத் தாலி கட்டியகணவன் கூட எந்நாளிலும் அவளிடத்து இத்தனை துணிவாய் இந்த ஏகவசனத்தைப் பிரயோகித்தறியான். மேலும் மாமனாரிடத்து அவள் வைத்திருக்கிற மரியாதையும் பயபக்தி விஸ்வாசமுந்தான் இத்தன்மையதென்று நாம் முன்னமே அறிந்திருக்கிறோம். 'கொண்டவன் சலுகையுண்டானால் குப்பையேறிச்சண்டையிடலாம்' என்ற பழமொழிப்படி நடக்கும். அந்தப் படியைக்கடந்து அதற்கும் மேற்றுறையில், அவள் விஷயத்திற் செல்லாம் கணவனே (வகாலத்து வாங்கிக்கொண்டு) வகீலாக முன்னின்று பேசவிருக்க, அவளுக்கு நிகராக யாரைச் சொல்லக்கூடும். ஆனால் (அச்சமயம் மனமோகனும் கிட்டவிருந்தும்) அவன் பாயும் படுக்கையுமாய் அவஸ்தைப்பட்டுக்கொண்டு கிடந்ததால், அவள் 'முற்ற நனைந்தவர்க்கு ஈரமில்லை. முழுதும் கெட்டார்க்குத் துக்கமில்லை, ஆதலால் வருகிறது வரட்டு'மெனத் துணிந்து 'வல்லடி வழக்கைச் சொல்லடா மாமா' என்று அவர் மடியில் கைபோட்டுக் கொண்டாள். அந்தோ பரிதாபம்! அவர் பலத்திற்கு அவளைவீசி உதர எண்ணங்கொண்டால், அவள், முன்னால் அனுமார் உடலில் லட்சக்கணக்காய் வந்துதைத்த இந்திர சித்துவின் கணைகள் நொடிப்போதில் எவ்வாறு பறந்தனவோ அந்த கெதிதான் அடையநேரிடும். அப்பேர்க் கொத்தவ்ராயிருந்தும், கால்கைகள் யாவும் விடவிட வென்றுதர 'ஐயோ! இவள் என் பிராணனைவாங்க வந்த ராட்சஸியோ' என்று ஐம்புல உணர்ச்சியும் அடங்கினவர்போல் அப்படியே சாய்ந்து மூர்ச்சையடைந்தார்.

அவள் துணிவை என்ன வென்றுரைப்போம். பிடித்தபிடியை சாதிக்கும் பொருட்டு மெய்வருத்தம் பாராமலும், பசிநோக்காமலும், கண்துஞ்சாமலும், அவமதிப்பைக் கருதாமலும் போனால்தான் போகட்டும்; அதற்காகச் சிந்திப்பாரில்லை. பிணமாய்க்கொணர்ந்து நீட்டிவைத்திருக்கிற புருஷனையும் எறிட்டுப்பாராமல், கண்டவர் காறித்துப்ப, கொண்ட கருமமே கண்ணாயிருக்கும் பெண்டிருமுண்டா? சுவற்றை வைத்துக்கொண்டன்றோ சித்திர மெழுதல் வேண்டும். அவன் அப்படியே ஒருக்கால் நெடுந்துயில் கொள்வானாயின், இலவு காத்தகிளிபோல் ஏங்கி முகம் வீங்கி ஜீவனாம்சத்திற்கு கோர்ட்டுக்குத் தானே போகவேண்டும். இவளைப்பற்றி எமது அவா அடங்குமட்டும் இங்கே வரையப்புகின், நல்ல ஆசாரத்திலும், சத்தியத்திலும், நல்ல கல்வியிலும், நிதானத்திலும் வழக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு இதை வாசிக்க அருவருப்பாய் இருக்கு [illegible]றஞ்சி இம்மட்டில் விடுத்தோம்.

அண்டை அயலிலுள் [illegible]ரீகள் அவளை வைது தூர இழுத்துக்கொண [illegible] அவர் சிறிது நேரம் கழித்து எழுந்திருந்து இ [illegible] நான் பிழைத்த பிழைப்பும், எடுத்தபேரும் பெருமையும் இன்றோடே அற்றுப்போய் நாயிலும் கடைகெட்டவனாயினேன். இனி நானுண்டு என்னுடைய தலைவிதியுண்டு என்று சொல்லிக்கொண்டே தெருவாசலுக்கு வந்து 'அவனை எங்கேகாணோம். அவன் எந்தவழியைப் பிடித்துக்கொண்டு எங்கேபோனானோ தெரியவில்லையே' என்று சுற்றும் முற்றும் பார்த்தார். உடனே சிலர் மாசிலாமணி! மாசிலாமணி!! என்று கத்திக்கொண்டு வீடுமுழுவதும் தேடினார்கள். இங்கே இல்லாததுகண்டு மூன்றாம்வீடு நாலாம்வீடுகளிற் பார்த்தார்கள். வீடுவீடாய் கடைசியில் ஊர்முழுவதும் தேடிப்பார்த்தாய்விட்டது. இதற்குள் முத்துசாமிக்குச் செய்திதெரிந்து அவனும் தேடப்புறப்பட்டுவிட்டான். ஊருக்குள் எந்தவீட்டிலும் இல்லையென்று நிராசைசெய்துகொண்டு அவ்வூருக்கு உள்ளும் வெளியிலும் உள்ள கிணறு, குளம், குட்டை, வாவி, பள்ளம், படுகுழி, தோட்டம், துறவு, மரம், செடி, புதர் முதலிய யாவற்றிலும் அந்த ராத்திரியிலேயே ஆராய்ந்துபார்த்து ஆசையை ஒழித்து, வீடு மொத்தத்திற்கும் ஏதோ அநர்த்தம் வந்திருக்கிறதென்று தெய்வநாயகம்பிள்ளை புரண்டு புரண்டு அழத்தொடங்கினார்.

எவ்விதத்திலேனும் இவன் ஒழிந்தால் போதுமென்று நினைத்துக்கொண்டிருந்த மனமோகனுக்கும் குப்புதாய்க்கும் அவர் அழுகை ஆநந்தத்தைக்கொடுக்கத்தக்கதாயிருந்தது. 'அவன் அங்கங்கே பந்துக்கள் சிநேகிதர்களிடம் தவிர வேறெங்கேயும் போயிருக்க மாட்டன். ஆட்களையனுப்பி விசாரித்தால்தெரியும். எப்படியும் அவன் கண்டிப்பாய் திரும்புவான். நீங்கள் அதைரியப்படவேண்டாம்' என்று யாவரும் ஒரு

மனம்போல் சொல்லி அவருக்குக் கொஞ்சம் திடசித்தமுண்டாகும்படி செய்தனர்.

சமுசயப்பட்ட விடத்திற்கெல்லாம் ஆட்களைத் தயார்செய்தனுப்பி, பார்த்துக்கொண்டுவரச் சொன்னார். போலீசில் எழுதிவைத்தார். சிலவிடங்கட்குத் தந்திகொடுத்தார். ஒருநாளாயிற்று, இரண்டுநாளாயிற்று. ஆங்காங்குமிருந்துவரும் ஒவ்வொரு பதில் செய்தியும் அவர் மனதில் கொதித்தெரியும் துயரமாகிய நெருப்புக்கு ஒவ்வோர் கரண்டிநெய் கொணர்ந்து வார்ப்பதுபோலிருந்தது. கடைசியில் எதுவும் அவர் விடாய்தணித்து மனதைக்குளிரச்செய்ய நன்னீர் மூகந்துகொண்டு... ல்லை.

மூர்க்கரை மூ... துபோல், குப்புதாய் சொல்லை நம்... மாமணியைத் தூஷித்தாரெனினும் எ... தை எள்ளளவும் நம்பவில்லை. இதற்குக்காரண... றவேண்டியது ஆவசியகமன்று.

"நேசரைக்காணாவிடத்து நெஞ்சாரவேபுகழ்தல்
ஆசானையெவ்விடதது மப்படியே—நேச
மனையாளைமஞ்சத்து மைந்தர்தமைமனதில்
வினையாளை வேலைமுடிவில்."

என்றபடி, அவன் சீர்திருந்துவதற்பொருட்டு அவர் அவனிடத்தில் பட்சமில்லாதவர்போல் நடித்துக்கொண்டுவந்தும், தனக்கு இருவரில் அவன்தான் சற்புத்திரன் என்று நினைத்து மகிழ்ந்திருந்தார். 'ஐயோ என் உயிரே! என்னையிப்படி நாய்க்கும், நரிக்கும், பேய்க்கும், கூளிக்கும் இறையாக்கிவிட்டு நீ எவ்விடம் போனையோ' என்று சோர்வார். 'உனமங்களமான மனசும், பொறுமையும், நிதானமும், வாக்குநலமும் இந்தத் தீயோரிடத்தில் பெருமையடையாமல், நீ உபயோகமற்றவனாய்த் திரியநேரிடுமென்று நினைத்து, தக்கஇடம் பார்த்துக்கொண்டு அங்கேசென்றாயோ' என்று கண்ணீர் பெருக்குவார். 'யமதூதன் கையிற் சிக்கி நரகக்குழியில் வேதனைப்படுவதுபோல், என்னை இந்தப் பாவிகள் வசத்தில் ஒப்பித்துவிட்டு நீமட்டும் தப்பித்துக்கொண்டுபோவது உனக்கு தர்மமோ' என்று நடுங்கிவிழுவார். 'பொன்னாசையுள்ளவர்க் குறவேது புகழேது? ஆதலால் இந்தப் பொன்னும் பொருளும், மண்ணும் மயிரும், ஆஸ்தியும் பாஸ்தியும் இவர்கள்தான் அனுபவித்துக்கொண்டு நூறு ஐம்பது வாழட்டும் என்று, இந்த லோகவாழ்க்கையைவெறுத்து, பரலோக சாம்பராச்சியத்தையடைய உன்னி சாதுசங்கத்தோடுபோய்ச்சேர்ந்தையோ' என்று துவளுவார். 'எதற்கும் உன்னை நம்பியிருந்த என்னை நட்டாற்றில் கைவிட்டுப்போக நான்செய்த தீவினை யாதோ' என்று கருத்தழிவார்.

மறுபடியும், ஜாதகத்தை எடுத்துவைத்துக்கொண்டு கணக்குப்பார்த்து 'இன்னும் பதினாறுவயது சரியாய் நிரம்பாத நீ பரதேசியாய்ப்போக பாவிபிரமன் உன் தலையில் விதித்திருந்தானோ' என்று தெய்வத்தை நிந்திப்பார். 'பொழுதுபோனால் துணையின்றி தெருவுக்குவரப் பயப்படும் நீ அந்த அர்த்த ராத்திரியில் எவ்விதம் மனதைத் திடப்படுத்திக்கொண்டு தனி வழி நடந்தையோ' என்று சிந்தைகுலைவார். 'ஒருக்கால் நீ எங்கே காணப்பிணமாய் மாண்டையோ' என்று கதறுவார். 'ஆ தெய்வமே! என் விருத்தாப்பிய காலத்தில் என் கண்ணையிழந்து மதிகலங்கி இந்தத் துன்பத்திற்காளாக நான் யாரை வயிறெரியக் கண்டேனோ? எந்த சதியையும் புருஷனையும் ஒத்து வாழவொட்டாமற் செய்தேனோ. யாரைப்பழித்தேனோ. யார்கூறையில் தீவைத்தேனோ. யார் வாய்ச் சோற்றில் மண்ணைப்போட்டேனோ. யார் குடியைக் கெடுத்தேனோ. தாய்க்குப் பிள்ளையில்லாமற்செய்தேனோ. எவள் தாலியறுக்கக் கண்டேனோ' என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொள்வார்.

இப்படி ஒருவாரம் வரையில் சரியான ஊண் உறக்கமின்றி அல்லும் பகலும் கண்ணீரும் கம்பலையுமாய் ஒருநாளை ஒருயுகம்போல் தொலைத்துக் கொண்டிருக்கையில் இதற்குள் ஆங்காங்கு மிருந்து சுற்றத்தாரும் சிநேகிதரனைவரும் வந்துசேர்ந்தார்கள். அவர்கள் யாவரிடத்தும் 'இனி நான் இவ்வீட்டில் என் பிராணன் போகும்போது கூட நீரும் அருந்தமாட்டேன். நான் செத்தபின்பும் என்னருகிலும் வரவொட்டாமல் என்னுடலைப் பாதுகார்த்து தகன சமஸ்காரம் செய்யப் பிரார்த்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டு குப்புசாமி பிள்ளையுடனே சென்னப் பட்டணத்திற்குப் பிரயாணமாயினர்.

(இன்னும்வரும்.)

நே. சீதாராம நாயுடு.

ஆபத்துக்கிடமான அபவாதம்
அல்லது
கமலாம்பாள் சரித்திரம்.

XXXII.

ஸ்ரீநிவாசன் லெட்சுமிக்கு வடக்கே ஹிமோத்பர்வதத்தைப்போய்ப்பார்த்து வரவேண்டுமென்ற ஆசை. உலகத்திலுள்ள மலைகளெல்லாவற்றிற்கும் பெரிதாய் பயங்கரமான காம்பீரத்துடன் சிருஷ்டியின் காட்சிகளில் ஒன்றாகி மகோன்னதமான வைபவத்தோடு விளங்கா நிற்கும் தேவர்கள் வசிக்கத்தக்க ஹிமாலயத்தைக் கண்குளிரக்கண்டுவர அவ்விருவருக்கும் அதிக ஆசை. ஆனால் சமயம் சரியாக இல்லை. ஆயி

னும் அ...
பெருமையுட...
மயிரடர்ந்த சிம்ம... போலவும் ...
பம்போலவும் மலைக்குணம் நிரம்பிய ம...
வும் காம்பீரியமான கதியுடன் அரசன் பவன...
ஞற்போல் ஊரூரும் சென்று கடலில் கலக்கும் க...
வுள் நதியாகிய கங்கையைக்கண்டு அவர்கள் தங்களை ஒருவாறு திருப்திசெய்துகொண்டார்கள். 'மணல் வீடுகட்டி அதினடுசோற்றை யுண்டுண்டு தேக்குசிறியார்கள்போல' அற்பவிஷயங்களில் ஆயுள்களைச்செலவிட்டு 'உவளகந்தனதாக' உயிரை ஒடுக்கும் சிறியோ ...ாகிய நாம் நம்முடைய எல்லையைக்கடந்து கடல் ...ற்று மேகம் சூரிய சந்திர நட்சத்திராதிகள் முதலிய பெரிய வஸ்துக்களுடன் மனங்கலந்து உறவாடுவதே இவ்வுலகில் ஒரு பெரும்பாக்கியம் அல்லவா! கமலாம்பாள் முதலிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து இரண்டு மூன்று நாளுக்கப்பால் கடைசி கடைசியாய் கங்காநதியின் வெண்மணலில் வெண்நிலவில் வெண்பொங்கல் முதலியவைத்து விருந்தாடிப்பின் **சிறுகுளம்** நோக்கி எல்லாருமாகப் புறப்பட்டார்கள். உத்தரப்பிரதேசம் தாண்டி தட்சிணம் வந்தவுடனே தந்திமூலமாய் யாவையும் அறிந்திருந்த சப்-மாஜிஸ்திரேட்டு வைத்திநாதய்யர் அவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். அவர்கள் வந்து சேருமட்டுமாவது உயிர் தரித்திருக்கவேண்டுமென்பதுதான் அந்தப் பிரபுவின் கோரிக்கை. 'காதலொன்றீதுமோர் கள்ளின்தோற்றமே' என்றபடி ஆசைப்பெருக்கால் தன் நினைவுகூட இன்றி கண்டோர் யாவரிடத்தும் முத்துஸ்வாமியய்யர் வருகிறார் முத்துஸ்வாமியய்யர் வருகிறார் என்று சொல்லி முற்காலத்தில் ராமனை எதிர்பார்த்த பரதன்போல் வேதியரையும் தாதியரையும் தன்னையும் தொழுதுகொண்டிருந்த அவர் ஊருக்கு ஒரு மைலுக்கப்பாலேயே பல்லக்குகள் பூர்ணகும்பங்கள் மேளவாத்தியங்கள் சஹிதம் அவர்கள் வருகிறசெய்திகேட்டுக்காத்திருந்தார். சிறுகுளம் முழுவதும் ஆண்பெண் அடங்க அவ்விடத்தில் கூடியிருந்தது. முத்துஸ்வாமியய்யரும் சச்சிதானந்த சுவாமிகளும் இரண்டு பல்லக்கில் எழுந்தருளினார்கள். மற்றவர்கள் குதிரைவண்டிகள் முதலிய வாகனங்களில் ஏறினார்கள். ஜம் ஜம் ஜம் என்று மங்களவாத்தியங்கள் முழங்கின. அம்மையப்பபிள்ளை மாத்திரம் ஒரு குதிரையில் ஏறினார். அக்குதிரை வாத்திய கோஷத்தைக்கேட்டு வெருண்டோட பிள்ளையவர்கள் அதனுடன் கௌரதையாய் யுத்தஞ்செய்துபார்த்துக் கட்டாமல் கூ கூ என்று கூக்குரலிடத்துவக்கினார். பிறகு அவருக்கும் அவர் வாகனத்துக்குமுள்ள வழக்கைத்

...
தார்க...
தாமதம்,

ஆர்த்தன ...
ஆர்த்தன நா...

பம்பம் என்று சங்கத்தொனியு...
பேரிகை ஒலியும் ஜம ஜம என்ற தாளங்க...
யும் தாம் தாம் என்ற மத்தள ஒலியும் மே...
தியத்தின் ஓசையும் பாண்டுவாத்தியத்தின் ...
யும் வேதியர்கோஷமும் அந்தணர் ஆசியும் ஆ...
மான உற்சவகோலாகலத்தை உண்டுபண்ணின. ...
வித உற்சாகத்துடன் ஊரைவலம்வந்து யாவ...
தத்தம் விடுதிகளில் சேர்ந்தார்கள்.

ஜனநெருங்கிய காசியையும் கங்கையையும் மற...
சிறுகுளமென்ற கிராமத்தில் சிலகாலம் நாமும் ...
குவோம். அவ்வூர் அக்கிரஹாரம் கோயில் கு...
நதி தோப்புகள் மந்தை மந்தையின் ஒற்றை...
கொல்லன்பட்டரை குத்துக்கல் அரசந்தட்டு ம...
பாறை முதலிய கிராம சின்னங்கள் யாவற்றையு...
நாம் மனதுக்குக்கொண்டுவந்து நம் மனோபலத்தா...
சிறுகுளத்தை சிருஷ்டிசெய்து அதில் சற்றுவசி...
போம். சுவாமிகள் முத்துஸ்வாமியய்யரை இல்...
றத்துறவிலிருத்தி ஆசீர்வதித்துக் காசி சென்றார்.
பொன்னம்மாளுடைய நிலைமையை முத்துஸ்வாமியய்யர் கண்டு பரிதபித்து அவள் நிமித்தம் கடவுளை வேண்ட அவளுக்கு சித்தம் ஸ்வாதீனப்பட்டிருக்கிறது என்று வதந்தி. ஏதோமுன் இருந்ததற்கு இப்பொழுது தெளிவு என்பதற்கு ஐயமில்லை. 'பாப்பா வெட்டியகத்து வெட்டரிவாள்' என்ற நாணிப்பாட்டி நெடுநாள் வியாதியால் வருந்தி இறந்தாள். சங்கரியம்மாள் கமலாம்பாளுடைய வாழ்வைக்கேட்டு மனம் பொறுது கிணற்றில்விழுந்து மரித்தாள். சுப்பம்மாள் கணவனையிழந்து உபாதானமெடுத்து வயிறு வளர்க்கிறாள். அவளுக்குக் கண் ஒன்று அவிந்து போய்விட்டது. ஈஸ்வரதீட்சிதர் குஷ்டவியாதியால் வருந்துகிறார். முத்துஸ்வாமியய்யர் இவ்விருவரும் தனக்குச்செய்த பெரிய உபகாரத்துக்காக அவர்களுக்கு மிகவும் வந்தன முள்ளவராயிருக்கிறார். சுப்பம்மாளுடைய ஜீவனத்துக்காக கொஞ்சம் நிலம் விட்டிருக்கிறார். தீட்சிதருக்கும் அடிக்கம...

ன்
நதத்தை
மறுமொழி கூறு
வவுலக இன்பங்களைப்
திகள் வேறு ஒன்றுமில்லை. நம்
ஜஸ்வரூபத்தை நம்மிடமிருந்து மறைத்து
வரும் நெற்குவியலிலும் இன்றுள்ள பிடிவிதை
தென்று விழுங்கி வீணே நாள்கழிக்கும் 'நீக்ரோ'
கியாரைப்போல நாம் நாளை அடையக்கூடிய பிரம்
னந்த சுகத்தைமறந்து இன்றுள்ள சிற்றின்பத்தில்
ழுகி மயங்கும்படி நம்மைச்செய்கின்ற அற்பமா
அநித்தியமாயும் பயனற்றவும் தமோகுணசம்
ந்தமாயும் துக்ககரமாயும் அசுரகுண சுவரூப
யும் நமக்கும் பிறருக்கும் ஜனனமரண சம்சார
கிய அனர்த்த பரம்பரைக்கு ஹேதுவாயும் உள்ள
வ்வுலக இன்பங்கள் உயர்ந்தோரால் விரும்பற்பால
வன்று. இங்கற்றவர்க்கு அங்குண்டு என்றபடி
ன்பமே ஒருபெரிய மோட்ச சாதனமாயிருக்கிற
தாதலால் தனவானுடைய தனத்தையும் ரூபவானு
டைய ரூபத்தையும் போகத்தில் உல்லாசமாய்க்களித்
திருப்பவரதுபோகத்தையும்கண்டு நாம் பொறாமை
கொள்ளாது அவர்திற்கு ஆளாயிருப்போருக்கிரங்கி
துன்பரூபமாக கடவுளது அனுக்கிரகத்தைப்பெற்றோ
ரைக்கண்டு கைகூப்புவதே இரஹஸியமான தத்துவ
வழியாம். இதுநிற்க.

ஸ்ரீநிவாசனும் லெட்சுமியும் ஆனந்தமாகவேயிரு
க்கிறார்கள். அவர்களுடைய இன்பம் தாழ்ந்த சிற்
றின்பமல்ல. ஒருநாள் சிறுகுளத்திலிருக்கும்பொ
ழுது சாயந்தரம் ஸ்ரீநிவாசன் கொல்லைப்புறத்துள்ள
தோப்புக்குள் சென்றான். அஸ்தமனசமயம் ஆன
தால் சூரியனுடைய மெல்லிய ஒளி பரவி எங்கும்
பொன்னிறமாயிருந்தது. ஸ்ரீநிவாசன் அந்திப்பொழு
தின் ஆனந்தமான சாந்தத்தைக்கண்டு களிப்புற்று
தோப்புக்குள் சென்றான். அங்கு ஓர் அழகிய அரச
மரத்தில் திவ்வியமான மல்லிகைக்கொடி ஒன்று
அன்பாய்ச் சுற்றிக்கொண்டு அபரிமிதமான புஷ்பங்
களை ஏந்தி நின்றது. அதைக்கண்டு 'பண்டிதன் கொடி
ஸ்திரீ ஆகிய மூவரும் ஆஸ்ரயமன்றித் தனித்து
வி... ள்' என்ற வாக்கியம் ஞாபகத்துவர அவன்
...க்தையும் யௌவனத்தையும்

அப்பூங்கொ
...ம் மிருதுத்தன்
...பசம்பத்தையு... மனோக்கியமான
...த்தையும் அது அவ்வரசமரத்தை நம்பி
...த்து அன்பாய்த்தழுவி அலங்காரமாய் நின்ற
காட்சியையும் கண்டுபரவசப்பட்டு நின்றான். லெட்
சுமி அவனை அங்குமிங்கும்தேடிக்காணாது தோப்புப்
பக்கம்வர அவன் மயங்கிநிற்பதைக்கண்டு சந்தடிசெய்
யாது அணுகி அப்பூங்கொடி அரசமரத்தைத்தழுவி
நின்றதுபோல் தானும் அன்பாய் அவனைத்தழுவி நின்
றாள். தழுவவே ஸ்ரீநிவாசன் திடுக்கிட்டு திரும்பி அவ
ளுக்கு ஒருமுத்தம்கொடுத்தான். லெட்சுமி அரசமரத்
தைக் குறிப்பாய்ப்பார்த்து தன் நாயகனையும்பார்த்து
முறுவலித்தாள். ஸ்ரீநிவாசன் பூங்கொடியை நோக்கித்
தன் நாயகியையும் நோக்கிப் புன்னகைசெய்தனன்.
அப்படி நிற்கும் பொழுதேபடீலென்று பல மல்லிகை
மொட்டுகள் கண்திறந்து மலர்ந்தன. மலர்ந்ததைக்
கண்டு ஸ்ரீநிவாசன் 'உன்னைக்கண்டதில் அக்கொடிக்கு
என்ன ஆனந்தம்பார்! என்று பரிகாசம் செய்தான்.
அதைவிட்டு அப்பால் சிறிதுதூரம் செல்ல அவர்கள்
ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தைக் கண்டார்கள்.
அது வானுற ஓங்கி வளம்பெறவளர்ந்து ஏராளமான
விஸ்தாரமுடையதாய் அனேகமான கொடிகளைக்
கீழேவிட்டு அனேக ஸ்தம்பங்களும் மண்டபங்களும்
நிறைந்த ஒரு பெரிய ஆலயம்போல் விளங்கி பரிசுத்த
மான காற்றுவீசி அலங்கரித்த தேர்ச்சிகரம்போல்
சிகரமுடைத்தாய் அண்ணல் தேர்ப்புரவி ஆள்பெரும்
படையொடு மன்னர்கள் தங்கத்தக்க தண்ணிழல் பரப்
பி நின்றது. சூரியன் மலைவாயில் விழுகிறதருணமாத
லால் அவனுடைய செங்கிரணங்கள் அந்த ஆலவிருட்
சத்திற் புகுந்து ரத்தினதீபங்கள் ஏற்றியதுபோல் ஏற்
றிவிளக்க அம்மரத்தினுடைய கம்பீரத்தையும் கொடி
களின் வரிசையான அழகையும் சூரியனுடைய ஒளி
யையும் தரையில் வீழ்ந்த இளநிழலையும் அவ்வடா
லயத்தின் மண்டபங்களையும் ஸ்தம்பங்களையும் சிகரத்
தையும் தீபங்களையும்கண்டு இதுவன்றோ ஆலங்காட்
டார் ஆனந்தக்கூத்தாடிய இடம் என்று தம்மனதுள்
சொல்லி இருவரும் ஒருவரையொருவர் கேளாது ஏக
காலத்தில் அம்மரத்தின்கீழ்த் தலைவணங்கிக் கைகூப்
பினர். கைகூப்பி 'உற்ற உடலும் சிந்தைவசமாத
லால்' ஒருவரையொருவர் விரைந்து தழுவி இருவரு
மாய்ப் பேசாதுபேசி மகிழ்ந்தார்கள்.

இவர்கள் நாள் இவ்வாறு கழிய குழந்தை நடரா
ஜன் சுந்தரத்துடன் ஜோடிசேர்ந்தான். அவ்விரு
வரும் ஆற்றங்கரை தோப்பு துறவு கோயில் குளம்
முதலிய இடங்களெங்கும் உல்லாசமாய் ஓடிவிளை

யாடுகிருர்கள். விளையாடுவதுடன் சண்டையும்பிடித்துக்கொள்ளுகிறதுதான். சண்டைசெய்துகொண்டாலும் மறுநிமிஷமே ராஜியாய்விடும். ஒருநாள் அவ்விருவரும்ஒரு கிட்டிக்கொம்புக்காகச் சண்டைபோட்டுக்கொண்டு விட்டார்கள். சில நிமிஷங்களுக்குப் பிறகு நடராஜன் ஒருவிளாம்பழத்தை எடுத்துக்கொண்டு சுந்தரம் இருந்த இடம் வந்தான். வந்து 'எங்கப்பா எனக்கு விளாம்பழம் தந்திருக்காளே உனக்குத் தருவேனே' என்ருன். அதற்கு சுந்தரம் 'நான் எங்காத்திலே ஒருமொக்கை விளாம்பழம் வச்சிருக்கேனே. அதை உனக்குத் தருவேனே! நீதந்தா நான் தருவேன்' என, நடராஜன் 'நீதான் என்னை அடித்தாயே இனிமேல் அடிக்கவில்லையென்று சொல்லுதாரேன்' என்ருன். சுந்தரம் இனிமேல் அடிக்கவில்லையென்று சொல்ல, நடராஜன் 'இல்லையென்று கன்னத்திலே போட்டுக்கொள்' என்ருன். சுந்தரம் அப்படியே செய்ய, நடராஜன் 'கன்னத்திலே போட்டுக்கொண்டால் போதுமோ தோப்பிக்கரணம்போடணும் அப்பொத்தான் குடுப்பேன்' என்று சொன்ஞன். பாவம் சுந்தரம் 'தோப்பிக்கரணமும்' போட, நடராஜன் பழத்தைப் பகிர்ந்து ஒருபாதியை அவனுக்குக்கொடுத்தான். உடனே இருவரும் வெகுநேசமாய் விட்டார்கள். இப்படியவர்கள் ஆடிவர ராமசேஷய்யருக்கு நடராஜனைவிட்டு அரைநாழிகை கூடப்பிரிய மனம்வராது ஆகையால் அவன்போகும் இடமெல்லாம் கூடவே தாமும் திரிந்து கொண்டேயிருந்தார். சிறுகுளத்திலே தகுதியான வீடுநிலம் முதலியனவாங்கி குழந்தை துரைசாமி (நடராஜன்) பெயருக்கு எழுதிவைத்து விட்டார்.

அம்மையப்ப பிள்ளையவர்கள் சிறுகுளத்திலேயே தங்கி முத்துஸாமியய்யருக்கு பிரதம சிஷ்யரானுர். பொழுதுபோகாவிட்டால் அவ்வூரார் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். ஆடுசாபட்டியின் மகத்துவத்தை அவர்சொல்ல ஆரம்பித்துவிட்டால் ஆறுநாளானுலும் ஓயமாட்டார். தஸ்தவெஜுகளிலேகூட 'நிலவலயத்திற்கு ஓர்திலகம்போன்ற ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர்புகழும் அஷ்டாவதானம் மகாவித்வான் அம்மையப்பபிள்ளையவர்கள்' என்றுதான் கையெழுத்து. ஆடுசாபட்டி என்பதற்கு ஆட்டுக்கு மோட்சம் கொடுத்த இடம் என்று பொருளாம். கஜேந்திராழ்வாருக்குப் போட்டியாக அஜேந்திராழ்வார் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு ஆடுசாபட்டியில் மோட்சமாம். இப்படி ஸ்தலபுராணங்களை விஸ்தாரமாகப் பேசிக்கொண்டு அம்மையப்ப பிள்ளையவர்கள் காலம் நடத்தினுர்கள்.

பேயாண்டித்தேவன் தன்னூர் சென்று அங்கு ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தான். காலமே எழுந்ததும் முத்துஸ்வாமி அய்யரிருக்கும் திசையை நோக்கி ஒருதரம் நமஸ்கரித்தபிறகுதான் மற்ற காரியங்களில் பிரவேசிப்பான். அந்தத் திருமங்கையாழ்வாருக்கும் முத்துஸ்வாமியய்யர் ஏதோ அனுக்கிரஹித்திருப்பதால் அவரிடத்தில் அவனுக்கு தேவதாவிசுவாசம். அவன் திருடுவதைக் [illegible]டோடு ஒழித்துவிட்டான்.

வைத்திநாதய்யரவா[illegible] வேலையை ராஜிநமா கொடுத்துவிட்டு சிறுகுளத்தி[illegible] வாசத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு முத்துஸ்வா[illegible]யய்யரிடம் உபதேசம் பெற்று யோகாப்பியாசம் [illegible]செய்துவருகிருர். நல்ல ஹிருதயவானுனதால் அவருக்கு [illegible]ல்ல அனுபலங்கள் சீக்கிரத்தில் சித்தியாகுமென்று ந[illegible]னைக்கிறேன். முத்துஸ்வாமியய்யர் குடும்ப[illegible] தான் மேல்பார்த்து வருகிருர்.

கமலாம்பாள் சகலவித பாக்கியத்தையும் திரும்[illegible] பெற்றும் ராம நாமஸ்மரணையை விட்டுவிடவில்லை. நாளுக்கு நாள் அவள் பக்திபெருகிக் கொண்டே வந்தது. அந்த பக்திவிசேஷத்தால் அவளுக்கு உலகமெல்லாம் ராமஸ்வரூப்மாய்த் தோன்றிற்று. 'பார்க்கு மிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணுனந்தமே' என்றபடி மேகம் சூரிய சந்திர நட்சத்திராதிகள் முதல் மரம் மட்டை மனிதன் ஈருகச் சகலமும் அவளுக்கு ஆனந்தமான ஸ்ரீராமமயமாகவே தோன்ற 'எல்லா முன்னுடைமையே எல்லா முன்செயலே எங்கணும் வியாபி நீ' என்று என்று சதா அந்த ராமனையே வாழ்த்திய வண்ணமாய் தனக்கென்று ஒன்றுமில்லாது உண்ணுநீர் முதல் அந்நீரிலும் நின்றிலங்கும் அவனுக்கே அற்பிதம்செய்து 'உலகனைத்தும் உன் நாமப்பொருளதையே ஓதிடுமால்' என்று உள மகிழ்ந்து, கதித்தெழும் இராகத்வேஷாதிகள் யாவற்றையும் கண்டித்து அடக்கிக் கொலை புரிந்து

கரவன்றி யிராமர் கணக்கிலவாம்
பரவை மணலிற் பல ரென்பர்களால்

என்று என்று பார்க்கும் பொருளனைத்தினும் ராமனையே பார்த்து உலகெங்கும் ஒருவன் என உணரும் உணர்ச்சியோடு களித்தாள். பாடுவதெல்லாம் இராமனுடைய பாட்டு, பேசுவதெலாம் இராமனுடைய பேச்சு, ஓதுவதெலாம் இராமனுடைய திருநாமம்.

மன்னுபுகழ்க்கௌசலைதன்மணிவயிறுவாய்த்தவனே [சேர்
தென்னிலங்கைக்கோன்முடிகள்சிந்திறுத்தாய்செம்பொன்
கன்னிநன்மாமதிள்புடைசூழ்கணபுரத்தென்கருமணியே
என்னுடையவின்னமுதேயிராகவனேதாலேலோ.

கொங்குமலிகருங்குழலாள்கோசலைதன்குலமதலாய்
தங்குபெரும்புகழ்ச்சனகன்திருமருகாதாசரதி

கங்கையிலுந்தீர்த்தமலிகணபுரத்தென்கருமணியே
எங்கள்குலத்தின்னமுதேயிராகவனேதாலேலோ.

என்றிப்படி யிராகவனைப் பாடிக்கொஞ்சி 'மன்னே மாமணியே' என்று ஏத்தி, 'அன்னே தேனே யாரமுதே' என்று அழுது, 'ஐயே நினக்காளானேன் அல்லேனெனலாமோ' என்று களித்து அவள் தன்காலத்தைக் கடத்தினள். தன் கணவனைக்கண்டுவிட்டால் ஸ்ரீராமனையே பிரத்தியட்சமாய்க் கண்டதுபோல் நினைப்பு. அவருடன் பேசினல் இராமனுடன் பேசுவதாய் மதிப்பு. அவருக்கு இருந்தால் ஸ்ரீராமனருக்கு இருப்பதாய்க்களிப்பு. அவர் நடையையும் அவர் சிரிப்பையும் காணுந்தோறும் காணுந்தோறும் 'கடந்தருமதங் கலுழ்கவியானைபோல் நடந்தது கிடந்தது என் ...ளியே' என்றும் 'முந்தியென்னு யிரையம் ...தே' யென்றும் ராமனைக்கண்ட சீதை போல் தன்னுள் பாடிமகிழ்ந்து

தீராளியர்வலிசேவகனே
நாராயணனேதனிநாயகனே

என்று துதித்து இவ்வாறு அவள் ராமத்தியானந்த வைபவத்தில் முழுகியிருந்தாள்.

கமலாம்பாளது பக்தியின் வைபவமே யிவ்வாறாயின் முத்துஸ்வாமியய்யருடைய ஞானத்தின் வைபவத்தைச் சொல்லவும் வேண்டுமோ. அவர்

யதாகாஸஸ்திதோநித்யம்வாயுஸ்ஸர்வத்ரகோமஹான்
ததாஸர்வாணிபூதாநிமத்ஸ்தாநித்யுபதாரய

(சர்வவியாபகமாயும் நிறைந்து மிருக்கிற வாயுவானது எப்போதும் எப்படி யாகாசத்தில் இருக்கிறதோ அப்படி சகலபூதங்களும் என்னிடத்திலிருக்கிறதாகத் தெரிந்துகொள்) என்றும் 'உலகம் யாவும் உயிர்பலவும் நானே சிறிதும்வேறில்லை' என்றும் வாக்குக் கொடுத்திருக்கும் பகவானுடைய மகாவாக்கியத்தை விசாரணைசெய்து உலகெலாம் அலகைத்தேரெனத் தேர்ந்து

பூதநீயலைபொறிகளுமலையலைபுந்தி
ஏதுநீயலையிவற்றினைமயங்கியானென்னும்
போதநீயலையென்றிவையனைத்தும்போக்கிச்
சோதியாகியபிர்ம்மமேநீ

எனச்சொன்ன குருபதேசவிசேஷத்தால் பஞ்சகோசத்திரைகளைப்பிளந்து பூரணமாய் ஏகமாய் அசலமாய் அசரீரியாய் அனதியாய் ஆப்தமாய் நித்தியநிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷயமாய் விளங்காநின்ற சச்சிதானந்தஸ்வரூபமாகிய ஆத்மாவை தரிசனம்செய்து, அகண்ட பிர்ம்மாகாரமான விஸ்வரூபவிர்த்தியிற் பிரவேசித்து திரிபுடிரஹிதமான பிர்ம்மாநந்தத்தில் மூழ்கி, ஆத்மக்கிரீடைபுரிந்து சமாதி நிஷ்டையில் நிர்வஹித்து சமாதியொழிந்த சமயங்களில் பகவானுடைய மாயாவிபூதியை வியந்து ஒளியிலே யிருளிலே வெளியிலே, மண்ணிலே தண்ணிலே மலையிலே, கடலிலே கரையிலே ககனத்திலே, மரத்திலே மரத்தினிலையிலே கனியிலே காற்றிலே கற்றூர்கல்லாரிடேகதியரியாக் கயவர்தம்மிலே கடலண்ண ஜகமுழுதிலே

நீயலால்பிறிதுமற்றின்மைசென்றுசென்றணுவாய்த்
தேய்ந்துதேய்ந்தொன்றாந்திருப்பெருந்துறையுறை
சிவனேயொன்றுநீயல்லையன்றியொன்றில்லை,

இல்லையில்லையெனத்தெளிந்து உலகவியாபாரங்களில் புகும்பொழுதும் கோத்தநிலைகுலையாது புதும்மணம் புகுந்த நாரியர்போற்புக்கு ஆனந்தமாய்

அச்சந்தவிர்த்தானென்றூதூதுசங்கே
யம்பலவாணனென்றூதூதுசங்கே
இச்சையளித்தானென்றூதூதுசங்கே
இன்பங்கொடுத்தானென்றூதூதுசங்கே
இறவாமையீந்தானென்றூதூதுசங்கே
எண்ணம்பலித்ததென்றூதூதுசங்கே
ஊனேமறிவதென்றூதூதுசங்கே
உணர்வேபிரமமென்றூதூதுசங்கே
நானேஅவனுமென்றூதூதுசங்கே
நானுவதில்லையென்றூதூதுசங்கே

எனப்பாடிப்பாடி ஞானனந்த வைபவசாகரத்தில் மூழ்கியிருந்தார்.

இரவியுமதியும்வானும்வாயுவுமனலுமப்பு
முரவியமண்ணுமற்றையுணர்பவன்றானுமாகி
பரவிடுங்காரணம்பன்னான்காயுமன்றாயுநின்றே
உரைமனமிறந்துளோங்குமொளியதுவாழிவாழி.

கண்முதற்புலன்களந்தக்கரணங்கள்விளங்குமெத்தாற்
தண்மதியருக்கனங்கிதாரகைவிளங்குமெத்தால்
விண்முதற்பூதமியாவும்விளங்கிடுமெத்தாலந்த
வுண்மையாஞ்சிவப்பிரகாசவொளியதுவாழிவாழி.

ஓம்தத்சத்.

பிற்கூற்று.

இப்பொய்க்கதையை இதுகாறும் பொறுத்தருளிய நேசர்காள்! நும்பெரும் பொறுமைக்கு என் பெரும் வந்தனம்.

இக்கதை பெரும்பான்மையும் பலவித மனோசஞ்சலத்தின் மத்தியில் எழுதப்பட்டதாதலால் அழகு குன்றி 'குன்றக்கூறன் மிகைபடக்கூறல்' முதலிய யீரைங்குற்றங்களுக்கும் குடியாயுளது. மேலும் என்னறியாமையானும் பிறகாரணங்களானும் சொற்பிழைகள் பல படர்ந்து கற்றோர்க்கு விரசமாயுளது. ஆயினும் அவகாசம் முதலிய சிலசாதனங்கள் ஏற்பட்டிருப்பின் அவை ஒருவாறு விலகியிருக்கலாம்.

இதுநிற்க இச்சரித்திர மெழுதுவதில் எனக்குக் கதையே முக்கிய கருத்தன்று. மற்றென்னையோ வெனில், ஆசையொடு உசாவும் அர்ச்சுனனுக்கு

நாந்தோஸ்திமமதிவ்யானும் விபூதினும்பரந்தப

அதாவது

இறந்தவென்விபூதிக்கோரெல்லையின்மையின்
பிறந்தனமுடிவுபெறப்பேசவொண்ணுமோ

என்று பகவானாலேயே சொல்லிவிடப்பட்ட அவனது மாயாவிபூதியாம் பெருங்கடலுள் ஓர் அலையுள் ஓர் நுரையுள் ஓர் துளியில் ஓர் அணுவையானெடுத்து அதனுள் என்புல்லறிவிற் செட்டியமட்டும் புகுந்து பார்த்து

சாணினுமுளனோர் தன்மையணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவில்

என்று காட்டத் தூண்பிளந்து தோன்றிய அவனே அங்கும் இருக்கக்கண்டு திசைதிறந்தண்டங்கீறிச் சிரித்த செங்கட்சீயத்தைக்கண்டு கைகூப்பி ஆடிப்பாடியரற்றியுலகெலாந் துள்ளித்துகைத்த இளஞ்சேயொப்ப யாமும் ஆடிப்பாடி ஓடவேண்டுமென்பதேயன்றி வேறன்று. (1) பொன்னம்மாளது சூழ்வினையினும் சங்கரியது கொலைத்தொழிலினும் சுப்புவின் கலகத்திறத்தினும் (2) நடராஜனது விவரமறியா இளமையினும் (3) ராமசேஷய்யரது வாஞ்சாரூபமான முதுமையிலும் (4) லெட்சுமி ஸ்ரீநிவாசனது மனோதர்ம விசேஷத்திலும் (5) கமலாம்பாளது பக்திவைப்வத்திலும் முத்துஸ்வாமியய்யரது ஆத்மானந்தத்திலும் எங்கும் சமமாய் சாட்சியாய் ஏகமாய் பூரணமாய் நித்தியமாய்

நன்றாய்ஞானகனமாகிநானுவெல்லாம்பிறப்பிடமா [ப்ப
யொன்றாய்வேறோர்பொருளின்றியொளியாயொன்றோடுவமி
தன்றாயகிலசராசரங்கட்காதாரந்தானுயென்றும் [பரிதாய்
பொன்றாததுவாய்விகாரப்பொருளாய்ப்புலனுய்ப்புணர்ப்

‘உம்பர்க்கும் உனக்கும் ஒத்து இவ்வுலகெங்கும் பரந்துளானை’க்கண்டு கமலாம்பாள்போல ‘புத்தியாலறியொண்ணாப் புராணனைப் பத்தியாம்வலையிற்படுத்து’

கன்றினுக்குச்சேதாகனிந்திரங்கல்போலெனக்
கென்றிரங்குவாய்கருணையெந்தாய்பராபரமே

என்று அருட்டாகங்கொண்டு

கன்றுகுணிலாக்கனியுகுத்தமாயவ
னின்றுநம்மானுள்வருமேலவன்வாயிற்
கொன்றையந்தீங்குழல்கேளாமோதோழீ

என்றவன் புராணவைபவங்களில் மதிமயங்கி

ளோர்கோவணமுந்திருநீறும்

என்றவன் மூர்த்திலாவண்யத்திலீடுபட்டு ‘ஊடுவது முவப்பதும் நின்னோடே’ எனத் தன்னையும் ஜகத்தையும் மறந்து

சொல்லாலேவாய்துடிப்பதல்லானெஞ்சந்
துடித்திருகணீரருவிசொரியத்தேம்பிக்
கல்லாலேயிருந்தநெஞ்சங்கல்லான்முக்கட்
கனியேநெக்குருகிடவுங்காண்பேன்கொல்லோ

எனத் தனையேநொந்து நொந்து நெஞ்சங்கரைந்துருகி

மாசில்வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே

என்று விசேஷிக்கப்பட்ட அவாங்கமனகோசரமான அவ்வடி நீழலில் ஓய்வடைந்தாவது அல்லது முத்துஸ்வாமியய்யரைப்போல ‘வேண்டேனிம்மாயப்புன் பிறவி வேண்டேனே’ என உலகவிரக்திபெற்று கிருமி முதல் கிரகங்கள்வரை சலியாது சஞ்சரிக்கின்ற பகவானுடைய சித்விலாசச் சிறப்பில் எந்தக்கேவலமான பிராணியும் அநாதியாய்விடப்படவில்லையெனவறிந்து அஞ்ஞானங்கழல அகம் பிர்ம்மாஸ்மியாதி மகாவாக்கியங்களை விசாரணைசெய்து ஆத்மஸ்வரூபத்தை தரிசித்து ‘பாகற்காய்க்காகப் பங்கைவிற்ற கதையாய்’ அற்பமான உலக இன்பங்களின்பொருட்டு விலையற்ற ஆத்மலாபத்தை விலைப்படுத்தாது ‘மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே’ என்றபடி மனமிறக்கக்கற்று உலகவாஞ்சைகளை யொழித்துச் ‘சிந்தையிலெழுந்து பொங்கிச் செகமெலா நிறைந்து தேங்கி அந்தமில்லாத தான ஆனந்தத்தில் மூழ்கி’ திடமாகச்சிவானுபூதிபெற்றுச் சிவோகமென்றிருந்தாவது, எந்த தெய்வத்தைத்தொழுது இச்சிறு கிரந்தமானது இயற்றப்பட்டதோ எந்த சுயம்பிரகாசமான திவ்ய தேஜாநுபத்தின்பொருட்டு இக்கதையானது நிஷ்காமியமாக அர்ப்பிக்கப்படுகிறதோ அந்த திவ்ய மங்கள குணாதீத பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபத்தை நாமனைவரும் முயற்சித்து அடைவோமாக.

பி. ஆர். சிவசுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

பிரேமகலாவத்யம்.

I.

பிரேமகலாவத்ய*மென்னும் புத்தகத்தை எழுதினவர் எஸ். வி. குருசாமி சர்மா என்பவர். இம்மாதிரியான் பிரபந்தத்தை இங்கிலீஷில் “நாவல்” என்பார்கள்: அதற்குச் சரியானபதம் தமிழில் கிடை

*சம்ஸ்கிருத வியாகரணப் பிரகாரம் இப்புஸ்தகத்தின் பெயர் “பிரேமகலாவதீயம்” என இருக்கவேண்டுமென்றும் “பிரேமகலாவத்யம்” என்னும் பெயரானது சரியானதல்லவென்றும் சம்ஸ்கிருதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யாது. ஸம்ஸ்கிருத பாஷையில் "கல்பனகாவியம்" என்று சொல்வார்கள். தமிழ்ப்பாஷையில் நாடகமும், நாவலும் இல்லாமலிருந்தன. திருவனந்தபுரம் காலேஜ் பண்டிதராகிய எம். ஏ. சுந்தரம் பிள்ளையவர்கள் "மனோன்மணீயம்" என்னும் ஓர் அற்புதமான நாடகத்தைச் செய்யுளிலியற்றித் தமிழ்ப் பாஷைக்கு சிறப்பீந்தனர். குருசாமி சர்மாவும் இதுவரைக்குமில்லாத இக்கல்பனகாவியத்தைத் தமிழில் வசனமாக முதல் முதல் எழுதிப் பிரசுரித்தார்.

இப்புத்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தி ஐந்து ஆறுமாதங்களாயும் அதை கவனிப்போர் ஒருவரையுங்காணோம். நல்லது கெட்டது என்று சொல்பவருமில்லாமற்போயினர். பாருங்கள் நமது நாட்டாருக்குள்ள பாஷாபிமானம். இவ்வித மிருக்குமாயின் பாஷை எப்படி விர்த்தியடையும். பாஷாபிவிர்த்தியினாலல்லவோ ஒரு ஜாதியாருக்குள்ள கல்வித்திறம் விளங்கும். ஆனால் "நீர் சொல்வது ஒவ்வாது; ஆங்கிலேய பாஷையில் நம் நாட்டார் எத்தனையோ பேர் பண்டிதர்களாயிருக்கிறார்களே அதனால் அவர்கள் பெருமை விளங்கவில்லையா?" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். நாம் அன்னியபாஷையைப்பற்றிப் பேச வரவில்லை. நம் சுயபாஷையைப்பற்றிப் பேசுகிறோம். அன்னியபாஷையாகிய இங்கிலீஷில் அவர்களுக்கு அவ்வளவு பாண்டித்திய மிருக்குமானால் நம் பாஷையிலின்னும் அதிகமாகவன்றோ இருக்கவேண்டும். நமது பாஷையைக் கொஞ்சமேனும் கவனியாது அன்னியர் பாஷையை சிரத்தையுடன் விருத்திசெய்வது நம்மைப்பெற்றெடுத்து நெடுநாளா யாதரித்து வந்த தாய்தந்தையரைக் கைவிட்டுக், கடலும் காடும் மலையும் கடந்து நமது தேசத்துக்கு நேற்றுவந்த அன்னியர்களை அடைந்து அவர்களுடன் அளவளாவலையொக்கும். ஆதலின் நமது பாஷையை அபிமானிக்கவேண்டியது அத்தியாவசியமல்லவா?

நமது பாஷையானது நாம் குழந்தைகளாயிருந்த காலத்தில் நமது தாய்தந்தையரும் உறவினரும் நம்மை அன்புடன் தாலாட்டிக் கொஞ்சின பாஷையன்றோ? நமது சிறு பிராயத்தில் நமது குருவானவர் நமக்கு அக்ஷராப்பியாசம் பண்ணிவைத்த பாஷையன்றோ? நமது யௌவனகாலத்தில் நம்மனைவிமாருடன் அந்தப்புரத்தில் கொஞ்சிக்குலாவும் பாஷையன்றோ? இத்தகைய பாஷையை எப்படி மறத்தல்கூடும். எப்படி அசட்டை செய்தல்கூடும். நாம் அன்புடன் ஆதரித்து விருத்திசெய்யவேண்டியது நமது கடமையல்லவா? ஆதலினால் எல்லோரும் பாஷாபிமானம் பூண்டு இன்னும் அனேகர் இத்தகைய பிரபந்தங்களைப் புதிது புதிதாக எழுதி வெளிக்குக்கொண்டுவருதற்குரிய உற்சாகம் உண்டுபண்ணும்பொருட்டு இப்பிரேமகலாவத்யத்தையும் இதுபோன்ற புதிய கிரந்தங்களையும் ஆவலுடன் படிப்பார்களென்று நம்புகிறோம்.

கதைச்சுருக்கம்.

இப்பிரேமகலாவத்யத்தின் குணதோஷங்களைப்பற்றிப் பேசுமுன்னம் அதன் கதையைச் சுருக்கமாய்ச் சொல்வது அவசியமென்று நம்புகிறோம். ஏனெனில் கதைதெரியாமல், அதின் ஏற்றக்குறைவுகளைப்பற்றிப் படிப்போர்க்கு ருசிபிறவாது. ஆதலின் அடியில் வருமாறு கதையைச் சுருக்கிச் சொல்வோம்:—

மழபாடியென்னும் ஊரில் தயாநாதசர்மா என்னும் ஒரு குலசிரேஷ்டரிருந்தார். அவருக்குப் பிரேமன் என்னும் ஒரு சத்புத்திரனுண்டு. சகல நற்குணங்களும் தன்னிடத்தில் நிறையப் பெற்றவன். இத்தயாநாதருக்குக் கடுமுகியென்னும் இளைய சம்சாரம் இருந்தாள். அவளது பெயரே அவள் குணாதிசயங்களை நன்றாகவிளக்கும். பெண்பாலார்க்குள்ள கெட்டகுணங்களெல்லாம் ஒருங்குசேர்ந்து ஒருருவெடுத்தன போன்றவள். பிரேமன் தனது சக்களத்தியின் மகனாதலால் கடுமுகி அவனைமிகக்கொடுமையாய் நடத்திவந்தாள். ஆனால் அவன்மீது அதிகப்பிரியமாயிருப்பவள்போல் பாசாங்கு செய்வாள். தான் பிரேமனை ஒரு நிமிஷமேனும் விட்டுப்பிரியமனமில்லாதவள்போல் தன் கணவனிடம் நடித்து அவனைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பாமல் வீட்டிலேவைத்திருந்தாள். இப்படியிருக்கையில் ஒருநாள் உஞ்சவிர்த்தி பிராமணர் ஒருவர் தயாநாதசர்மா வீட்டிற்குவந்து பிரேமனை சந்தித்து அவன்கூரிய புத்தியைக்கண்டு வியந்து அவனைப் படிப்பிக்கும்படி தயாநாதருக்கு போதித்தார். தயாநாதரும் அப்பிராமணனையே குருவாகக்கொண்டு பிரேமனுக்கு அட்சராப்பியாஸம் செய்வித்து அவருக்கு அங்கேயே தனியாக ஓர்விடுதியமர்த்திக்கொடுத்து அதிலிருக்கச்செய்தார். பிரேமனுடன் விளையாடும் ஆத்திரேயன் என்னும் ஒரு பையன் உண்டு. அவனும் பிரேமனோடுகூட அந்தப்பிராமணனிடம் கல்விகற்றுவந்தான். பிரேமன் நாளுக்குநாள் கல்வியில் தேர்ச்சியடைந்தனன். இதைக்கண்டு கடுமுகிக்குப் பொறாமைவிர்த்தியடைந்தது. ஒருநாள் பிரேமன் வீட்டிற்குள் ஸ்நானஞ்செய்யப்போக அவனைக் கடுமுகி இருப்புக்கரண்டியால் தலையிலடித்தாள். அதைப் பொறுதவனாய் மனம்நொந்து பிரேமன் குருநாதருக்கு ஒருகடிதம் எழுதிவைத்துவிட்டு வேறொருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஊரைவிட்டுப் போய்விட்டான். அக்கடிதம் பார்த்து குருநாதர் மனம்வருந்தி "நல்ல குணங்கள் நிறைந்த சிஷனே

போயவிட்ட[illegible] இனிமேல் நமக்கு இங்கே அலுவல் என்ன" என[illegible]ள் எண்ணிக்கொண்டு அவ்வூர் விட்டு வேறிட[illegible]னர். இதற்குள் பிரேமன் தன்னை எதிர்த்[illegible]ல் அவன்மீதுள்ள ஆக்கிரகமானது [illegible]த் தொலைத்துவிட எண்ணங்கொண்டவ[illegible]முகி அன்றிரவே குரு சிஷ்யர்கள் வழக்கமாக நித்திரைசெய்யும் படிப்புவீட்டில் தீவைத்தாள். வீடு வெந்து சாம்பலாயிற்று. பிரேமனும் குருநாதரும் நெருப்பில் எரிந்து இறந்தார்களென்று தயாநாதரும் ஊராரும் எண்ணி மனம் வருந்தினார்கள். தயாநாதர் புத்திரசோகத்தால் பயித்தியம்கொண்டார். ஆத்திரேயனும் மிகவும் விசனமுற்றான்.

இதுநிற்க, மழபாடிக்குச் சமீபத்தில் அன்பில் என்ற ஒரு கிராமமுண்டு. அக்கிராமத்தில் பானுசேகர சர்மா என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவருக்கு மணிமதி என்ற ஒரு உத்தமபத்தினி. இவர்களுக்குக் கலாவதி என்னும் ஒரு அருமைப் புதல்வியுண்டு. அதேகிராமத்தில் ஜனங்களெல்லாருக்கும் அதிகவட்டிக்குப் பணங்கொடுத்துத் திரவியம் சம்பாதிப்பதிலேயே கருத்துள்ள பாஸ்கர வாத்தியார் என்னும் ஒருவர் இருந்தனர். துர்க்குணங்கள் நிறைந்த ஒரு புத்திரன் அவருக்குண்டு. இவ்வாத்தியார் ஒருசமயத்தில் பானுசேகர சர்மாவினிடம்போய் தன் புத்திரனுக்குக் கலாவதியைக் கன்னிகாதானமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்க வாத்தியாரும் அவர் புத்திரரும் அக்கிரமஸ்தர்களென்று எண்ணி பானுசேகரர் சம்மதியாதவராய் "இப்பொழுது என்ன அவசரம்: எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்வோம்" என்று போக்குச்சொல்லி யனுப்பிவிட்டார்.

ஊரைவிட்டுப்போன பிரேமனோ கல்லும் முள்ளும் துஷ்டமிருகங்களும் நிறைந்த காட்டின்வழியே சென்று காற்றிலும் மழையிலும் அடிபட்டுப் பல கஷ்டங்களுக்கு முள்ளாகி வெள்ளத்தாலடியுண்டு நல்வேளையாய் ஒரு பக்கத்தில் ஒதுக்கப்பட்டுக் கரையேறி சிரமபரிகாரம் பண்ணிக்கொள்ளும் பொருட்டு ஒரு மரத்தடியிற் படுத்துறங்கினான். அவ்வழியே சென்ற இரண்டு பிராமணர்கள் அவனைக்கண்டு தங்கள் வீட்டுக்கிட்டுக் கொண்டுபோய் குழந்தைபோல் பரிபாலித்து வந்தார்கள். இப்படியாகச் சில மாதங்கள் கழிந்தன. பிறகு நவராத்திரி சமயம் வந்தது. ஒரு நாட்காலையில் அவ்விரு பிராமணர்களும் பிரேமனைக் காளிகோவிலுக் கழைத்துப்போய் பலிகொடுக்க எத்தனிக்க, தற்செயலாய் அந்தப் பக்கத்தில்வந்த ஒரு வேடன் இரண்டு கிராதகரையும் கொன்று பையனை உயிர்தப்புவித்தான். இதையறிந்த பையனும் வேடனைப்புகழ்ந்து விசுவசிக்க அவனையே துணையாகக்கொண்டு அன்பிலுக்கு வந்துசேர்ந்தான். வந்தவ்வூரில் ஒரு வீட்டுத்திண்ணையில் படுத்துத்தூங்கினான். விடிந்து மெழுந்திருக்கவில்லை. அந்த வீட்டுப்பெண் திண்ணையில் உறங்கிக்கொண்டிருந்த பையனுடைய அழகைச்கண்டு வியந்து தன் தகப்பனாரை அழைத்துவந்து காண்பித்தாள். அவர் அவனையெழுப்பி அவனது யோகக்ஷேமம் பேரூர் அவ்வூருக்கவன் வரநேரிட்ட விருத்தாந்தம்முதலியவைகளைக் கேட்டறிந்தார். அதுமுதல் அவன்மீது அவ்வீட்டார் எல்லாரும் இரங்கம்கொண்டு தங்கள் வீட்டிலேயே கலாவதிக்குச் சகாவாக இருக்கும்படி வேண்ட பிரேமனும் அதற்குடன்பட்டுக் கலாவதிக்குப்புத்திமதிகளைச் சொல்வதும் அவளுடன் விளையாடுவதுமாய் இணைபிரியாமலிருந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள் வீதியில் ஒரு குரங்காட்டி வந்தான். பிரேமனும் கலாவதியும், சுயேச்சையாய்த்திரியும் பிராணிகளைப் பிடித்து நிர்ப்பந்தப்படுத்தல் பாபமென்று குரங்காட்டிக்கு உபந்நியசித்து அக்குரங்கை விடுவித்தார்கள். குரங்கையிழந்த குரங்காட்டி அழுதுகொண்டிருந்ததை கவனித்துப்பார்த்து தன்பிராண சிநேகனான ஆத்திரேயனே குரங்காட்டி வேஷம் பூண்டு இக்கோலத்துடன் வந்தானென்று பிரேமன் தெரிந்துகொள்ள இருவரும் கட்டிப்புரண்டு அளவளாவிக் கண்ணீர்சொரிந்தார்கள். ஆத்திரேயனைப்பற்றிய வெல்லா சங்கதிகளும் பானுசேகரர் கலாவதி முதலியோர்க்குப் பிரேமன் சொல்லத் தெரியுமாதலால், அவர்களும் அவனிடத் தன்புபாராட்டினார்கள். மழபாடியில் பிரேமனது படிப்பு வீட்டில் கடுமுகி நெருப்புவைத்ததையும், பிரேமனும் குருநாதரும் தீயில் எரிந்து பட்டார்கள் என்று தயாநாதரும் ஊராரும் எண்ணியிருந்ததையும் பிறகு தான் குருநாதரைத் தற்செயலாய்ச்சந்திக்க நேர்ந்தபொழுது "பிரேமன் சாகவில்லை எங்கேயோ போயிருக்கிறான்" என்று குருநாதர் தன்னிடத்தில் சொல்லி அவனைக்கண்டு பிடிப்பதற்கான உபாயம் இன்னதென்று தனக்கு யுக்திசொல்லியதையும் ஆத்திரேயன் எல்லாருக்கும் சொன்னான். பிரேமன், கலாவதி, ஆத்திரேயன் இம்மூவரும் சகோதர சகோதரிகளைப்போல் பழகிவந்தார்கள். இவ்வாறிருக்கையில் ஒரு நாள், குருநாதரை அழைத்துவரும்படி பிரேமனும் கலாவதியும் ஆத்திரேயனை மழபாடிக்கு அனுப்பினார்கள். பிறகு பிரேமனும் கலாவதியும் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிரேமன் அவளுக்கு பல விஷயங்களைப்பற்றி உபந்நியசித்தான். இதனிடையில் பாஸ்கரவாத்தியார் பானுசேகரர் வீட்டுக்கு

வந்து கல்யாணபிரஸ்தாபம் செய்ய, கலாவதியை அவருடைய மகனுக்குக்கொடுக்க கொஞ்சமேனும் மனமில்லாதவராய் ‘கல்யாணவிஷயத்தில் ஒருவருக்கும் இஷ்டமில்லை’யென்று பானுசேகரர் வியக்தமாய்ச்சொல்லிவிட்டார். அதன்பேரில் பாஸ்கரவாத்தியார் அதிக ஆக்கிரகம்கொண்டு பானுசேகரரைக் கடிந்துபேசிக் கோபித்துப் போய்விட்டார்.

வாத்தியார் தன்வீட்டுக்குப்போய் நடந்த சங்கதிகளையெல்லாம் தன் மனைவியினிடம் சொன்னார். அவளும் அதிகமாய் மனம் வருந்தினாள். இப்படியிருக்கையில் ஒருநாள் ஆச்சிமணியம்மன் கோவிலுக்குப் போய் மாவிளக்கேற்ற, அங்கு ஒரு குறிசொல்பவன் வந்து இவளுடைய புத்திரனுக்கு கல்யாணம் நடக்கும் என்று குறிசொல்லினன். இவளும் தன் மகனுக்குக் கலியாணமாகும் என்கிற முழுநம்பிக்கையுடனும் வீட்டுக்குவந்து நடந்தவை யாவையும் தன் புருஷனுக்குச் சொல்லினள். இதுநிற்க.

ஒருநாள் பிரேமன் வெளியே உலாவப்போயினன். ஓரிடத்தில் கரும்பாலையாடக்கண்டு, கருப்பஞ்சாறு கொஞ்சம் வாங்கிச்சாப்பிட, அது அதிக ருசியாயிருந்தபடியால், ஒரு குடத்தில் கருப்பஞ்சாறு வாங்கிக்கொண்டு கலாவதி முதலியோர்க்குக் கொடுக்கவேண்டுமென்று வீட்டுக்குவந்தான். அந்த வீட்டில் ஒருவேலைக்காரியுண்டு. அவள் பெயர் சேஷி. கருப்பஞ்சாற்றில் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்து சேஷியினிடம் தந்து எல்லாருக்கும் கொடுக்கச்சொன்னான். கலாவதி முதலியோர் சாப்பிட்டார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் கலாவதிக்கு மயக்கம்கண்டு அறிவுசோர்ந்தாள். பானுசேகரரும் அவர் மனைவியும் என்னமோவென்று பயந்து வைத்தியனைவருத்த, அவன் கலாவதி வாந்தியெடுத்ததைப் பரிசோதித்து விஷமுள்ளேசென்றிருக்கிறதாகச் சொன்னதுமன்றி ஒரு சீட்டெழுதி இராஜாங்கத்தார்க்கனுப்பினதின் பேரில், அரசன் கட்டளைப்படி சேவகர்கள்வந்து வீடெங்கும் சோதிக்கப் பிரேமனுடைய பெட்டியில் ஒரு சிறு சிமிழில் விஷம் வைத்திருந்ததுகண்டு, அவனை நியாயாதிபதியினிடம் கொண்டுபோனார்கள். நியாயாதிபதி விசாரிக்குங்கால் தான் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு தெய்வத்திற்கஞ்சி நடந்தும் வீணான அபவாதம் தன்மேற் சுமந்ததுகண்டு மனம் மிகநொந்தவனாகி பிரேமன் வாயையே திறக்கவில்லை. கலாவதியை பிரேமனுக்கே கல்யாணம் செய்யவேண்டுமென்று அவளது பெற்றோர்கள் தீர்மானித்திருப்பதைத்தெரிந்து பாஸ்கரவாத்தியார் பிரேமன்மேற் பொறாமைகொண்டு அவனைத் தொலைத்துவிட்டால் கலாவதி தன் புத்திரனுக்குக் கிடைப்பாள் என்று எண்ணி, புஷ்பம் பறிக்கும்படி மா[illegible]று [illegible]லாய்க் கீழேவிழுந்துமாண்ட[illegible]ன் வீரபாகுவை இப்பிரேமனே கொ[illegible]ம் பொய்ப்பிரியாதுகொண்டு நியாய[illegible]ந்தார். இதன்றியும் கிராதகர்கள் [illegible]த்தி “தன் தகப்பனையும் சிற்றப்பனை[illegible]ளி கோவிலுக்கு இட்டுப்போய் இப்பிரேமன் கொல்வித்தான்” என்று நியாயாதிபதியினிடம் முறையிட்டாள். இம்முப்பழியும் செய்ததுண்டா இல்லையாவென்று நியாயாதிபதி பலமுறை வினவியும் பிரேமன் ஒருபதிலும் சொல்லவில்லையாகலின் அவனைக்காலையும் கையையும் கட்டிக்கொள்ளிடப் பிரவாகத்தில் போடும்படி ஆக்ஞாபிக்க அப்படியே கட்டிப் போட்டுவிட்டார்கள். பிரேமனோ ஒரு பாவமுமறியானாகி தன்தலைமேல் வீண் அபவாதம் வந்ததற்கு மிகவும் துன்புற்று பிரவாகத்தில் அடியுண்டு போகும்பொழுதே கடவுளை ஸ்தோத்திரம் செய்தான். இதுநிற்க.

கலாவதிக்கு அநேக மருந்துகள் கொடுத்துவிஷத்தை யிறக்கினவுடன், அவள் மயக்கம் தீர்ந்து பிரேமனுக்கு நேர்ந்த ஆபத்தைக்கேட்டு அதை நினைத்து நினைத்துத் துன்புற்றாள். தகப்பனார் என்ன சமாதானம் சொல்லியும் கேளாளாய்க், கண்ணீராகக் கரைந்தோடினாள்.

பாஸ்கரவாத்தியாரும் அவரைச்சேர்ந்தவர்களும் “பிரேமன் தொலைந்தான் கலாவதி நமது பிள்ளைக்குத்தான்” என்று மிகக் களித்தார்கள். அவரது சிஷ்டர்களுக்குள் சண்டையும் பூசலுமாயிருப்ப, கோபித்துக்கொண்டுபோய்விட்ட தன்சீடனாகிய சேஷசாயியை சமாதானப்படுத்தி மறுபடி தன்வீட்டுக்கழைத்துவந்தார் வாத்யார். அவனும் அது முதல் எப்போதும் போலவே வாத்தியார் வீட்டில் பழகி வந்தான்.

காலும் கையும் கட்டுண்டு கொள்ளிடத்தில் போடப்பட்ட பிரேமனுடைய சமாசாரம் சொல்வோம். தவவேஷம் பூண்ட ஒருவர், மிதந்துபோகும் பிரேமனைத் தற்செயலாய்ப்பார்க்க நேர அவனையெடுத்து கட்டவிழ்த்து வேண்டிய சிகித்ஸைகளையெல்லாம் செய்து அவனை நினைவுக்குக் கொணர்ந்தார். பிரக்ஞை வந்தவுடன் பிரேமன் அவரிடத்து மிகவும் அன்பு பாராட்டி அவரைவிட்டுப் பிரிய மனமில்லாதவனாயிருக்கையில் ஒருநாள், அவன் உறங்கிக்கொண்டிருந்த சமயத்தில நளன் தமயந்தியை விட்டகன்றதை யொப்ப அவர் அவனைத் தனியே விட்டுப் போயினர். பிரேமன் விழித்து அவரைக் காணாமல் தாயிழந்த கன்றுபோற் கதறிக்

கொண்டிருக்கையில், இராஜாங்கத்துச் சேவகர்களில் சிலர் வந்து அவனை அரசனிடத்திற்கு இட்டுக்கொண்டு போனார்கள். அரசனுமவனைத்தக்கபடி உபசரித்துவந்தான். ஆனால் அதற்குக் காரணம் இன்னதென்று புலப்படவில்லை. இப்படிச் சிலகாலம் கழிந்தது. ஒருநாள் "எனக்கொரு உபகாரம் பண்ணவேண்டும்" என்று அவனைப்பார்த்து அரசன் கேட்க, அரசன் தனக்குப் பரம உபகாரியாகையால், என்ன சொல்லினும் அதற்குடன்படுவதாகச் சொல்லினான். அதன்மேல் பிரேமனை யரசன் ஒரு கோயிலுக் கழைத்துப்போனான். அங்கே தன்னை கொள்ளிடவெள்ளத்தினின்று மெடுத்துத் தன் உயிரைக்காப்பாற்றின பெரியவர் நின்றுகொண்டிருந்தார் தெய்வசந்நிதியில். ஒரு வாளைப் பிரேமன் கையிற் கொடுத்து அவரை வெட்டும்படி சொன்னான் அரசன். அத்தீத்தொழிலுக்கவன் உடன்படாமல் அரசனுக்குப் பலவித நீதிகளை எடுத்துக்காட்டியும் அரசன் கேளாமையால், அவ்வாளால் தற்கொலை செய்துகொள்ள முயன்றான். அதை அரசன் தடுத்துப் பிரேமனைப்போய்விடச் சொன்னான். பிரேமனோ தபசியைக் கொல்லவாவது வாக்குதத்தம் தவறவாவது பிரியமில்லானாய், துன்பக்கடலிலாழ்ந்திருக்கக்கண்டு, அத்தபசியே பிரேமனைப்போய்விடச் சொன்னார். பிரேமன் அதைவிட்டு ஓரிடத்திற்குவந்து தற்கொலையினால் விளையும் நன்மை தீமைகளைப்பற்றி யோசிக்கும்போழ்து, அந்தவழியாய் ஒரு வழிப்போக்கன் மழபாடிக்குச் செல்லக்கண்டு, தன் தகப்பனாருக்கு ஒரு கடிதமெழுதி அவனிடத்திற் கொடுத்தனுப்பினன். பிறகு ஒரு மரத்திலேறி அதினின்றும் கீழே விழுந்து தன்னுயிரை விட்டுவிடுவதாகத் தீர்மானித்தான் பிரேமன். இதுநிற்க.

குருநாதரை யழைத்துவரப்போன ஆத்திரேயன் அன்பிலுக்குத் திரும்பிவந்து பிரேமன் கதியைக்கேட்டு மிகவும் வருந்தி துன்பக்கடலுள் ஆழ்ந்தானெனினும், 'பிரேமனுக்கு நல்ல காலம்வரும்' என்று குருநாதர் சொன்னவாக்கு பொய்யாது என்று நம்பினவனாய் விஷம் தந்த விதமெப்படி என்பதைக் கண்டுபிடிக்க வெகு ஆவலுள்ளவனாயிருந்தான். இதுநிற்க.

ஒருநாள் பாஸ்கரவாத்தியார் தன் சீடரிற் சிலருடன் அகண்டகாவேரி ஸ்நாநத்திற்குபோக எண்ணம் கொண்டு சேஷியினிடத்தில் தன்வீட்டுக்குக் காவலாயிருக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார். அன்று சாயங்காலத்தில் சேஷியானவள் குடி களவு காமத்திற்கு நிதிபோன்ற வொரு பண்டாரத்தின் வீட்டுக்குட்போய் அவனுடன் சம்பாஷித்து அவனிடமிருந்து கஞ்சா வுருண்டை அரைத்து வாங்கிக்கொண்டு அவனை யன்றிராத்திரி சுமார் 10-நாழிகைக்கு வாத்யார் வீட்டுத்திண்ணையில் வந்திருக்கும்படி சொல்லிவிட்டுக் கீரையும் மடியுமாய் வெளியேறினாள். அந்த சமயத்தில் தற்செயலாய் அவ்வழியேபோய்க்கொண்டிருந்த ஆத்ரேயன் அவளைக்கண்டு "இங்கேது வந்தது" என்று கேட்டான். தான் கீரைபறிக்க வந்ததாகச் சொல்லிப்போயினள். சேஷியினிடம் ஆத்ரேயனுக்கு முன்னரே சந்தேகமிருந்ததினாலும் கீரைக்காக அவ்வளவுதூரம் வரவேண்டியது அவசியமில்லையாதலாலும் அதன் உண்மையைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு அப்பண்டாரத்தின் வீட்டுக்குட் புகுந்தான். அப்பண்டாரம் கொல்லையிற் கிணற்றுக்கருகில் மயங்கின புத்தியுடன் பலவிதமாக உளறிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் கஞ்சாவரைத்த அம்மியும் அதைச்சுற்றிலும் சில மருந்துச் சரக்குகள் சிந்தியிருப்பதும் கண்டு, ஆத்ரேயன் எல்லா சங்கதிகளையும் தெரிந்துகொண்டு வெளியே வந்துவிட்டான்.

அன்றிரவில் பாநுசேகரர் வீட்டில் வேலைகளையெல்லாம் செய்துவிட்டுக் கஞ்சாமருந்தைக் க்கையிலெடுத்துக்கொண்டு பாஸ்கரவாத்யார் வீட்டைநோக்கிப் புறப்பட்டாள் சேஷி. ஆத்ரேயனும் ஒரு பிச்சைக்காரன்போல் வேஷமாறுடிச் சேஷிக்குத் தெரியாமலே அவள் பின்சென்றான். சேஷி வாத்யார் வீட்டுக்குள் சென்றாள். இவனோ வெளியிலேயிருந்து பல வேடிக்கைப் பாட்டுகளைப்பாடிக்கொண்டிருக்க, வாத்யார் சீடர், அவனை உள்ளேயழைத்து உபசரிக்க, அவனும் பல பாட்டுகளும் பாடி எல்லாரும் குலுங்க நகைக்கும்படி ஒரு கதையும் சொன்னான்.—இப்படியிருக்க, சேஷி வாத்யார் அகமுடையாளுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, "ஐயோ கலாவதிக்குச் செய்தவயிற்றுவலிமருந்து மடியிலேயே யிருக்கிறது" என்று சொன்னாள். பக்கத்திலிருந்த சேஷசாயியானவன் தானும் சேஷியும் துராலோசனைசெய்து முன்னமேயே தமக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தப் பிரகாரம், அம்மருந்தில் தனக்குக் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்டான். அவள் அப்படியே கொடுக்க, அதைச் சேஷசாயி சாப்பிட்டவன்போலப் பாசாங்குசெய்து அதிக தித்திப்பாயிருக்கிறதாகச் சொன்னான். இதைக் கேட்டுப் பக்கத்திலிருந்தவர்களும் தமக்கும் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்க, சேஷியானவள் வாத்யார் ம[illegible] [illegible]ற்ற சீஷர்களுக்கும் கொடுக்க, அவர்கள் [illegible] மயக்கம் கொண்டு கீழேவிழுந்து பல[illegible] வாத்யார் மகனுக்குக்கொடு[illegible] யிற்று. ஆயினும் மற்றவ[illegible] கிடந்த சமயங்கண்டு [illegible]

யனை வெளியேபோகச் சொல்லிவிட்டு கதவைச் சாத்திக்கொண்டு வாத்யார் வீட்டுப்பணத்தை சேஷனும் சேஷியும் கொள்ளையிட ஆரம்பித்தார்கள். இதைத் தடுக்க முயன்ற வாத்யார் புத்ரன் கொல்லப்பட்டான். வெளித்திண்ணையில் சேஷி சொன்ன பிரகாரமே பண்டாரம் வந்து படுத்திருந்தான்.

வெளியேபோன ஆத்ரேயன் இராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்க, அநேக சேவகர்வந்து சேஷி, சேஷன், தம்பிரான் இவர்களைக் கைப்பிடியாகப் பிடித்துத் திருவையாற்றுக்குக் கொண்டுபோயினர். மறுநாட் காலையில் வேடிக்கை பார்க்கும்படி ஆத்ரேயன் பாநுசேகரர் முதலியோரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு திருவையாற்றுக்குச் சென்றான். மறுநாள் திருவையாற்றில் ஜனங்களெல்லோரும் இராஜாவின் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்தவர்களாய்ப் பல தோரணங்களும் கொடிகளும்கட்டி, வீதியிலெல்லாம் கோலமிட்டுத் தாங்களும் நல்ல ஆடைமுதலிய உடுத்தி வெகு உற்சாகமாயிருந்தார்கள். இப்படியிருக்கையில் பகல் 10-மணிக்கு இரண்டு அதிர் வேட்டுக் கிளம்பினவுடனே மன்னவன் புறப்பட்டுப் புஷ்யமண்டபத்திற்குவந்து அங்கு கூடியிருந்த ஜனங்களை யெல்லாமிருக்கச்சொல்லி குற்றவாளிகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டனன். அதற்குள் அழுக்குப்படிந்த வஸ்திரங்களுடுத்திய அலங்கோலமான உருவத்தோடு கூடிய வொருவரை அரசன் முன்னிலையிற் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவரைப் பார்த்து அரசன் வினவ அவர் ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் தன் மடியிலிருந்த வொரு ஓலைச்சுருளைக் கையிலெடுத்து வாய்விட்டு "என் துரையே கண்ணே" என்று விம்மி விம்மியழுதார். அரசன் தன் பக்கத்திலிருந்த மந்திரியை அச்சுருளை வாசிக்கும்படி ஜாடைசெய்ய, மந்திரி வாசிக்க, அது பிரேமன தன் தகப்பனாருக்கு எழுதிய கடிதமாக விருந்தபடியால், அவர் பிரேமனது தந்தையென்று நிச்சயித்துக்கொண்டு தன்னருகே யழைத்து, ஆறுதல் சொல்லித்தன் பக்கத்திலிருக்கச் சொல்லினன்.

பிறகு சேஷி, சேஷசாயி முதலியவர்களைக் கொணர்ந்து நிறுத்தினார்கள். அரசன் சேஷசாயியைப் பார்த்து நடந்ததென்னவென்று கேட்க, பாஸ்கர வாத்யார் ஒரு நாள் அகண்ட காவேரிக்குப்போக, அவர்மீதிற் ... கொண்ட சிலர் அன்றிராத்திரி அவர ... குந்து பணத்தைக் கொள்ளை ... பன்ற வாத்யார் புத்திரனைக் ... தான் ஒரு திருடனைப் பிடி ... ஸமயத்தில் இராஜாங்கத் ... று உட்புகுந்து அத்திருடனைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டதல்லாமலும் தனக்கு மின்னுமற்றவர்கட்கும் குடைமாட்டிக் கச்சேரிக்குகொணர்ந்து அடைத்து விட்டதாகவும் சொன்னான். பிறகு சேஷியை விசாரிக்கச் சேஷன் சொன்னதே ஸரியென்று ஒப்புக்கொண்டாள். இது கேட்ட அரசன் மந்திரியைப் பார்த்து "இவர்கள் சொல்வதைக் கேட்டால் பரிதாபமாக விருக்கிறது. இவர்களை விடுதல் செய்வது என்யோசனை. ஆனால் இந்தச் சபையிலுள்ளார் இந்த விஷயத்தைப்பற்றி யேதாவது சொல்ல முடியுமானால் கேட்போம்" என்றான்.

அந்த சமயத்தில் ஆத்ரேயன் எழுந்து சேஷியைப் பார்த்து "வாத்யார் வீட்டுக்கு நீ ஏன் போயினை. நீ இருப்பது வேறு வீடல்லவோ" என்றான். இதைக்கேட்ட சேஷி அவனைத் திட்டி அரசனை விளித்து "இவனும் இன்னொருவனும் எங்காத்துப் பொண்ணுக்கு விஷம் வச்சுக்கொல்ல வந்தார்கள். இப்போது யோக்யன்போலப் பேசுறான்" என்றாள். இது கேட்டரசன் அவள்மீது சந்தேகம் கொண்டு, "கேட்டதற்குப் பதிற்சொல்" லென்றான். வாத்யார் மனைவிக்குத் துணையாகும்படி சென்றதாகச் சொல்லினள். மறுபடியும் ஆத்ரேயனெழுந்து "தம்பிரான் வீட்டுக்கேன் போயினை" என்று கேட்டான். கீரைபறிக்கப் போனதாகச் சொல்லினாள். பின்பு ஆத்ரேயன் பல கேள்விகளைப்போட்டு, சேஷி பண்டாரம் வீட்டுக்குச் சென்று கஞ்சாமருந்து வாங்கிவந்து வாத்யார் வீட்டிலுள்ள யாவருக்கும் (மகன் தவிர) கொடுத்ததாகவும் எல்லாரும் அதைச் சாப்பிட்டு மயக்கம் கொண்டதாகவும் சேஷசாயிமட்டும் சாப்பிடாமல் கீழே எறிந்து விட்டதாகவும், தன்னைப் பார்த்து நீ தம்பிரானா என்று கேட்டதாகவும் பணத்தைக் கொள்ளையடித்ததாகவும் இன்னோரன்ன உண்மைகளை வெளியாக்கினான். பண்டாரத்தை வருத்தி விசாரிக்க, அவனுமுண்மையை உள்ளவாறே வெளியிட்டான். இதில் சேஷியினுடைய கள்ளத்தனமெல்லாம் வந்துவிட்டது. அதன்மேல் சேஷி யார் வீட்டில் வேலைக்கமர்ந்திருந்தாளோ அவர்களைக்கேட்டா லுண்மை தெரியுமென்ற தம் கருத்தை அரசன் வெளியிட்டவுடன், பாநுசேகரர் தன்மகள் கலாவதியுடன் அரசனிடம் சென்றார். பிரேமனுடைய பிரிவாற்றாமையினால் மனம்நொந்து முகம்வாடியிருந்த பெண்ணினிடத்தில் அரசன் சில கேள்விகள் கேட்க, அவள் பதிற்சொல்ல நாவெழாமல் அழுததைக்கண்டு அதற்குக் காரணம் என்னென்று கேட்க, பிரேமனை நினைந்து அழுகிறாள் என்று பாநுசேகரர் சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு அசரீரியின் வாக்

...து சேஷியைச் சில கேள்விகள் கேட்க எல்லாரும் கண்டு மிகவும் ஆச்சரியித்து பயமடைந்தார்கள்.

இதைக் கேட்ட சேஷி "நமது சங்கதிமுழுதும் உள்ள துள்ளபடி வெளியேவந்து விட்டது. இனிமேல் தப்ப இடமில்லை. எல்லாவற்றையும் நாமே சொல்லிவிடுவது நலம்" என்று நினைத்து, தன் விருத்தாந்தத்தையும் தான் மழபாடிக்குப்போக நேர்ந்தகாலத்தில் பிரேமனைப்பற்றி பிரஸ்தாபித்ததாகவும் அங்கிருந்த கடுமுகி "எப்படியாவது பிரேமனைக்கொன்றுவிட்டால், தன் கிள்ளட்டிகையைக் கொடுக்கிறேன்" என்று சொன்னதின்மேல், தான்விஷம்வாங்கிக் கலாவதிக்குக் கொடுத்த கருப்பஞ்சாற்றில் கலந்ததாகவும், மிருதியை பிரேமன் பெட்டியில்வைத்து அவன் மீது சந்தேகமுண்டுபண்ணினதாகவும் ஒப்புக்கொண்டு நடந்த சங்கதிகளை நடந்தபடியே சொல்லிவிட்டாள். பிறகு அரசன், சேஷி பண்டாரம் முதலானவர்க்குத் தண்டனை விதித்தான். இதனிடையில் அரசன் முன்னிலையில் ஒரு பெரியவர் வந்துநின்றார். அவரைக்கண்டு அரசன் திடுக்கிட்டெழுந்து அதிக மரியாதையோடும் வணங்கி சபையாரைப்பார்த்து "பிரேமனுக்கு இடுக்கண் நேர்ந்தவிடத்து அப்போதப்போது அவையாவையுமகற்றி அவனதுயிரைப் போற்றிவந்த மகானுபாவர் இப்பெரியவரே. அவனது விருத்தாந்தமுற்று முரைத்து அவன்மாட்டெனக்கு அன்பெழச் செய்தவரும் இத்தவசிரேஷ்டரே. சமணக்குழியிலாழ்ந்து அஞ்ஞான விருளில் உழலும் அடியேனைக் கருணையொடு கரையேற்றி குருமூர்த்தமாகி நின்று உபதேசித்து எனக்கு ஞானத்தை ஊட்டிய மகானுமிவரே. அடியேன் இவ்வரங்கின் கண்ணிருந்து அறமுறைபிறழாது இவ்வழக்கினுண்மை தேர்ந்து அறமாது அகங்களிப்ப நியாயமுதவக் காரணபூதரானவரும் இஞ்ஞான ரூபியே. பிரேமனுக்கு வந்த ஆபத்தையெல்லாம் நினைந்து அவன் நிரபராதியென அறிந்து அவனுக்கிரங்கிக் கண்ணீர் சொரிந்து அவனது நன்மையேநாடி அவன் மாட்டன்புற்று பின்னர் அவனை யுயிரோடுகண்டு, உவகையோடழைத்து ஆநந்தக்கண்ணீர் சொரியும் யாரும் நன்றி மேற்கொண்டு அன்புபாராட்டித் தெய்வமெனத் தொழவேண்டுவது இப்பெரியவரையே" என்றுரைத்தனன் அரசன். அவையின் கண்ணுள்ளோர் யாவரும் இன்பமும் துன்பமும் ஒருங்கேகொண்டு பிரேமனை யுயிரோடு காணவும் கிடைக்குமோவென்று ஐயுற்றவராய் பிரமிப்படைந்தார்கள். இப்படியிருக்க, பெரியவர் பாநுசேகரரை ஒரு கையிலும் தயாநாதரை மற்றொரு கையினும் பிடித்துக்கொண்டு நீங்களிருவரும் நான் சொல்லுகிற பிரகாரம் நடக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களும் அவரது வார்த்தையைத் தலைமீது கொண்டவர்களாய் அவ்வாறே நடக்கச் சித்தமாயிருந்தார்கள். "பிரேமன் உயிரோடிருக்கிறான். நீங்களிருவரும் ஸம்பந்தஞ் செய்துகொள்ளவேண்டும்" என்றனர். இதைக் கேட்டவுடன் அவ்விருவரும் பரமானந்த மடைந்தார்கள். பிறகு பெரியவர் தன் கட்டைவிரலால் பூமியிலழுத்த, பாலசூரியன்போல அங்கிருந்து தோன்றினான் பிரேமன். யாவருங்கண்டு அற்புதக் கண்ணீர்சொரிந்து அவனை கட்டித்தழுவி அவசமுற்றார்கள். அரசனது பிரேரேபனையின்மேல் பிரேமனுக்கும் கலாவதிக்கும் மங்களகரமாகக் கல்யாணம் நடந்தது. எல்லோரும் மனப்பூர்த்தியாய் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். பின்பு அரசன் பிரேமனைத் தனக்கு மந்திரியாக்கிக்கொண்டான். அதுமுதல் பிரேமனும் கலாவதியும், சரீரமிரண்டாயினும் ஒரேமனத்தராய் தருமம்வழுவாது இல்லறம் நடாத்தி ஸகல போக போக்கியங்களையும் பெற்றதுமல்லாமல், கடவுளினது பாதாரவிந்தத்தையே இடைவிடாது தியானித்து வந்தார்கள். பிரேமனும் ஆத்ரேயனும் இராமனும் பரதனும்போல் வாழ்ந்தார்கள். இது தான் கதையின் சாராம்சம். இனி இக்கிரந்தத்திலுள்ள குணதோஷங்களைப் பற்றிக்கொஞ்சம் விவரிப்போம்.

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. ஏ.

காலஞ்சென்ற ஸர் தி. முத்துசாமி அய்யர் அவர்கள், கே. ஸி. ஐ. இ.

கனம்பொருந்திய ஸர் தி. முத்துசாமி அய்யர் அவர்கள் இந்த ஜனவரி-மீ 25-உ வெள்ளிக்கிழமை விடியற்காலையில் காலஞ் சென்றதைக் குறிப்பிட மிக விசனிக்கிறோம். 15-உ செவ்வாய்க்கிழமை வரையில் கோர்ட்டுக்குப் போய்வந்தவர் அன்று சாய ...ந்திரம் கோர்ட்டிலிருந்து வந்ததும் குளிரும் ... மும்கண்டு படுத்துக்கொண்டார். புதன்கிழமை ... மதிகரித்து வியாழக்கிழமை மறுபடியும் ... சுரத்தோடு இடதுகாலில் வீக்கமும் க... மறுபடியும் சனிக்கிழமையன்று வீ... அதிகமாய்ப் பிழைக்கரிய ஸ்திதியி... றுக்கிழமை முதல் அநுகூலம்... ளுக்குள் வியாதி பலப்பட்... விடியற்காலையில் 3-மணி 35-... ன்றி அமைதியாய்ப் பிராணன்...

இறந்ததால் இந்தியா தன் அருமையான உத்தமபுத்திரர்களில் ஒருவரை யிழந்தது. இவர் தம் குணத்தாலும், நலத்தாலும், புத்தி வித்தை சாமர்த்திய விசேஷத்தாலும் இவ்விராஜதானிக்கு ஒருவராகவிருந்து ஒப்பற்று விளங்கிவந்தார். அப்படிப்பட்டவரை யிழந்ததால் நேர்ந்த நஷ்டம் இலகுவில் ஈடுகட்டக்கூடியதாயில்லை. கல்வித்திறனிலும் புத்திவலிமையிலும் அவர் மற்றெல்லாரையும்விட உயர்ந்து ஆகாயத்தையளாவி நின்றதுபோலவே பொறை, சாந்தம், சத்தியம், இன்சொல், பெருந்தன்மை முதலிய சற்குணங்கள் அவரிடத்து விசேஷித்து விளங்கின. இவரது பெருங்குணத்தை இவ்வளவென்று இந்தச் சிறு பத்திரிகையில் எழுத அடங்காது. இவர் தமது உலையா முயற்சியினல் ஒருக்கணமேனும் வீண்பொழுது போக்காமல் கல்வியைக்கற்று மிக்கபாண்டித்திய மடைந்து துரைத்தனத்தில் பலதுறைகளி லமர்ந்து பலநாள் வேலைபார்த்துக் கடைசியாக 1878-ம் வருஷத்தில் ஹைகோர்ட்டு நீதியதிபரானர். மற்றவேலைகளெல்லாவற்றினுள்ளும் நியாயாதிபத்துவம் மிகவும் வருத்தமுடையது. வாதி, பிரதிவாதிகளாகிய இரண்டு கக்ஷிக்காரர்களும் நன்று நன்றென்று நெஞ்சார ஒப்புக்கொள்ளும்படி நியாயமாகத் தீர்மானிக்குந்திறமை இந்த மஹாபுருஷரிடங் குடிகொண்டிருந்தது. நியாயவாதிகள் தங்கள் சாமர்த்தியத்தினல் பொய்யை மெய்போலவும், மெய்யைப் பொய்போலவும் எவ்வளவுதான் இவர் முன்னிலையில் எடுத்துவாதிப்பினும் அதிகப் பொறுமை பாராட்டி அவர்களோடு வாதஞ்செய்து உண்மையைக் கண்டறிந்து நியாயமான தீர்மானஞ்செய்வதில் இவரின் மிக்காரை நாம் கண்டதில்லை. இத்தனை வேலையிருந்தும் வேதியர்குலக்கொழுந்தாகிய இவர் தமது மரபினுக்குரிய கருமங்களையெல்லாம் லோபமின்றிச் செய்வதிற்றவறுவதில்லை. கல்விச் செருக்கும், செல்வச் செருக்கும் இந்தச் செழுங்குணத்தோரை அணுகினதில்லை. நியாயவாதிகளெல்லோரும் இப்பேராற்ற லுடையோரை எப்பொழுதும் உச்சிமேல் வைத்துக் கொண்டாடுவார்கள். இவர் தமது ...ம்பைப்போக்கி என்றுமழியாத புகழுடம்பை ...ரானர். ஹைகோர்ட்டில் இவர்செய்த தீர் ...பிரிகவுன்ஸ் அப்பீலில் பெரும்பான்மை ...ய்யப்பட்டுவந்தன. வெகுகால அநு ...ரியோராதல்பற்றி ஹைகோர்ட்டி ...திபர்கள் தங்களுக்கு வருத்த ...ம் சிக்கலான வியாஜ்ஜியங் ...போது இவரது அபிப்பிராயத் ...ணங்கத் தீர்மானிப்பதுண்டெ

ன்றல் இவர் பெருமையை நாமென்னென்று சொல்லவேண்டும். தம்மவர், பிறரென்று இவர் எப்பொழுதாயினும் பேதம் பாராட்டிப் பக்ஷபாதஞ்செய்ததில்லை.

"இருவர்தஞ்சொல்லையும் எழுதரங்கேட்டே
இருவரும்பொருந்த உரையாராயின்,
மநுநெறிமுறையின் வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின் றழுதகண்ணீர்
முறையுறத்தேவர் மூவர்காக்கினும்
வழிவழியீர்வதோர் வாளாகும்மே."

என்பதின் உண்மையை முற்றும் உணர்ந்து அந்தத் தோஷத்திற்குத் தாம் சிறிதும் பாத்திரராகாதபடி வெகு ஜாக்கிரதையாய்த் தமது கடமையைச் செலுத்திவந்த மஹாபுருஷர் இவர்.

வெளியாடம்பரங்களுக் கிடந்தரும் பொதுவிஷயங்களில் அவர் பிரவேசியாதிருந்தபோதிலும் உண்மையில் ஜனக்ஷேமத்தை நாடிய விஷயங்களில் அவரையண்டிக் கேட்டார்க்குத்தக்க புத்திகூறி ஆதரவளிக்கப் பின்வாங்கினவரில்லை. 'அறிவைப்பரவச் செய்வதற்கான ஏற்பாடு' விஷயமாய் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தை கொஞ்சமல்ல. இவ்விவேகசிந்தாமணியை நடத்துவதில் இடுக்கண் நேரிட்டபோதெல்லாம் இனியசொற்கூறித் தைரியம்சொல்லி 'நன்மை கடைப்பிடி' என்று உற்சாகப்படுத்திவந்ததை நாம் எக்காலும் மறக்கபோகாது. எவ்வளவு வேலை நெருக்கமாயிருந்தாலும் அத்துடன் ஒருமணி, அரைமணி நேரம் செலவிட்டு அவர் பார்வைக்குக் கொண்டுவந்த விஷயங்களையெல்லாம் படித்துப் பார்த்துப் புத்திமதிகள் சொல்லித்தேற்றிப் பொதுஜன ஆதரவு கிடைக்கும் பொருட்டுத் தமது சிறந்த அபிப்பிராயத்தையும் எழுதிக்கொடுப்பார். ஆதிமுதல் அவர் இப்பத்திரிகைக்குப் போஷகராயிருந்ததோடு அடிக்கடி நம்மைத்தேற்றி உற்சாகப்படுத்திவந்ததே இப்பத்திரிகையை எத்தனையோ விக்கினங்களுக்கிடையிலும் கைசோரவிடாது காப்பாற்றி நடத்திவந்ததற்கு ஒரு முக்கிய காரணமாகச் சொல்லலாம். இறந்தவர் நலத்தையும் குணத்தையும்பற்றி நினைக்க நினைக்க மனம் நைந்துருகுகிறதேயன்றி மேலேயெழுதக் கையோடவில்லை. ஆகையாலிப்பொழுது அவருடைய பிறப்பு வளர்ப்பு விவரத்தைமட்டும் சுருக்கமாயெடுத்துக் கீழே பிரசுரிக்கிறோம்:—

கனம்பொருந்திய ஸர் திருவாரூர் முத்துசாமி அய்யர் கே. ஸி. ஐ. இ. அவர்கள், வெங்கிடநாராயண சாஸ்திரியவர்களின் புத்திரர். இவர் 1832-ளு ஜனவரி-மீ 29-உ வச்சுவாடி யென்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் 8-வயதுப் பையனாக விருந்தபொழுது இவருடைய தகப்பனார் அவர் நேத்திரப் பார்

...க்கும் தௌர்ப்பாக்கியமுள்ளவரானார். ...ார்வை யிழந்துபோகவே, இவரும் இவ ...யது மூத்தவரான இவருடைய ஜேஷ்ட ...் குடும்பத்தை இரக்ஷிக்கவேண்டி நேரிட் ...ருடைய தாயார் திருவாரூரில் சம்பத் ...கிராசுதாரரின் புத்திரியாதலால், அந்த ... பிள்ளைகள் நல்ல வித்தியாப்பியாசம் ...மென்று அவள் பிறந்த ஊருக்கு அவர் ...காண்டுபோய்த் திருவாரூரில் குடியே ...யாரின் மேன்பார்வையின்கீழ் முத்து ...ழில் கொஞ்சம் வித்தை பயின்று, ...ய 12-ம் வயசில் திருவாரூர் தா... ஒரு நாட்டுக் கரணனுக்குள்ளி... கற்றுக்கொண்டுவந்தார். அப்... வந்தசம்பளம் மாசம் 1-ரூபா. ...த்தை முதல் முதல் வாங்கித் ...ண்டுபோய்க் கொடுத்தபொ... சந்தோஷத்துக்கும் பெரு... ்தி அவர் சிரேஷ்ட நீதி ...லும் அவர் மனம் அவ் ... பெருமைபாராட்டி யறியா ... சொல்வதுண்டு. இவருக்கு 14 வய... ிவரையன்பாயாதரித்துக் கல்விபயிலச் செய்துவந்த தாயாரை இழக்கும் தௌர்ப்பாக்கிய முடையவரானார். தாயாரை யிழந்து தகப்பனாரும் கண்களை யிழந்தவராயிருந்ததுபற்றி இவர் தமது படிப்பை விட்டுவிட்டு ஒரு கரணனுக்குள் உதவியாக விருந்து வேலைபார்த்து வரவேண்டி நேரிட்டது. 1846-ம் வருஷத்தில் ஸர் ஹென்ரி மான்ட் கோமரி துரையின் சுதேச நேசராகிய முத்துசாமி நாயகர் என்பவர் திருவாரூருக்குத் தாசில்தாராக வந்தார். கணக்கனுதவியாயிருந்த முத்துசாமி அவர் முன்னதோகணக்கு விவரம் சொல்லப்போய் அவரெதிரில் கைகட்டி நிற்கையில் மடியில்வைத்திருந்த இங்கிலீஷ் முதற்பாடப்புஸ்தகம் ஒன்று கீழேவிழுந்தது. அதைப்பற்றி விசாரித்ததில் பையன் அப்புஸ்தகத்தை வைத்துக்கொண்டு ஒழிந்த வேளைகளில்தானே இங்கிலீஷ் படிக்கக்கற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரயாசைப்பட்டு வநததாகத்தெரியவந்தது. இதையறிந்த தயாளுவான தாசில்தார் முத்துசாமி அய்யருடைய புத்திசாலித் தனத்தையும் கல்வி கற்கவேண்டுமென்று அவருக்கிருந்த ஆவலேயும்கண்டு உதவிக் கரணம் வேலையைவிட்டு நாகப்பட்டணத்திலுள்ள மிஷன் ஸ்கூலில் சேர்ந்து வாசிக்கும்படி புத்தி சொல்லி அதற்கு வேண்டிய திரவிய சகாயமும் செய்தார். இவருடைய தயாளத்தாலும் தருமசிந்தையாலும் முத்துசாமி ஐயர் நாகப்பட்டணத்தில் ஒரு வருஷம் வாசித்துவிட்டுப் பிறகு சென்னை ஹைஸ்கூல், ப்ரெஸிடென்ஸி காலேஜாகும் சமயத்தில் அந்தஸ்கூலிலிருந்து அப்பொழுதுள்ள மிகவும் உயர்ந்த பரீக்ஷையில் முதல் வகுப்பில் கௌரதையோடு தேறி மிகவும் மேலான ஸர்டிபிகேட்டு கொடுக்கப்பெற்றார். அத்தோடு அந்த வருஷம் இங்கிலீஷில் முதல்தர பிரபந்தம் ஒன்று எழுதுகிறவருக்கு லார்ட் எல்பின்ஸ்டோன் பேரால் கொடுக்கப்படும் 500-ரூபாய் வெகுமதியையும் தாமே கிடைக்கப்பெற்றார். இந்த சமயத்தில் அப்பொழுதுள்ள "கௌன்ஸில் ஆப் எடியூகேஷன்" சபையார் இவ்விராஜதானியிலுள்ள காலேஜ் மாணுக்கர்களெல்லாம் போட்டிபோடத் தக்கபரீக்ஷையொன்று நடத்தினார்கள். அதிலும் முதலாகத்தேறி சர்க்காரில் எந்த வேலைபார்க்கவும் இவர் லாயக்கானவரென்று இவருடைய பெயர் 'போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்'டில் பிரசுரிக்கப்படப்பெற்றார். அப்பொழுது மேற்படி பரீக்ஷையில் ஒரு பரீக்ஷிகராயிருந்த மிஸ்டர் ஹாலோவேயும், ஹைஸ்கூல் கமிட்டி செகிரிடேரியாகவிருந்த ஸர் அலெக்சாண்டர் ஆர்பத்நட்டும் இவர் திறமையையும் புத்திசாலித்தனத்தையும்கண்டு இவரைக் கவனத்தில் வைத்துக்கொண்டார்கள். இந்த சமயத்தில் ஹைஸ்கூலாகவிருந்து ப்ரெஸிடென்ஸி காலேஜாக மாறின ஸ்தாபனத்துக்குத் தலைவரான மிஸ்டர் பௌவல் துரையவர்கள், இங்கிலாந்தில் நடக்கும் ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷையில் தேறிவரும் பொருட்டு அத்தேசத்துக்குப்போக இவருக்கு இஷ்டமாவென்று கேட்டார். ஏற்கனவே இவருக்கு விவாகமாய்விட்டபடியால் சமுத்திர யாத்திரை போய்வரும் பிராமணனுக்குவரும் தொந்தரவுகளுக்கு பயந்து இவர் இங்கிலாந்துக்குப்போக மறுதலிக்கவேண்டி நேரிட்டது. இவர் ஹைஸ்கூலிலிருக்கும்காலத்தில் ஸர் ஹென்ரி மாண்ட்கோமரி துரை இவர் விஷயத்தில் அதிகசிரத்தை யெடுத்துக்கொண்டு இவரை மிகவும் அன்பாகப் பார்த்துவந்தார். இவர் மாணுக்கராயிருந்தகாலத்தில் தஞ்சாவூர் கலெக்டர் மிஸ்டர் பிஷாப், ராஜா ஸர் டி. மாதவராவ், ம-ா-ஸ்ரீ ஹரிராவ் ஆகிய இவர்கள் இவருக்கு வேண்டிய ஒத்தாசை செய்துவந்தார்கள். இவர் சீமைக்குப்போக மறுதலித்ததின்பேரில் ஸர் ஹென்ரி மாண்ட்கோமரி துரை இவரைத் தஞ்சாவூர் கலெக்டராபீஸில் ரிசார்ட் கிபராக முதல் முதல் சர்க்கார் வேலையிலமரச்செய்தார். அதிலிரு... பிறகு 150-ரூபாய் சம்பளத்தில் ஸ்கூல் டிப்டி ... பெக்டராக வந்தார். அவ்வேலையிலிருக்கு... ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ரெவரெண்ட் ...

சார்ட்ஸ் இவரைப்பற்றி அனுகூலமாக வித்தியாபி விர்த்தியிலாகாத் தலைவர் ஸர் அலெக்ஸாந்தர் ஆர் பத்நட்டுக்கு ரிபோர்ட்டு செய்தார். இந்த வேலையி லிருக்கையிலே இவர் பி. எல். பரீக்ஷைக்கு வாசித்து அப்பரீக்ஷையில் தேறினர். பிறகு டிஸ்திரிச்ட் முனிசீபு வேலைக்கு நியமிக்கப்பட்டு அவ்வேலையில் கொஞ்சகாலமிருந்துவந்தார். அவ்வேலையிலிருந்தபொழுது ஸிவில் அண்டு ஸெஷன் ஜட்ஜாகவிருந்த மிஸ்டர் போசாம்ப் என்பவர் அவருக்குத் தெரிந்த சொற்ப சுதேசிகளில் இவர் ஒருவர் தன்னோடு சரிசமமாச ஜட்ஜ் ஸ்தானத்தி லுட்கார்ந்து நியாயம் செலுத்தத் தக்க சாமர்த்திய முள்ளவரென்று சொன்னர். இவ் விராஜதானியில் இனம் கமிஷன் ஏற்பட்டபொழுது மிஸ்டர் ஜியார்ஜ் நோபிள் டெய்லர் இவரைத்தம் முன் ஒரு டிப்டி கமிஷனராகவிருக்க நியமித்துக் கொண்டார். இதில் 2-வருஷமிருந்தபின் டிப்டி கலெக்டராக நியமிக்கப்பட்டு தஞ்சாவூர் ஜில்லாவில் 2-தாலுகாக்களை வைத்துக்கொண்டு மேன்பார்வை செய்துவந்தார்.

இவர் டிப்டி கலெக்டராக விருக்கையில் இவர்முன் ஒரு முக்கியமான ஸெஷன் கேஸ் விசாரணைக்கு வந்தது. அக்கேஸில் மிஸ்டர் ஜான் ப்ரூஸ் நார்டன் எதிரி கக்ஷி கௌன்ஸெலாக விருந்தார். அக்கேஸ் விசாரணையில் மிஸ்டர் நார்டன் இவருடைய சாமர்த்தியத்தைக் கண்டுகொண்டு இவரை ரெவினியூ டிபார்ட்மெண்டில் தூங்கப்போடக்கூடாதென்று ஜூடிஷியல் டிபார்ட்மெண்டுக்கு நியமிக்கப்படும்படி சிபார்சு செய்தார். அதன்பேரில் 1865-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் தென்சன்னடம் ஸப்-ஜட்ஜாக நியமித்தார்கள். அங்கேயவர்செய்தவேலையின் திறத்தைக் கண்டு கவர்ன்மெண்டார் அவரை ஓர் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டாக நியமித்தார்கள். அதிலிருந்து சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராக நியமிக்கப்பெற்றூர். 1871-ம் வருஷத்தில் புதிதாய்ச் செய்த ஸிவில்கோர்ட்டுகள் ஆக்ட்டு பிரசுரிக்கப்பட்டதும் லார்ட் ஹோபார்ட் இவரை ஒரு டிஸ்திரிக்ட் ஜட்ஜாக நியமித்தார். ஆனல், இந் நியமனம் செய்தது அப்பொழுது சரியல்லவென்று ஆக்ஷேபிக்கப்படக் கடைசியில் இவர் பேரை கெஜட்டில் பிரசுரஞ் செய்யாமலே அந்நியமனம் ரத்துசெய்து விடப்பட்டது. 1877-ம் வருஷத்தில் மகாராணியார்க்கு டில்லியில் சக்கரவரத்தினிபட்டம் சூட்டப்பட்டபொழுது ம-ா-ா-ஸ்ரீ முத்துசாமி [illegible] டில்லியில் கூடிய மகாசபைக்கு வந்திருக்க [illegible] அழைக்கப்பட்டு, போயிருந்தார். அப்பொழுது லார்ட் லிட்டன் அச்சமயம் ஞாபகத்தி லிருக்க ஒருபதக்கமளித்தார். அடுத்த [illegible] ஷத்தில் மாக்ஷிமை தங்கிய மகாராண[illegible] ம-ா-ா-ஸ்ரீ முத்துசாமி அய்யருக்கு ஸி. ஐ. [illegible] மளித்தார்கள். அந்த வருஷம் ஜூலை மாச[illegible] ன்னே கவர்னராயிருந்த பக்கிங்ஹாம் பிர[illegible] இவரை ஹைகோர்ட்டில் ஒரு ஆக்டிங் ஜ[illegible] க்கு நியமிக்கும்படி சிபார்சு செய்தார்[illegible] ஆக்டிங் ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக[illegible] பிறகு அவ்வேலையில் காயம் செய்யப்[illegible] டைய கடைசிகாலம் வரையில் அவ்[illegible] மகா கீர்த்திபெற்று இறந்தார். 18[illegible] சீப் ஜஸ்டிஸ் ஸர் ஆர்தர் காலின்ஸ்[illegible] த்துக்கு ரஜா பெற்றுக்கொண்ட[illegible] முத்துசாமி அய்யர் அவர்கள் அ[illegible] அவருடைய ஸ்தானத்தில் சீப்[illegible] வேலைபார்த்துவந்தார்.

1892-ஆ மே-ீ மஹா[illegible] மகோற்சவகாலத்தில் அவ[illegible] என்னும் உந்நதபட்டம் அ[illegible] ஸர் பட்டம் பெற்று [illegible] என்று அழைக்கப்பட்டு வ[illegible] 17-வருஷங்களாக ஹைகோர்ட்டு ஜ[illegible] லிருந்து வந்திருக்கிறர். இவரைப்போ[illegible] காலம் விடாமல் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தி லிருந்து வந்தவர் ஒருவருமில்லை. இவரைப்போல் அவ்வேலையில் விடாது கஷ்டப்பட்டுழைத்தவரு மில்லை. இவரைவிடத் திறமைசாலியென்று பெயரெடுத்தவருமில்லை. சாகும்பொழுது அவருக்கு வயசு 63-ஆகியும், மற்ற ஜட்ஜகள் எல்லோரிலும் இவரே அதிக கஷ்டப்பட்டுழைத்து அதிகமாய் கேஸ்களையும் பைசல் செய்து வந்தார். இவர் செய்த தீர்ப்புகள் அனேகம் சிக்குமுக்கான சட்ட விஷயங்களை வெகு துல்லியமாய் விளக்கிக்காட்டும் வி[illegible]க்கியானங்களாக விளங்குகின்றன. கவர்ன்மெண்டார், தமது உடன் ஜட்ஜிகள், பாரிஸ்டர்கள், வக்கீல்கள், கக்ஷிக்காரர்கள், பொது ஜனங்கள் எல்லாருடைய நம்பிக்கைக்கும் பாத்திரராய் எல்லாராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டவர் இவர் ஒருவரே. இவ்வளவு அரிய கீர்த்திபெற்றவர் வேறெவருமில்லை. எல்லா விதத்தாலும் இவ்விராஜதானிக்கு ஒரு மனுஷ ராயிருந்தவர் இறந்தார். அவர் இறந்ததால் காலியான ஜட்ஜ் வேலையை நிறப்பப்பலருளர். ஆனல் அவருக்குப் பதிலாய்ச் சொல்லத்தக்கவர் ஒருவருமில்லை. இல்லாக்கொடுமை இந்தியாவின் வறுமையே. அவ்வறுமைநீங்கவருங் காலம் எப்போதோ. அது காறும் இந்தியா தலையிறங்கி நிற்க நம்மவர் மனதிரங்கித் தவிக்கலாகும்.

இந்தியாவில் ஏழைக்குடிகளின் நிலைமையும் அவர்களை விர்த்திக்குக் கொண்டுவரும் வகையும்.

I.—ஏழைக்குடிகள் பெரும்பாலும் கடனில் மூழ்கியிருக்கிறார்களென்பது.

நாட்டுப்புறத்தில் வாசஞ்செய்யும் ஜனங்களில் ஏழைகளாயுள்ள ஜனங்கள் வரவரக் கடனில் மூழ்கி கடைத்தேற முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறார்களென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இந்த ஏழைஜனங்கள் பெரும்பாலும் பயிர்த்தொழிலைக் கொண்டு சொற்பஜீவனம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். நெசவு வேலைசெய்கிறவர்கள் முதலான மற்றத்தொழிலாளிகளும் இவர்களிலனேகரிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் கைமுதலின்றி தங்கள் உழைப்பைக்கொண்டே சொற்பஜீவனம் செய்து வரும் வேலைக்காரர்கள்.

முதலும் உழைப்பும் ஒன்று சேரவேண்டுமென்பது.

எந்த வேலையாகட்டும் கைம்முதலோடு உழைப்பும் சேர்ந்தாலன்றி காரியம் பயன்படுகிறதில்லை. உழைப்பாளியின்றி முதலாளியால் ஒன்றும் செய்யமுடியாது. பொதி பொதியாய்ப் பணமிருந்தாலும் அதை உபயோகப்படுத்தி விர்த்திசெய்ய [illegible] உழைப்பு இல்லாவிட்டால் அவனுடைய பணப்பொதிகளெல்லாம் அவனுக்கு வீண்சுமையேயாகும். உழைப்பாளிக்கும் முதலாளியின்றி வேலையாகாது. ஒருவன் எவ்வளவு புத்திசாலியாயிருந்தாலும் எவ்வளவு பாடுபட்டுழைப்பவனாயிருந்தாலும் முதலில்லாமல் யாதொரு வேலையும் செய்ய அவனாலாகாது. இந்த முதலைத்தானே கையிலிருந்துபோட்டாலும் சரி பிறர் கொடுத்துதவினாலும் சரி, முதல்மட்டும்வேண்டியது தீரா அவசியம். இப்படி முதலுக்கு உழைப்பும் உழைப்புக்கு முதலும் துணையாகவேண்டியது தீரா அவசியமாயினும் அவையிரண்டும் மட்டும் ஒரே இடத்தில் சேர்ந்திருப்பதுதான் இவ்வுலகில் காண அரிய காக்ஷியாயிருக்கிறது. இருப்பிடம் இப்படி வேறுபட்டிருப்பினும் வேலைக்கு அவை யிரண்டும் இணைபிரியாதொத்திருக்கவேண்டிய தவசியம். இவ்விதிக்கு மட்டும் ஒருபோதும் விலக்கில்லை. இத்தேசத்திலும் மற்ற

உழைப்பும் முதலும் ஒன்று சேராமை பல துன்பங்களுக்குக் காரணம்.

எத்தேசத்திலும் ஜனக்ஷேம சம்பந்தமாயுண்டாகும் இக்கட்டு, இடையூறுகளும், மற்றுமுள்ள வில்லங்கங்களும் நேரிடுவதற்கெல்லாம் காரணம் முதலாளி, உழைப்பாளி என்கிற இருதரத்தாருக்கும் பொருத்தமின்மையாலுண்டாகும் வித்தியாசங்கள் வேறுபாடுகளேயாம். ஒரு தேசம் மொத்தத்தில் எவ்வளவு செல்வமுள்ளதாயினும் அத்தேசத்துக்குள் வறுமையின் கொடுமையதிகரித்து எதிர்பாராத ஆபத்துக்களெல்லாம் விளைவிப்பது சகஜமாயிருப்பதும் மேற்சொல்லிய காரணத்தாலேயே.

சில உதாரணங்கள்.

அமெரிக்கா "ஐக்கிய மாகாணங்கள்" உலகத்திலுள்ள மற்ற எல்லாத் தேசங்களையும் விடச்செல்வத்தில் மிக்கதாயினும் வறுமையின் கொடுமை அங்கு புலப்படுவதுபோல் வேறெங்கும் புலப்படுவதில்லை. சில மாதங்கள் முன் அந்நாட்டில் வறுமையால் நொறுங்கிய உழைப்பாளிகள் பட்டாளம் பட்டாளமாகச் சேர்ந்து ஒரு பெரிய சேனையாகத்திரண்டு, "கல்லுளிமிண்டன் போ'றவழி, கதவுகிதவெல்லாம் தவிடுபொடி" யென்று பாடிக்கொண்டு நாட்டுப்புறத்தில் நம் தெருக்களில் வரும் பிச்சைக்காரர்களைப்போல் அவர்கள் போனவழியெல்லாம் ரயில் தண்டவாளங்களைப் பிடுங்கியெறிந்து, பயிர்களை யழித்துத்தின்று ஹதம் செய்துகொண்டு எங்களுக்கு வழியுண்டுபண்ணும்படி இராஜாங்கத்தி[illegible] தலைவாசலில் [illegible]த்துக் கேட்போமெ[illegible]டி வந்து [illegible]று அத்தேசத்துத் தலைநகருக்கு[illegible] பாளையமிறங்கிக்கொண்டு "கல்லுளிமிண்டத்தனம்" செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவர்களை யடக்கி வழிக்குக்கொண்டு வருவது அத்தேசத்துத் துரைத்தனத்தாருக்கு அசாத்தியமாயிருந்தது. இங்கிலாந்தில் இதே காரணத்தாலுண்டாகும் துன்பங்கள் அடிக்கடி முதலாளிகளுக்கு முழைப்பாளிகளுக்கு முண்டாகும் சண்டை சச்சரவுகளிலும் அது மூலமாயுண்டாகும் கலகங்கள், குழப்பங்களிலும், உழைப்பாளிகள் கட்டுப்பாடாய் வேலைக்குப்போகாமல் நின்றுவரும் ஏற்பாட்டால் அவர்களில் அதிக ஏழைகளான அனேகர் படும் பேரவஸ்தைகளிலும் வெளியாய் விளங்குகின்றன. பிரான்ஸ்தேசத்தில் இவ்வறுமைப் பிணிவாய்ப்பட்டவர்கள் 'அனார்கிஸ்ட்ஸ்' என்று பேர்வைத்துக்கொண்டு இப்பொழுதுள்ள ஜனசமூக ஏற்பாடு இராஜாங்கக்கட்டுப்பாடு இவைகளெல்லாம் தங்களுக்கு அநீதிவிளைப்பனவாயிருக்கின்றனவென்று துரைத்தனம் ஜனசமூகம் எல்லாம் தலைகவிழச்செய்வதே தங்கள் கடமையெனக் கங்கணம் கட்டிக்கொண்டு, எல்லாவற்றையும் அழிக்க ஏற்பட்ட நாசகாலர்களாகத் தலைக்கிளம்பியிருக்கிறார்கள். மன்னர், மந்திரிமார், மற்றுமுள்ள உயர்ந்த ராஜாங்க அதிகாரிகள், இவர்களைக்கொல்வதும், துரைத்தன [illegible]

யஸ்தலங்கள் இவைகளை யழிப்பதும், வெடிகுண்டு போட்டு நாசஞ்செய்வதும் இவர்கள் மேற்போட்டுக் கொண்ட முதற்கடனாக எண்ணி நடந்துவருகிறார்கள்.

உருஷியா, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய ஒவ்வொருதேசத்திலும் இவ்வகைத் துன்பங்கள் ஒவ்வொரு விதமாக வெளியாகி வருகின்றன.

இந்தியாவில் வறுமையின் கொடுமை.

நம் இந்தியாவில் வறுமையின் கொடுமையானது மேற்குத் தேசத்தார் வறுமையை வெளிப்படுத்தும் சண்டை, கலகம், குத்து, வெட்டு, குண்டுவெடி முதலிய கொரேங்கள் மூலமாக வெளிப்படாவிடினும் அவ்வறுமையால் விளையும் துன்பங்கள் அளவில் குறைந்தனவாகவில்லை. வறுமையின் கொடுமை மற்றத் தேசங்களைவிட இத்தேசத்தில் அதிக நாசம் விளைப்பதாகவே காட்டிவந்திருக்கிறது. காலத்துக்குக்காலம் நேரிடும் கருப்புகள் பஞ்சங்களும், அக்காலங்களில் வியாதி, வெக்கை, வயிற்றிற்கின்மை இவை காரணமாக மடியும் லக்ஷக்கணக்கான ஜனங்களுமே இத்தேசத்தில் வறுமை செய்யும் கடூரமான கொடுமைக்குப் போதுமான அத்தாக்ஷிகளாம்.

செய்[illegible]ருக்கும் சாதகங்கள்.

ரயில்கள், கால்வாய்களாலும் மற[illegible]றுமுள்ள போக்குவரத்துக்கனுக்[illegible]மான [illegible]னேக சாதனங்களாலும் பிரிடிஷ் துரைத்தனத்த[illegible] காலங்களில் ஏழை ஜனங்கள் கால்நடைகளைப்போல் மந்தை மந்தையாகச் சாகாமல் தடுக்கத் தக்க உபாயங்கள்தேடி உதவிபுரிந்திருக்கிறார்களென்பது வாஸ்தவம்; பிரிடிஷ் துரைத்தனத்தின்கீழ் நாம் எத்தனையோ சுகசௌக்கியங்களை யனுபவித்து நாலாவிதத்திலும் விர்த்தியடைந்து வருகிறோமென்பதும் வாஸ்தவமே. இதெல்லாம் வாஸ்தவமாயினும், சாதாரணமாய் இத்தேசத்தில் விசேஷித்துப் பரவியுள்ள வறுமையின் கொடுமையை இன்னும் தணித்து அவ்வறுமைவாய்ப்பட்டவர்கள் கடைத்தேறிப் பிழைக்கும் வழிதேடி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் பொருட்டு

இன்னும் செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்களென்பது.

பிரிடிஷ் துரைத்தனத்தார் அவர்களுக்குச் சாதகமாக இன்னும் எவ்வளவோ செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை அவர்களும் மறுக்கார்களென்பது திண்ணம்.

ஏழைகளைக் கடைத்தேறச்செய்யும் உதவி முதலில் வியவசாயிகளுக்குதவிபுரிவதா யிருக்கவேண்டுமென்பது.

வியவசாயமே பெரும்பான்மையான ஜனங்களுக்கு ஜீவனமாயிருக்கும் இந்தியாவைப்போலொத்ததேசத்தில் வறுமையில்மூழ்ந்தி வருந்தும் ஜனங்களுக்குதவிபுரியக்கருதி சர்க்கார் செய்யும் ஏற்பாடு எதுவும் முதலில் வியவசாயிகளையே தேற்றத்தக்கதாய் அவர்களில் ஏழையாயுள்ளோர் வறுமையடிபட்டு வாடிப்போகாமல் தன்முயற்சியால் தாங்களே முன்னுக்குவரத் தூண்டி அதற்கு வேண்டிய ஒத்தாசை செய்வதாயிருக்கவேண்டுமென்பது அவசியம்.

வியவசாயிகள் பெரும்பாலும் கடனாளிகள்.

வியவசாயிகள் நிலைமையைப்பற்றி விசாரித்தால் அவர்களில் பெரும்பாலார் அற்பமுதல் அல்லது அதுவுமின்றிக்கடனில் மூழ்கினவர்களாயிருப்பதே விசேஷமாய்ப் புலப்படுகிறது.

இவ்விராஜதானியின் மொத்தக்கடன்.

திவான்பஹதூர் ஸ்ரீனிவாசராகவய்யங்கார் அவர்கள் அவர் எழுதியிருக்கும் புஸ்தகத்தில்* இவ்விராஜதானி முழுமையிலுமுள்ள கடன் மொத்தம் 29-கோடி ரூபாயிருக்குமென்று ஒருவாறு கணக்கிட்டுத்திட்டம்போட்டிருக்கிறார். இந்தக்கடன் எல்லாம் வியவசாயிகள் நிலத்தை ஈடுவைத்து வாங்கியகடனல்ல. இதில் ஒருபாகம் வீட்டின்மேல் வாங்கின கடன்கள் சேர்ந்திருக்கிறது. இம்மொத்தக் கடனில் நிலத்தின்மேல் வாங்கிய கடன்தொகை இவ்வளவென்றும் இவ்விராஜதானியிலுள்ள பூஸ்திதிகளின் மொத்தக்கிரயம் இவ்வளவென்றும் தெரிந்துகொள்ள வகையில்லையால், வியவசாயிகள் கடன்பட்டிரு[illegible]த்தளவாய் மதிப்பிட[illegible]பது சாத்தியமில்லை யென்கிறார். சுமார் $3\frac{1}{2}$-கோடி ஜனங்களுள்ள இவ்விராஜதானியில் 29-கோடி

கடன்தொகை அதிகமென்பது.

ரூபாய் வரையில் ஜனங்கள் கடன்பட்டிருக்கிறார்களென்பதைப் பார்த்தால் ஜனங்கள் அதிகமாய்க் கடனில் மூழ்கியிருக்கிறார்களென்றே படுகிறதென்று அவரே ஒப்புக்கொள்கிறார். வியவசாய வகுப்பு ஜனங்கள் மட்டும் பட்டிருக்கும் கடனைபெடுத்துக்கொண்டு மற்றத் தேசங்களில் அவ்வகுப்பார் கடன்பட்டிருப்பதோடு சமதலையாக ஒப்பிட்டுப்பார்த்தால் இவ்விராஜதானிக் குடிகள் **மொத்தத்தில்** அதிக கெட்ட நிலைமையிலில்லையென்று காட்டலாமெனச் சொல்லிக் கொண்டு போகிறார். ஆனால் அது நாமெடுத்துக் கொண்ட விஷயத்துக்குச் சம்பந்தப்பட்டதாயில்லையாதலால் அதைப்பற்றி நாம் விசாரிக்க வேண்டியதில்லை. இவ்விராஜ[illegible]னியிலுள்ள வியவசாய வகுப்பு ஜனங்களில் பெரும்பாலார் அற்ப முதல் அல்லது

---

* Forty Years' Progress of the Madras Presidency, Govt. Press, Madras.

கடனில் மூழ்கியிருக்கும் குடிகளைக்கடைத்தேறச்செய்ய வேண்டுமென்பது.

அதுவுமில்லாத ஏழைகளென்றும், அவர்கள் கடனில் மூழ்கிக் கஷ்டப்பட்டு வருகிறார்களென்றும், அவர்கள் கடைத்தேற வழிதேடி அவர்களுக்குச்சாதகமாய்ப் பலவிதத்தில் ஒத்தாசைபுரிந்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமென்றும் நாம் சொல்லவந்ததை அவரே ஒப்புக்கொள்கிறார்.

வியவசாயிகளின் நிலைமை.

வியவசாய ஜீவனமுள்ள ஜனங்களின் தற்காலநிலைமையை உற்றுநோக்கில் எல்லாரையும் ஒரு மட்டத்துக்குக்கொண்டுவரும் பிரிட்டிஷ் துரைத்தனத்தின் சக்தி அங்கே அதிகமாய் விளங்குகிறது. வியவசாய வகுப்பாருக்குள் மேலந்தஸ்திலுள்ளவர்கள் அந்நிலைதவறிக் கீழ்நிலைக்குவர, மிகவும் கீ[illegible]யுள்ளவர்கள் கொ[illegible]ம் [illegible]லந்தஸ்துக்குவர, எல்லாரும் இப்படிநிலைமாற ஒரே[illegible]வலாக நிரவப்பட்டிருக்கிறார்கள். வியவசாய வகுப்பார் மொத்தத்தில் முன்னிருந்த கேவலநிலைமையிலிருந்து கொஞ்சம் நல்லஸ்திதிக்கு வந்திருக்கிறதாகத் தென்பட்டாலும், மேற்சொன்ன மாறுதல் காரணமாகப் பெரிய பணக்காரர்கள் வரவர அற்றுப்போய் எல்லாரும் சில்லரை நிலசுவான்களாகிப் பெருமுதல்போட்டு நிலத்தைச் சீர்திருத்தச் சக்தியற்றவர்களாய் விட்டபடியால், வியவசாயஜீவனம் காலமாறுதலுக்கும் ஜனவிர்த்திக்கும் தக்கபடி விர்த்தியடையாமல் செய்நேர்த்திபோதாக்குறையால் விளைவுகுன்றி வறுமைப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு செங்கற்பட்டு ஜில்லாக்களிலும், திருநெல்வேலியிலும் மற்றுமுள்ள இடங்களிலும் நிலங்கள்பெரிய குடித்தனக்காரர்கள் வசமிருந்து நழுவிச் சில்லரை சில்லரையாகச் சிறுகுடிகள் வசப்பட்டு முன்னைவிட இப்பொழுது அதிக சமமாக நிரவப்பட்டிருக்கின்றனவென்று டிஸ்திரிக்ட் ரிஜிஸ்திரார்கள் அத்தாக்ஷிபகர்வதை திவான்பஹதூர் ஸ்ரீனிவாசராகவையங்கார் அவர்களே அவருடைய புஸ்தகத்திலெடுத்துரைப்பதைக்காணலாம். இந்த ஜில்லாக்களுக்குச் சொல்லியது மற்ற ஜில்லாக்களுக்கும் அனேகமாய்ப் பொருந்துமென்பதே நம்துணிபு.

திவான்பஹதூர் பி. சென்ஸல்ராவ் அபிப்பிராயம்.

திவான்பஹதூர் பி. சென்ஸல்ராவ் அவர்கள் இதுவிஷயமாய்த் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதிலும் இப்படியே சொல்கிறார். பிரிடிஷ் துரைத்தனத்தின்கீழ் நாம் எத்தனையோ விஷயங்களில் அபிவிர்த்தியடைந்திருந்தும் வர வர நாம் ஏழைகளாய் இந்தியாவறுமையில் மூழ்கிவருகிறதென்கிற முறைப்பாடு அதிகமாயிருக்கிறதென்றும் அப்படியிருப்பதற்கு மூன்றுகாரணங்கள் சொல்லலாமென்றும் கூறுகிறார். அவற்றை அவர் சொல்கிறபடியே கீழேவரைகிறோம்.—"முதலாவது, முன்காலத்தில் ஏராளமான ஐசுவரியம்படைத்து ஜனங்களிடத்தில் மிகுந்தசெல்வாக்கும் அதிகாரமுமுள்ளவர்களாய் விளங்கிய **"பெரியமனிதர்களை"** நாமிப்பொழுது காண்கிறதில்லை. என்னுடைய பாட்டனார் தான் தாசில்வேலையிலிருந்தகாலத்தில் ஒருதடவை கலெக்டர்வந்து வரிகளெல்லாம் வசூலாகவில்லையென்று சினந்துகொண்டு, ஒரு வாரத்துக்குள் 50,000-ரூபாய் வசூல்செய்து அனுப்பாவிட்டால் வேலைபோய்விடுமென்று சொல்லிவிட்டுப் போக, அவருடைய தாலூகாவிலிருந்த ஒரு குடித்தனக்காரர் கிட்டத்தட்ட 50,000-ரூபாயையும் தன் கையிலிருந்து முன்னாடி செலுத்திவிட்டுப் பின்னாடி அத்தாலூகாக் குடிகளிடமிருந்து அத்தொகையை வசூல்செய்து எடுத்துக்கொண்டதாகச் சொன்னார். அத்தாலூகாவிலிருந்த அத்தனை குடிகளும் அனேகமாய் அவரை யண்டினவர்களாகவேயிருந்தபடியால் அப்படிச் செய்வது அவருக்கு சாத்தியமாயிருந்தது. அவ்வளவு ஐசுவரியமும் குடிகளிடத்து அவ்வளவு செல்வாக்குமுள்ளவர்கள் இக்காலத்திலில்லை. குடிகளில் அதிக தாழ்ந்த வகுப்பிலிருந்தவர்கள் கனவறுமையினின்றும் நீங்கி பெரியமனிதர்களை யண்டிப்பிழைத்துவந்ததிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படி கொஞ்சம் நல்லஸ்திதியடைந்ததினால் இம்மாறுதலுண்டாக நேரிட்டிருக்கிறது. நானே தாசில்தாராயிருந்த தாலூகாக்களிலுள்ள கிராமங்கள் சிலவற்றில் இரண்டொரு பெரிய மனிதர்களிருந்து அந்தக் கிராமத்துக் குடிகள் செலுத்தவேண்டிய வரிகளையெல்லாம் அவர்கள் தாமே முன்னால் கட்டிவிட்டு, குடிகள் மகசூலையெல்லாம் கட்டிக்கொண்டு, குடிகளுக்கு ஜீவனத்துக்கு வேண்டிய தானியத்தை மட்டும் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்துவந்ததை நான் பார்த்திருக்கிறேன். இப்பொழுது ஏழைக்குடிகள் அவரவர்கள் செலுத்தவேண்டிய சர்க்கார் வரிகளை அவர்களே நேரில் கட்டிவிட்டு கொஞ்சம் நஞ்சம் மிகுக்கக்கூடியதை அவர்களே யுபயோகித்து லாபமடையக்கூடியவர்களா யிருப்பதால் அப்படிப்பட்ட பணக்காரர்கள் தொகை குறைந்துபோய்விட்டது. இவ்விதமாக முன்னர் சிலரிடத்துக் குவிந்திருந்த செல்வம் தற்காலம் பலரிடத்துச் சிதைந்து விஸ்தாரமாகப் பரவியிருக்கிறது; இப்படிப் பரவியிருப்பதை நம்மிற் சிலர் வறுமையாகவெண்ணி மய

ங்குகிருர்கள். பெருமுதலுள்ள பணக்காரர்கள் அற்றுப்போனதே இத்தேசத்துக்கு ஒரு பொல்லாங்கென்பதை மறுத்துச் சொல்ல வந்தேனில்லை ; ஏனெனில் 1000-பேர்களிடத்தில் 2,000-ரூபாய் பரவியிருப்பதைக் காட்டிலும் ஒரே ஒருவரிடத்தில் 1000-ரூபாயிருந்தால் அதனல் எவ்வளவோ அதிக நன்மைகள் விளையக்கூடுமென்பதை நானறிவேன். பின்னை நான் சொல்லவருவதென்னவெனில் தேசத்தின் மொத்தச் செல்வம் எவ்விதத்திலும் குறையவில்லை யென்பதே. (2) நாம் வரவர வறுமையடைந்து வருகிரு மென்கிற எண்ணமுண்டாயிருப்பதற்கு இன்னொரு காரணமென்னவெனில், நமது ஜனங்களுடைய புத்தி விர்த்தியடைந்திருக்கிறபடியால், படித்தவர்கள் நம்மைவிடச் செல்வத்திலும் நாகரிகத்திலும்மேம்பட்ட ஜாதியார்களின் பழக்க வழக்கங்களை யுட்கொண்டு அவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதனல் தங்கள் வறுமையைத் தங்கள் முன்னோர்களைவிட அதிகமாக வுணர்ந்து வருந்துகிருர்கள். (3) இவையிரண்டையும்விட மகாமுக்கியமான மூன்ருவது காரணம் ஒன்றிருக்கிறது. அது என்னவெனில், நாம் 50-வருஷங்களுக்குமுன்னிருந்ததைவிடத் தற்காலம் மொத்தமாய்ப் பார்க்குமிடத்தில் அதிகநல்ல ஸ்திதியிலிருக்கிருேமென்பது திண்ணமாயினும், பெரும்பான்மையாயுள்ள சாதாரண ஜனங்கள் மகா ஏழைகளாய், அவர்களிலனேகர் அரைவயிற்றுக் கஞ்சிக்கு வழியின்றிப் பாதிப்பட்டினியாய்க் கிடந்துவருந்துகிறவர்களா யிருக்கிறர்கள்—இவர்களுடைய பரிதாப நிலைமையைப் பார்க்கும்போதே ஒருவர் நாம் இதைவிடக் கெட்டஸ்திதியிலிருந்திருக்க முடியாதென்று நினைக்க இடமுண்டாகிறது.”

ம-ா-ா-ஸ்ரீ சென்ஸல்ராவ் அவர்கள் மூன்ருவதாகச்சொல்லும் முக்கியகாரணத்தில் சாதாரண ஜனங்கள் அதிகமாய் வறுமையில்மூழ்கி அரைப்பட்டினியாகக்கிடந்து வருந்துகிருர்களென்னும் விஷயம் மனதில் பதியும்படி அதைப்பின்னு மொருமுறை வற்புறுத்திக்கூறுகிருேம்.

குடிகள் நிலைமையிலுண்டாயிருக்கும் உள் மாறுபாடு.

இப்படியாக தற்காலம் சென்னை இராஜதானியிலுள்ள வியவசாயிகளின் நிலைமையை யுற்று நோக்குங்கால் முன் பணக்காரர்களாயிருந்தவர்கள் வரவரப் பலகாரணங்களால் கொஞ்சம் கொஞ்சமாய்த் தங்கள் நிலத்தை யிழந்துவர, முன் அற்பக்குடிகளாகவும், கேவலம் பயிரிட்டு ஜீவனம்செய்யும் புறக்குடிகளாகவு மிருந்தவர்கள் தங்கள் உழைப்பாலும், செட்டும் சிக்கனமுமாயிருந்து தங்கள் லாபத்தை மிகுத்துச் சேர்த்து வந்ததாலும், மிராசுதாரர்களே கதியாகவிருந்ததை விட்டுக் கொஞ்சம் சுவாதீனம் பாராட்டி சிறுகச்சிறுகக் கொஞ்சம் நிலமும் வாங்கிக்கொண்டு நிலசுவான்களாய் விட்டார்களென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. இம்மாறுதல் இன்னும் நடந்துகொண்டேவருகிறது. ஊரிலுள்ள செல்வம் இப்படிச் சில்லரையாகப் பெரும்பாலாருக்குள் பரவிவருவதால் எல்லாரும் சொற்பஜீவனமுள்ளவர்களாய் பெருமுதல் கிடைப்பது யாரிடத்தும் அரிதாய்விட்டது.

இப்படிச் சில்லரைக்குடிகள் முன்போல் பெரிய குடித்தனக்காரர்களையண்டி வசிக்கவேண்டிய நிமித்தியமின்றித் தங்கள் மட்டில் சுவாதீனம் பாராட்டி வாழ்ந்துவர இடமுண்டானது ஒரு விதத்தில் ஜனக்ஷேமத்துக் கனுகூலமாயிருப்பினும் அதனல் பிரதிகூலமுமில்லாமற் போகவில்லை.

அம்மாறுபாட்டாலுண்டாயிருக்கும் ஓர் பிரதிகூலம்.

முன்னுளில் கஷ்டகாலங்கள் நேர்ந்தபொழுது பணக்காரர்கள் தங்களையண்டிய ஏழைகளுக்குக் கடன்முதலானது கொடுத்துதவி யாதரித்துவந்தார்கள். இப்பொழுது ‘எல்லாரும் சமம்’ என்கிற ஏற்பாடு மேலுக்கு வந்துவிட்டதால் முன்போல் பணக்காரர்கள் ஏழைகளுக்கு உற்றவிடத்துதவிசெய்யக் கடமைப்பட்டவர்களென்றுணராமல் ‘அவனவன்பாடு அவனேடே’ என்று அவர்களை ஆபத்துக்காலங்களில் தத்தளிக்கவிட்டுவிடுகிருர்கள். இப்படிப்பட்ட காலங்களில் ஏழைகளுக்குப் பணமில்லாமல் எக்காரியமுமாவதில்லை யாதலாலும், அவர்களிடத்து தங்களுக்குச் சொந்தமான சொற்ப நிலபலன்களைத் தவிற வேறு கைம்முதலில்லாக் கொடுமையாலும், கடன் வாங்குவதைத்தவிற வேறு வழி தோன்ருமல் கடன் கொடுக்கும் செட்டி, கோமுட்டி, அல்லது கிராமத்திலுள்ள பணக்காரக் குடிகளிடம் சென்று அவர்கள் இட்ட கட்டுப்பாட்டுக்குள்பட்டு அவர்கள் சேட்கும் வட்டி கொடுத்துக் கடன் வாங்கும்படி நேரிடுகிறது.

அதனல் விளையும் அவதி.

கடன் வாங்கப் புறப்பட்டபோதே ஏழைக்குடிகளுக்கு கிரகசாரம் கிட்டிவிட்டது. அதிக வட்டிக்காசைப்படும் கடன்காரன் கையிலகப்பட்டுக்கொண்டார்களோ அத்துடன் அவர்களைப் பிடித்தது சைத்தான். அப்புறம் எட்டாமிடத்தில் ஏழரைநாட்டுச் சனியன்வந்தாற்போலதான் ; ஆள் பிஞ்சினல் அதிர்ஷ்டசாலிதான். மற்றப்படிக்குக் கட்

னில் மூழ்கின ஏழைக்குடிகள் கடைத்தேறி உறுப்பட்டார்கள் என்று சொல்வது கஷ்டமே. இந்த அவதியிலிருந்து அவர்களை விடுவிக்கத்தான் கவர்ன்மெண்டார் என்னவழி செய்யலாமென்று அனேக வருஷ காலமாய் யோசித்து வருகிறார்கள். இவ்விதத்தில் ஏழைச்குடிகளுக்கிருக்கு மிடையூறுகளையும் அவர்களைககடைத்தேறச் செய்வதற்கேற்ற வழிவகைகளையும்பற்றிப் பின்னர் தொடர்ச்சியா யெழுதி வருவோம்.

C. V. S.

பாட்டு.

*ஒரு நற்றாயின் புலம்பல்.

[1885-வருஷத்திடையில் உன்னதஸ்தானத்திருந்த ஒரு குடும்பத்தில் பிறந்த சூடாமணியம்மாள் அத்தகையான மற்றொரு குடும்பத்துள் விவாகம் செய்யப்பெற்று விவாக பூர்த்தியானவுடன் இறந்த சோகசாந்திக்காக அக்காலம் பாடிய கலித்தாழிசைகள்.]

1. அம்மாவென் கண்மணியே அழகே சூடாமணியே
   ஆனந்த வாரிதியே ஆராத பேரமிர்தே
   எம்மையுமோர் பொருளாக்கி யினிய திருப் பாற்கடல்விட்
   டெங்கள்மனை வாழவென எழுந்தருளு மிலக்குமியே.

2. அன்பே நின்னுயிராக அழகே நின்னுடலாக
   ஆனந்தமே குணமா அவதரித்த பைங்கிளியே
   துன்பேதும் போக்கடிக்கும் சொல்லமிர்தம் தந்தெமக்கு
   சுவர்க்கமிந்த வுலகளிக்கத் தோன்றிய சூடாமணியே.

3. மந்தநகை நீங்காத வாய்மலரும் வார்குழலும்
   வாஞ்சைநட மாடுகின்ற மறுவறுநன் மதிமுகமும்
   சந்தசமும் ஆனந்தத் தண்விழியும் பண்மொழியும்
   தந்தமரர் சுகம்காட்ட வந்தஎஞ் சூடாமணியே.

4. பொன்னுலகும் தாமரைநற் பூவிதமும் வீண்கிடக்கப்
   பூமியினில் எம்மனைநீ புகுந்தருளும் அந்நாளில்
   கன்னலெனக் கால்குடைந்து கதறியழும் குரல்கேட்டுக்
   களித்தவிதம் நீயறியாய் கண்ணே சூடாமணியே.

5. பாஞ்சால னும்ஜனகப் பார்த்திவனும் முகம்கவிழப்
   பாங்காக நீகவிழ்ந்து தவிழ்ந்துவிளை யாடுதலை
   வாஞ்சையுடன் பார்த்தவெங்கள் மகிழ்ச்சியொரு கணமெனினும்
   மறக்கும்வகை யினியுண்டோ வழங்காய் சூடாமணியே.

6. மனமுழைந்து நொந்துமனை வந்தஉன்றன் தந்தையினார்
   வாசலிடை †சாரட்டில் வந்தகுறி கண்டோடி
   தனதிரண்டு கால்தழுவித் தாவெனக்கு முத்தமெனும்
   சதுர்மறக்க ஒருமருந்து தாராய் சூடாமணியே.

* These lines were composed in 1885 when Dewan Ramaiengar lost his beloved daughter, married to Dewan Rangacharlu's son in Mysore soon after consummation of the marriage.

† Carriage.

7. மாயனார் பாலாழி, மறிதிரையோ டொக்காண
வந்ததென எத்திசையும் மாதரிய ஒலிபரக்க
* பீயனுதடவும் உன்றன் பெய்வளைக்கை யான்மறக்க
பெரியதொரு மந்திரமும் பேசாய் சூடாமணியே.

8. எழுதிறத்தில் நூலிசைத்தே யினியகனி காய்பூவென்
றியல்பான சித்திரங்கள் எத்தனையோ நெய்துவைக்கும்
அழகுபொழி சிறுவிரலின் அருமையினை யானயர்க்க†
அரியவர மொன்றுமெனக் கருளாய் சூடாமணியே.

9. மதிபெரிய உனதுபிதா மந்திரா லோசனையில்
மாதுரியச் சிற்றுண்டி மறந்திருப்ப தைத்தெரிந்து
புதியவிசை தூதாசப் போயுணர்த்த யாழ்தடவும்
புத்தியினை யான்மறக்கப் போமோ சூடாமணியே.

10. தாங்குதிரைச் சாரட்டில் சவ்வாரி போகவெழச்
சாரதியை நீகூவித் தனித்தழைத்தெம் அப்பாவைப்
பாங்காக வேபார்த்துப் பத்திரமா வாவென்று
பலதடவை சொல்வதெல்லாம் படிறோ சூடாமணியே.

11. உன்னுடலம் விடுமொளிகண் டுலகோர்கண் கூசாமல்
உன்னவய வங்களெலாம் ஒளிமணிக ளால் மறைத்து
மன்னவர்தம் பேரவையில் மாலையிரு தோள்புரள
மணக்கோலங் கொண்டகொலு மறவேன் சூடாமணியே.

12. பெருக்கான அன்பென்னும் பெருந்தெய்வம் வாழுதற்குப்
பிரமாவும் உன்னுடலம் பேரழகி னால் வகுத்தான்
திருக்கோயி லிடிந்ததெனச் செப்புகின்ற தப்புமொழி
தீவினையேன் நம்பும் திறமோ சூடாமணியே.

13. மணக்கோலம் மேற்கொண்டு மணவறையிற் போனமகள்
மறைந்தா ளென உரைக்கும் வம்புச்சொல் நம்புவதார்
கணக்காக வைத்தபந்தும் செப்புமிலை யெனக்காட்டும்
கண்கெட்டி வித்தையெங்கே கற்றாய் சூடாமணியே.

14. நீயுவந்து முகந்தமலர் நின்னுயிர்ப்பின் மகிமையினால்
நிலைபெற்று வாடாமல் நிற்குமெனில் என்ஜீவ
நாயகியே நீயுமரித் தாயென்னும் பேய்வார்த்தை
நாளொரு போதுமினி நம்பேன் சூடாமணியே.

15. வானுலகோ அரவுலகோ மலரயன்றன் பொன்னுலகோ
மண்ணுலகோ நண்ணரிய வைகுந்தப் பேருலகோ
போனவிட மேதோநீ போயொளித்த வாறெதுவோ
பொன்னணங்கே யின்னதெனப் புகலாய் சூடாமணியே.

† அயர்க்க = மறக்க.

16. அழைத்தாலும் யான்கதறி யழுதாலும் ஓர்வார்த்தை
யானுலும் நீயுரையாய் அன்பிருக்கு மாறிதுவோ
பிழைத்தபிழை யுண்டானுல் இன்னதெனப் பேசாயேல்
பெற்றமனம் உற்றதுயர் போமோ சூடாமணியே.

17. எத்தனையோ செய்ததவம் எத்தனையோ நாள்விரதம்
எத்தனையோ பாடுபட்டோம் இப்படியுன் றனைக்காண
சித்தம் தடிக்கநீ செய்ததுயர் உன்னுடனே
செத்தாலும் தீராது திருவே சூடாமணியே.

18. உனதன்பும் எனதன்பும் உள்ளபடி மெய்யானுல்
ஓர்தடவை யானுலும் ஓர்வார்த்தை பேசாயோ
மனமெரிய என்வயிற்றில் வைத்ததீ அம்மாநான்
மாண்டாலும் மாருது மகளே சூடாமணியே.

19. குற்றமினி யாதுமிலை குறைவுமிலை யென்றுன்னைக்
கோதாட்டிச் சீராட்டிக் கொண்டாடி யானிருக்க
பெற்ற வயிற்றிடைநீ பெருநெருப்பை வைத்தனையே
பெற்றதனுல் உற்றதிந்தப் பேருே சூடாமணியே.

20. இன்னமொரு காலுன்னை என்னெதிரிற் காணுமல்
என்னுடலம் தீப்படினும் என்னெஞ்சம் வேசாது
அன்னமே யாரமிர்தே அன்புனக்கு முண்டானுல்
ஆசைமுகம் நீகாட்டி யருளாய் சூடாமணியே.

21. இந்தவண்ணம் தாய்கதற எதிர்விசும்பில் தேவர்கணம்
எத்திவரப் பல்கோடி இளமருக்கர் உதித்தாற்போல்
சுந்தரச் சூடாமணிதன் சுயவடிவம் தான்பூண்டு
தோற்றினுள் லக்ஷிமியும் சொல்லினு ளிம்மொழியே.

22. அம்மாவென் னன்புடைய அன்னுய் அழுதலொழி
யாராக வென்னை நினைத்தழுகின்ருே யறியாமல்
சும்மா விருவுனக்குச் சொல்கின்றேன் என்னுண்மை
துக்கமெலாம் வீண்அவஸ்தை தூரவிடு வின்றே[illegible]

23. பண்டுநீர் நமைவிரும்பிப் பலதவங்கள் செய்தமைய[illegible]
பாரிடைநும் மகளாகப் பரிவுடனே வந்துதித்[illegible]
அண்டர்களும் கண்டறியா ஆனந்தம் தந்தருளி
ஆண்டுபென் னிரண்டுமுங்கள் அருமனையில் வ[illegible]

24. உங்களைப்போல் அரியதவ முள்ளோர்வீ ட[illegible]
உறைவேமோ நீரிதனை யுள்ளபடி யேயு[illegible]
சங்கையறுத் தங்கள்மனத் தாபமெலாம்[illegible]
தக்கவகை* நும்மாசை தவிர்த்திடு[illegible]

* புருஷசந்ததிதந்து எ[illegible]

உபாத்தியாயர் பக்கம்.

பள்ளிக்கூடத்தின் இருப்பிடம்.

(BY A LICENTIATE IN TEACHING.)

பள்ளிக்கூடம் வைக்குமுன் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் அதனிருப்பிடம். அது பார்வைக்கு ரமணீயமாயும் சுகாநுகூலமாயு மிருக்க வேண்டும். இதைப் படித்தவுடன் 'ஆம் நிச்சயமாய் அப்படிப்பட்டவிடத்தில்தான் பள்ளிக்கூடம் கட்ட வேண்டும்' என்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள் போல நமக்குத்தோற்றுவதாயிருந்தாலும் பார்க்கப் போனால் இந்தவிஷயங்கள் அனேகவிடங்களில் குறைவுதான். கடைத்தெருவுகளின் மத்தியிலும் இன்னும் வீடுகள் நெருக்கமாயிருக்கும் வீதிகளிலும் நாம் எத்தனை திண்ணைப் பள்ளிக்கூடங்களிருப்பதைப் பார்த்திருக்கிறோம். "பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கும் படிப்பல்லவா நம்முடைய பிள்ளைகளுக்கு வரவேண்டியது முக்கியம், சுற்றுப்பக்கம் எப்படியிருந்தால் நமக்கென்ன கவலை" என்று சிலர் நினைப்பார்கள். இது சரியல்ல. சுவரிருந்தாலல்லவோ சித்திரம் எழுதலாம். அதுபோல சரீரம் திருடமாயிந்தாலல்லவோ மனப்பயிற்சிக்கு ஆதாரமுண்டு. கடைவீதி முதலான நெருக்கமான இடங்களில் பள்ளிக்கூடம் வைத்தால் அதில் சேரும் பிள்ளைகளுக்கு நல்ல காற்றில்லாமல் அவர்கள் தேகம் கெட்டுப்போகும்.

தவிற, எப்பொழுதும் சுற்றுப்பக்கம் சந்தடியாயிருக்குமாசலால் பிளளைகளுக்கு படிப்பில் கவனம்வைக்க ஸௌகரியமில்லாமற்போகும். ஆகையால் பள்ளிக்கூடம் கட்டுமிடம் முக்கியமாய் ஆரோக்யமா[illegible]க்கவேண்டும். அப்படியிருப்பதோடும் கூட பார்வைக் [illegible] அழகுள் [illegible] அழகாயிருக்கவேண்டும். கண்ணைக் கவரும் [illegible] வெளியைப் பார்ப்பதினாலேயே மனதுக்கு ஒரு விதம் [illegible] லமுண்டாகி பிளளைகளுக்கு ஆநந்தத்தைக் கொடுக்கும். பள்ளிக்கூடத்தைச் சுற்றி விசாலமான வெளிநிலம் (Compound) இருப்பது மிக அவசியம். சில பள்ளிக்கூடங்களுக்கு கொஞ்சமேனும் 'காம்பௌண்டு' கிடையாது. பள்ளிக்கூடம் வைத்து அதினால் இலாபம் பெறவேண்டுமென்று அதை வியாபாரத்தொழில் போ[illegible] வெண்ணும் அனேகர் ஏதோ ஒரு குடியிருப்பு வீட்[illegible] வாடகைக்கு வாங்கி அதில் பிள்ளைகளைச் சேர்ப்பிக்க முயலுவதுண்டு. அந்த வீடுகளைச்சுற்றி வெளிநிலம் [illegible] ஏது. சில இடங்களில் வெளிநிலமிருந்தாலும் அதை [illegible] வலையுடன் பாதுகார்த்து வராததினால் புல்பூண்டுகள் [illegible] ஏராளமாய் வளர்ந்து நடப்பது கஷ்டமாயும் பார்க்க பயங்கரமாயும், சில இடங்களில் சேறும் சதுக்கலுமாயும் மேடு பள்ளங்களாயுமிருப்பதுண்டு. அப்படிக்கில்லாமல் பார்வைக்கு நேர்த்தியாயிருக்கும்படி செய்வது தலைமை உபாத்தியாயரின் முக்கிய கடமைகளில் ஒன்று. ஆரம்பத்தில் அதை நேர்மையாய் வைப்பதுடன் பிறகு அதன் அழகைப் பிள்ளைகள் குலைக்காமலுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது. என் பள்ளிக்கூடத்தைச்சுற்றிய வெளிநிலத்தைப் பற்றியிவ்வளவு எடுத்துச்சொல்ல வேண்டுமென்றால், அதனால் விளையும் லாபங்கள் அனேகம்? அவற்றுள் சில்வற்றை யெடுத்தெழுதுவோம்.

முதலாவது இலாபம் பிள்ளைகள் சரீரம் சௌக்கியப்பட்டு திருடப்படுதல். சிறுபிள்ளைகளுக்கு தங்கள் இஷ்டப்படி கைகால்களுக்கு வேலைகொடுத்து விளையாடுவதில் மிகவும் பிரியமாயிருக்கும். இது இல்லாவிட்டால் உற்சாகமில்லாமற்போவது மாத்திரமல்லாமல் தேகாரோக்யமும் குறைந்துபோகும். ஒரேயிடத்தில் சேர்ந்தாற்போல கொஞ்சநாழிகை யிருக்கச்செய்தால் அவர்களுக்கு படிப்பின்பேரில் கவனம் தப்பிப்போய் ஒன்றும் தோற்றாதவர்களாயிருப்பார்கள். அப்படி யடைபட்டிருப்பவர்களுக்கு சுத்தமான வாயுவு வேண்டியது அவசியமல்லவா. அதற்கு விசிராந்தியாய் உலாவிவரும்படி வெளிநில மில்லாமற்போனால் எவ்வளவு அஸௌகரியமாயிருக்கும். பெரியவர்களுக்குக்கூட சற்றுநேரம் ஒருவிஷயத்தை கவனமாய் ஆலோசித்துப் பார்த்தபிறகு அதனால் ஒரு விதக்களைப்புண்டாகி யாதொன்றும் தோன்றாதிருக்கும் சமயத்தில் சற்றுவெளியில்சென்று நல்லகாற்று வீசுமிடத்திற் போய்த்திரிந்துவந்தால் எத்தனை ஆநந்தமாயிருக்கிறது. ஆகையால் சிறுபிள்ளைகள் விஷயத்தில் வெளிநிலத்தின் அவசியத்தைப்பற்றி வேறு சொல்ல வேண்டுவதில்லை.

இரண்டாவது இலாபமென்னவென்றால் பிள்ளைகளுடைய நடவடிக்கை சீர்திருத்தப்படுதல். வகுப்பில் பாடம் நடக்கும்பொழுது எல்லாப் பிள்ளைகளும் அமெரிச்கையாய்த் தானிருப்பார்கள். ஆகையால் அவ்விடத்தில் ஒவ்வொரு பிள்ளையின் குணம் நடவடிக்கை யிப்படிப்பட்டதென்று வெளிப்படாது. அது வெளிப்படுமிடம் ஸ்கூல் 'காம்பௌண்டு' தான். பள்ளிக்கூடம் கலைந்து பிள்ளைகள் கஸரத்துவிளையாட்டு முதலியவைகளுக்காக காம்பௌண்டில் சேர்ந்திருக்கும் பொழுதுதான் எவன் நல்லவனென்பதும் எவன் துஷ்டனென்பதும் எல்லாருக்கும் நன்றாய் வெளிப்படும். அந்த சமயத்தில் பிள்ளைகளை கவனித்து அவர்களுடைய நடவடிக்கைகளைச் சீர்திருத்துவது உபாத்தியாயரின் கடமை.

சிறுவர்க்கானபக்கம்.

[விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டது.]

பேராசைபிடித்த சிலந்தி.*

ஒரு சிலந்திப் பூச்சியானது தன் குஞ்சுகளோடு வெளியில் வந்து, அவைகளுக்கு பட்டுநூற்கவும், ஒரு கிளையிலிருந்து மற்றொன்றுக்கு ஊஞ்சலாடிப் பாயவும், மேலேயிருந்து நூல் நூற்றுக்கொண்டு கீழேயிறங்கவும், பிறகு அந்நூல் வழியாகவே மேலேயேறிச் செல்லவும், இன்னும் சிலந்திகளுக்குத் தெரியவேண்டிய பல எத்துக்களும் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தது. காலை முதல் இப்படி கஷ்டப்பட்டுத் தன் குஞ்சுகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொண்டுவருகையில் திடீரென்று வானம் கறுத்தது. படபடவென்று மழைபெய்ய ஆரம்பித்தது. வானம் கறுக்கவே, தாய்ச்சிலந்தி "என் குஞ்சுகளே மழை வருகிறது எல்லாரும் ஓடிப்போய் கூட்டுக்குள் சேருங்கள்" என்று சொல்லித், தன் குஞ்சுகளெல்லாம் தனக்கெதிரில் இருககின்றனவா என்று அதன் எட்டுக் கண்களையும் விழித்து சுற்றுமுற்றும் பார்த்தது.

தாய்ச்சிலந்தியின் குரலைக்கேட்கவும் சின்னச் சிலந்திகளெல்லாம் பழுப்பு வர்ணமான கோடுபோட்ட தங்கள் பட்டுச்சட்டைகள் மழையில் நனைந்து விடப்போகிறதென்று அவற்றின் எட்டுக்கால்களாலும் தத்தித் தத்திக்கொண்டு வெகு விரைவாய்க் கூட்டை நோக்கி ஓடின. லக்ஷ்மியென்னும ஒரு சின்னச் சிலந்திமட்டும் ஒரு கோரைப்புல்லின் நுனியிலுட்கார்ந்துகொண்டு அதைவிட்டுக் கீழே இறங்கி வரமாட்டாமல் "அம்மா, அம்மா" என்று கூவியழுதது.

ஒவ்வொரு நிமிஷமும் மழை கொட்டும்போலிருந்ததால் தாய்ச்சிலந்தி தன குஞ்சைப்பார்த்துக் கோபித்துக்கொண்டு "சீ, அழாதே. நான் நூலையிழுத்துப் பிடித்துக்கொள்கிறேன்: கோரையை விட்டுவிட்டு நூல்வழியாக இறங்கியோடிவா?" என்று வெடுக்கெனச்சொல்லிற்று. கோரையிலிருந்த சின்னச் சிலந்திகீழேயிறங்கிவரப் பலதரம் யத்தனித்தும் கோரையைக் கைவிடத் துணியாமல் அங்கேயிருந்து பயத்தால் உடம்பு நடுங்க நி[illegible]றது. குளிக்கப்போய் ஜலத்துக்கு பயந்து கரைய[illegible] நிற்கிறவனைப்போல் அந்தச் சின்னச் சிலந்தி பயந்[illegible] பயந்து அந்தக் கோரையிலேயே நின்று நடுங்கிற்[illegible] கீழேயிருந்த தாய்ச்சிலந்தி பின்னும் கோபித்[illegible] கொள்ளக், கடைசியில் கோரையை விட்டுவிட்[illegible] நூலைப்பிடித்துக்கொள்ளத் தவறிப்போனமையால் பொத்தென்று தாய்ச்சிலந்தியின் கரத்தில் விழுந்[illegible]து. தாய்ச்சிலந்தி தன் கடைசிக் குழந்தையைக் கூட்டிற்குள் தூக்கிக்கொண்டு துரைய ஓடுகையில் "ஏனடி இலக்ஷ்மி, என்ன அப்படி விழுந்தையே? எத்தனைதரம் நூலைவிடாமற் பிடித்துக்கொள் என்று சொல்லியிருக்கிறேன்" என்று கோபித்துக்கொண்டது.

இலக்ஷ்மி அதற்கு ஒன்றும் பதில்சொல்லவில்லை. நூலைப்பிடித்துக்கொள்ளத் தவறிப்போய் பொத்தென்று விழுந்ததற்குக் காரணம் அந்தச் சின்னச் சிலந்திக்கு நன்றாய்த்தெரியும். கோரைப்புல்களுக்கு நடுவில் ஒரு பெரிய செத்த புழு ஒன்று அதற்கு அகப்பட்டது. இலக்ஷ்மிக்குப் பேராசை பிடித்திருந்ததால் அதைப்பற்றித் தன் தமயன்கள் தமக்கைகளான மற்றச் சின்னச் சிலந்திகளுககு ஒன்றும் சொல்லாமல் தானே எல்லாவற்றையும் தின்றால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று மனசுக்குள் நினைத்துக்கொண்டு சந்தோஷப்பட்டது.—தின்னவாவது, அப்புழுவின் இரசத்தை யுறுஞ்சிக் குடிப்பதுதான். ஏனெனில் சிலந்திகள் நம்மைப்போல் எதையும் சாப்பிடுவதில்லை, இரசத்தைத்தான் உறுஞ்சிக் குடிக்கும்—இப்படி எல்லாவற்றையும் தானே தின்னலாமென்று பேராசைகொண்ட இலக்ஷ்மி உடனே ஒருவருக்கும் தெரியாமல் தன்னை ஒளித்துக்கொண்டு அந்தச் செத்த புழுவின் ரசத்தை உறுஞ்சி உறுஞ்சிக் குடிக்க ஆரம்பித்தது. குடித்துக் குடித்து வயிறு நிரம்பியும் நிற்கவில்லை. இன்னும் அதிகமாய்க் குடித்ததால் அதற்கு தலை கிறுகிறுத்து உடம்புக்குக் கெடுதல் வந்துவிட்டது. இதனால்தான் அது மற்றச் சின்னச் சிலந்திகளைப்போல் நூல்வழியாக இறங்கிவரமாட்டாமல் தொப்பென்று தாயார்மேல் விழுந்தது. தாய்ச்சிலந்திக்குச் சரியாக துரிதமாய் கூட்டுக்குள் ஓடச்சரிப்படாமல் உடம்பு கனத்துத் தள்ளாடினதும் இதனால்தான்.

* We are indebted to Mrs. I. Brander for the original copy of this Nature Story, of which this is an adaptation. The சிலந்தி here refers to trap-door spiders which though rare in India, we learn, yet exist and are to be found in Madras.

...ப்படியோ தாயும் பிள்ளையுமாகச் சீக்கிரம் கூட்
...தள் வந்துசேர்ந்தார்கள். அந்தச் சிலந்திக்கூடு
...யில் நோண்டப்பட்டு வாசலில் சக்கரமான
... ஒன்று போடப்பட்டிருந்தது. அது சிலந்திப்
...டினால் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. இதெல்
...ம் முழுக்க தாய்ச்சிலந்தி தானே செய்தவேலை.
...ன்னும் பகைவருக்குப் பயந்து தன் வீட்டு வாசல்
...லாருக்கும் தெரியாதபடி அதைச் சுற்றிப் பாசி
...ம் புல்லும் வைத்துப்படரவிட்டு தன் வீடு தெரியா
...மல் சுற்றியுள்ள புற்பூண்டுகள் போலவே அவ்விட
...ம் தோன்றும்படி செய்திருந்தது. தாய்ச்சிலந்தி சின்னச் சிலந்தியுடன் அவசரப்பட்டு ஓடிவந்து வாசலில்வந்து சேர்ந்ததும் உள்ளேயிருந்த சின்னச் சிலந்திகள் பல சேர்ந்து கூட்டின் வாசற் கதவைத் தூக்கித்திறந்தன. திறக்கவும் தாய்ச்சிலந்தியும் இலக்ஷ்மியும் கூட்டுக்குள் போய்ச்சேர்ந்தார்கள். அவர்கள் உள்ளே நுழைய மழையும் தாரைதாரையாய்க் கொட்ட ஆரம்பித்தது. ஆகையால் அவர்கள் மழைக்குத் தப்பினது அருமையாகவே முடிந்தது.

இவர்கள் உள்ளேபோகவும் சிலந்திக் குஞ்சுகளிலெல்லாம் மூத்ததான பார்வதி தான் பெரிதாக வளர்ந்து விட்டதால் தன்மேலிருந்த மேற்போர்வை நெருக்கமாயிருக்கிறதென்று அதைக் களையவேண்டி தோலுரிக்கும் வேலையிலிருக்கக் கண்டார்கள். பார்வதி தன் வேலையைப்பார்த்துக்கொண்டே "இலக்ஷ்மிக்கு என்ன உடம்பு? அவள் என் அவ்வளவு மெல்ல வந்தாள்?" என்று சேட்டாள். இது நிற்க. பார்வதி தோலுரித்த விதம் எப்படியென்று கேட்கலாம். அது அவளுக்கு வெகு லேசாயிருந்தது. வாயிலிருந்து கூட்டின் மூலையிலொரு பக்கத்தில் கெட்டியான நூல் ஒன்று நூற்றபின் அதை வாயால் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தொங்கினாள். அவள் தேகத்தின் முன் பக்கத்திலிருந்த தோல்வெடித்தது. பிறகு பின் பக்கத்திலிருந்த தோலும் வெடித்து மேலேயிருந்து நழுவிவிழுந்தது. அதன்மேல் மேலேகட்டின நூலைக் கெட்டியாய் வாயினால் கௌவிப் பிடித்துக்கொண்டபடி தன் எட்டுக்கால்களையும் பலமாய் உதைத்துக்கொள்ள அந்தச் சட்டை சாலிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிட்டது. இது நிற்க.

பார்வதி இலக்ஷ்மியைப் பற்றிக்கேட்ட கேள்விக்கு தாய்ச்சிலந்தி ஒன்றும் பதில் சொல்லவில்லை. தன் குழந்தைகளுக்குச் சாப்பாட்டுக்காக ஒரு புழுவைத் தயார்செய்துகொண்டிருந்ததால் அந்தவேலைமும்மரத்தில் இலக்ஷ்மி கேட்டகேள்விக்கு பதில் சொல்லத் தோன்றவில்லை. லக்ஷ்மி யென்னும் சின்னச் சிலந்தி முரண்டுகொண்டு ஒரு மூலையிலுட்கார்ந்திருந்தது. அதற்கு கோரையில் விட்டுவந்த புழுவின்பேரிலே ஞாபகம்: தான் திரும்பிப்போய் இன்னுமொருமுறை விருந்துண்ணலாமென்று விரும்பிக்கொண்டிருந்தது. மற்றச் சிலந்திகளோடு லக்ஷ்மி சாப்பிடவில்லை. தனக்குப் பசிக்கவில்லை, சாப்பாடு வேண்டாமென்றுவிட்டாள். மழைவிட்டதும் மெல்ல ஊர்ந்துபோய் பழைய இடத்திற்குவந்து அங்கே பாக்கியாக விட்டுப்போன புழுவின் இரசத்தை உறிஞ்சினாள், உறிஞ்சினாள், அப்படியே உறிஞ்சினாள். கடைசியில் உறுஞ்சக்கூட சக்தியில்லாமற்போய் அங்கேயே உடம்புக்கு வந்துவிட்டது. அங்கேயிருந்து வீட்டுக்குக்கூட நடந்துபோக முடியவில்லை. அப்புறம் தாய்ச்சிலந்திவந்து லக்ஷ்மியை மறுபடியும் கூட்டுக்குள் தூக்கிக்கொண்டுபோய் அங்கே அவள் உடம்பை சரிப்படுத்துவதற்காக ஏதோ கசப்பான மருந்து கொடுத்தது. வெகுநேரம் லக்ஷ்மி உடம்பு வருத்தம் பொறுக்கமாட்டாமல் அழுது கஷ்டப்பட்டாள். இவ்வளவு கஷ்டப்பட்டு அழவே அவளுக்கு அப்படி உடம்புக்கு வந்ததேன் என்று விசாரித்தார்கள். அதன்மேல் உண்மை வெளிப்பட்டது. அவள் பேராசை பிடித்து எல்லாப் புழுவையும்தானே வயிறு புடைக்கத் திருட்டுத்தனமாய்த் தின்னதெல்லாம் வெளிவந்தது. அவள் தாயார் அவளை யிடித்துப் புத்திகூறி இனிமேல் அப்படி பேராசைப்பட்டுக் கண்டதையெல்லாம் தின்னாதேயென்று கேட்டாள். லக்ஷ்மியும் அழுதுகொண்டு பேராசைப்பட்டதினால் பிராணனுக்கே வந்ததென்று உணர்ந்து இனி அத்தீக்குணத்தைக் கட்டோடே விட்டுவிடுவேனென்று வாக்குத்தத்தம் செய்தாள்.

BOOKS RECEIVED.

We acknowledge with thanks the receipt of following books and publications sent to us, for review or notice in the *Viveka Chintamani*.

Rakshanya Yathrikum.—A Tamil Poetical Work based on the story of the Pilgrim's Progress of John Bunyan, By H. A. Krishna Pillay of Palamcottah.

The "Century Magazine" and "St. Nicholas, for Young Folks," for January 1895 from Messrs. T. Fisher Unwin, Publishers, London. Elsewhere will be found an advertisement concerning these Magazines to which we call the attention of our readers.

The Standing Orders of the Board of Revenue with important Revenue Acts—in Tamil. Very important to Village Officers. Price Rs. 3. Can be had of the Secretary D. K. Agency, at reduced rate for one month only.

We have also received the *Monist* for the first Quarter of 1895, the *Light of the East* for January and the *Hand and Eye* for January which appears in a new garb, and in a more handy form, with great improvements in its contents. The yearly subscription of the *Hand and Eye* as it is now fixed is 4s. 6d. post free.